பாலசுந்தரம்

அல்லது

புலியின் கொடுமை.

T. S. ஶ்ரீபால்.

ஸ்ரீ

பாலசுந்தரம்

அல்லது

பலியின் கொடுமை.

இயற்றியவர்,

திருவாளர் T. S. ஸ்ரீபால்

சொற்பொழிவாளர்,

தெ. இ. ஜீவரக்ஷா பிரசாரகசபை

வெளியிடுவோர்:

தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரகசபை

436, தங்கசாலை வீதி,

சென்னை:

1937.

காபிரைட்.]

[விலை அணா

Printed at
CHANDRA PRINTING WORKS,
122, China Bazaar Road Madras.

INTRODUCTION

BY

RAO SAHIB

N. C. RANGASWAMY IYENGAR

ASSISTANT SECRETARY,

...for the Prevention of Cruelty to Animals.

...e been asked to write an introduction ... T. S. Sripal's "**Balasundarsm**" or ...**vil of Animal Sacrifices**". Having been connected for over quarter of a century with the Society for the Prevention of Cruelty to Animals, nothing could give me greater pleasure than complying with the request of my friend Mr. Sripal. It is a fact universally known that in this ancient land of "AHIMSA", in the name of Religion, there are several kinds of Animal Sacrifices that are being resorted to involving untold suffering and misery to hundreds and thousands of dumb animals. No civilisation can be said to be perfect which does not wipe out this living scandal. The problem of eradicating this evil or at any rate of mitigating the sufferings of animals as much as possible is fraught with considerable difficulties of a highly controversial character. It must be the

aim of a cultured Society to formulate public opinion in this regard and I cannot think of a more effective method of reaching the ears of the masses than the stage and Mr. Sripal whose excellent work in the South Indian Humanitarian League for over seven years is well kn[illegible] has to be congratulated on his idea of d[illegible] sing this aspect. The idea is novel, [illegible] chosen is interesting and instructiv[illegible] dictum appropriate. I have no doub[illegible] production will command the admiratio[illegible] public and help to consolidate strong pu[illegible] opinion against this inhuman phase of man's activities and to remove the blot upon man's career in this world. I wish Mr. Sripal all success in his enterprise and would request him to contribute more such useful productions.

S. P. C. A.
Vepery,
MADRAS.
12th Feb. '37.

N. C. Rangaswami.

முன்னுரை.

சென்னை தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரகசபை 1926-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. குஜராத்திலிருந்து சென்னைக்கு விஜயம் செய்திருந்த பெருந் தவ [illegible]ஷ்டரும் சகலமத தத்துவங்களையும் கற்றறிந்தவரு[illegible] ஜைனாசார்ய கம்பீர விஜயாஜி சுவாமிகளின் [illegible]ன்பேரில் சென்னை சௌகார்பேட்டையி[illegible] [illegible]னர்களும் மற்ற வகுப்பினர்களும் பொரு[illegible] [illegible]திறக்கப்பட்டது. அந்நாள் முதல் இச் [illegible] தமிழ்நாட்டில் அரிய தொண்டாற்றிவரு[illegible] அவ[illegible] [illegible]கண்டு போற்றாதார் இல்லை. இச் சபையில் [illegible]தொண்டாற்றி வரும் அடியேன் உயிர்ப் பலியையொழிக்க பலவகையாலும் பிரசாரம்செய்து வருவதில் நாடக மூலமாகவும் மக்களை சன்மார்க்கத்தில் திருப்ப வேண்டி 1932-ம் வருஷத்தில் இந்நாடகத்தை எழுதலானேன். அப்பொழுது சென்னையில் பல நாடகங்களை நடத்திவந்த "இளமை இந்திய சங்க (Young India League) அன்பர்கள் விக்டோரியா பப்ளிக் ஹாலிலும், ராயல் தியேட்டரிலும், பெரியபாளையத்திலும் பலபேரறிஞர்களின் தலைமையில் வெகு விமரிசையாக இந்நாடகத்தை நடித்துக் காண்பித்தார்கள். நாடகத்தையும் நடிகர்களின் திறமையையும் பலரும் புகழ்ந்துபோற்றினார்கள். பலர் தங்களிடமுள்ள மூட பழக்க வழக்கங்களினின்றும் மீண்டு சன்மார்க்கரானார்கள்.

இவ்வாறே நம் தமிழ்நாட்டில் ஆங்காங்கு உள்ள ஜீவகாருண்ய சங்கங்களும், சீர்திருத்தம் விரும்பும் அன்பர்களும் இந்நாடகத்தைப் பயின்று நடித்திவர

லானார்கள். திருச்சியைச்சேர்ந்த புத்தூரில் குழுமி யாயி என்ற ஓர் போலித் தெய்வத்திற்கு ஆயிரக்கணக் கான ஆட்டிளங்குட்டிகளை வெட்டி மருளாளி அதன் இரத்தத்தைக் குடிப்பதாக பாமரர்களை ஏமாற்றும் ஓர் கொடிய, அரக்கவிழா வருடாவருடம் நடைபெறுவ துண்டு. அக்கோர பலியை ஒழிக்க தென்னூர் ஜ⁻ஹார்மல் பாங்க் சொந்தக்காரர்களாகிய சே... சாந்த்ஜீ, பிருத்விராஜ்ஜீ அவர்களும் ம... அன்பர்களும் அவ்விழாக் காலங்களில் ... பிரசாரத்தை நடத்திவந்தார்கள். பிறகு ... ஜீவகாருண்ய நாடக சபாவென ஒன்றைத்தி... அன்பர்களைக்கொண்டு இந்நாடகத்தைப் பன்மு... நடத்திக் காண்பித்தார்கள். இதனால் வருடாவருடம் பலியும் மிகமிகக் குறைந்துவிட்டது. 1934-ம் ஆண் டில் திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் பாலசுந்தர நாடகம் அச்சங்கத்தாரால் நடந்தது. அதுசமயம் தேவகோட்டை தனவைசியரும், தென்னூரில் பிரபல வியாபாரியுமாகிய ஸ்ரீமான் ப. ராம. சுப. சுப்பிரமணி யஞ் செட்டியார் அவர்கள் தற்செயலாக அந்நாடகத் திற்கு விஜயம் செய்திருந்தார்கள். நாடகம் முடிவடை யும்வரை மிக்க ஆர்வமோடு காத்திருந்து, கடைசியில் மேடைமீதேறி இந்நாடகத்தைப் பலபடப்புகழ்ந்தார். எப்பொழுதும் எந்நாடகத்திற்கும் அதுவரை சென்ற தில்லையென்றும், ஜீவகாருண்ய சம்பந்தமான நாடக மென கேள்வியுற்று வந்ததாகவும், இங்கு நடந்த நாட கக் காட்சிகள் தன்னை ஆட்கொண்டதாகவும், இந்நாட கத்தால் நமது நாட்டில் உள்ள மூடபழக்க வழக்கங்

கள் குறைந்து சன்மார்க்கம் ஓங்குமென்றுதான் உண்
மையாக நம்புவதாகவும் போற்றி இந் நாடகத்தை
வெளிப்படுத்திய சென்னை தென்னிந்திய ஜீவரக்ஷா பிர
சாரக சபைக்கு ரூபா. 200—0—0 தானமாக அளிப்ப
தாகவும் வருடாவருடம் ரூபா. 25—0—0 சந்தாவாக
...த்துவ தாகவும் வாக்குறுதித்தந்து என்னிடம்
... 225—0—0 ம் அப்பொழுதே தந்தார். அன்று
...ளதுவரை வருட சந்தாவைச் செலுத்தி
...ள். தென்னூரில் இந்நாடகத்தை நடத்
...நளாயுள்ளவர்களில் திரு. S. பரமசிவம்
...அவர்களுமாவர்.

ஆகவே இந்நாடகம் நமது பிரசாரத்திற்கு நல்ல
...னை அளித்து வருகின்றதென்ற அவாவினாலும்
தமிழ் நாட்டிலுள்ள பல அன்பர்கள் இந்நாடக புத்த
கத்தை விரும்பி கேட்கின்றமையாலும் இதனை இரண்
டாமுறை சில மாறுதலோடு பதிப்பிக்கலானேம்.
இதில் சிறு தெய்வ வழிபாட்டையே ஒழிக்கவேண்டு
மென்ற முறையில் மாரியம்மனை எடுத்தெறிந்துவிட்டு
அன்பு என்று எழுதி அன்பையே தெய்வமாகத்
தொழுதார்களென்று முடித்திருக்கின்றேன்.

தெய்வங்களின் பெயராலும் மதத்தின் பெயரா
லும் உயிர்ப்பலியிடும் கொடிய அநாகரிக வழக்கம் இவ்
வுலகத்தில் பலபாகங்களிலும் இருந்ததாக சரித்திரங்
கள் கோஷிக்கின்றன. ஆனல் மேல்நாட்டில் இக்கொ
டுமையை அறவே ஒழித்து விட்டார்கள். துரதிர்ஷ்ட
மான நமது பாரதநாட்டில்தான் இன்னும் ஒழிந்த

பாடில்லே. வாமமார்க்க ஆசாரத்தாலும் காட்டுமக்களின் கூட்டுறவாலும் நமது நாட்டில் பரவியுள்ள பலிக் கொடுமையை ஒழிக்கப் பலரும் முன்வரவேண்டுமென்றே இவ்வாறு துணிவுற்று எழுதலானேன். என் துணிவுக்குக் காரணம் இராமலிங்கர் பாடிய "நலிதரு சிறிய" என்ற கவியும், அப்பர் தேவாரத்தில் "... றும் நாம் யாவர்க்கும் இடைவோமல்லோம்" எ... கவியுமேயாகும். ஆகையால் உண்மையா... வழிபாட்டை விரும்பும் எல்லா பெரியார்... பர்களும் இந்நாடகத்தை ஆதரிப்பார்களெ... கின்றேன். இதுவரை நமது நாடகத்தை ... நடத்தக் காரணமாகவுமுள்ள பெரியார்களுக்கும் ... பர்களுக்கும் எனது நன்றி அறிதலே தெரிவித்... கொள்ளுகிறேன்.

சென்னே,
1—2—37.

அன்புள்ள,
T. S. ஸ்ரீபால்.

ஸ்ரீ

பாலசுந்தரம்

அல்லது

பலியின் கொடுமை

அங்கம் I—காட்சி I.

(கிருஷ்ணபுரம் என்னும் ஊரின் கிராமச் சாவடியில் கிராமப் பெரிய தனக்காரர்களின் பொதுக்கூட்டம்.)

கிராமப் பெரியதனக்காரர்களாகிய மணியம் சே. முருகேச முதலியார், பே. அண்ணாமலைப் பிள்ளை, ம. து. கன்னி நாய்க்கன், பா. குண்டப்பக் கவுண்டன் முதலானவர்களின் தலைமையில் கிராம ஜனங்களும் கூடியிருக்கிறார்கள்.

மணியக்காரர்—பெரியோர்களே, இன்று நாம் கூடியிருப்பதன் காரணம் பத்து நாளாகவே பலருக்கும் தெரியும். ஆயினும் கிராமத்தாரின் அபிப்பிராயங்களை அறியவேண்டியே இன்று முக்கியமாகக் கூட்டம் கூட்டப்பட்டது. பலர், நம்முடைய கிராமதேவதைக்குக் காப்புக் கட்டவேண்டுமென்று விரும்புகிறார்கள். மேலும், கிராம தேவதைக்குக் காப்புக் கட்டி ஐந்து ஆறு வருஷங்களாயின. இன்னும் இவ்வாறு மறந்திருப்போமானால் அம்மன் கோபத்திற்கு ஆளாக வேண்டிவரும் ஆகையால் நாளைச் செவ்வாய்க்கிழமை

காப்புக் கட்டுவதெனத் தீர்மானித்து, தலைக்கட்டொன்றுக்கு எட்டணுவீதம் வசூல் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். இவ்வரிகளைத் தவறாமல் கொடுத்து, அனைவரும் ஒற்றுமையாக இருந்து விழாவைச் சிறப்பாக நடத்திவைப்பீர்களென்று நம்புகிறோம்.

கூட்டத்தார்—அப்படியே! அப்படியே! காப்புக் கட்டவேண்டியதுதான். அதற்காக எவ்வளவு வரியானாலும் கொடுக்கச் சித்தமா யிருக்கிறோம். எங்கள் சரீரத்தாலான எல்லா உதவிகளையும் அன்போடு செய்யக் காத்துக்கொண்டிருக்கின்றோம்.

பாலசுந்தரம்—(கதருடையும் கதர்த் தொப்பியும் அணிந்திருத்தல்)

("சற்றே விலகியிரும் பிள்ளாய்" என்ற மெட்டு)

இராகம்—பூரிகல்யாணி. தாளம்—ரூபசம்.

பல்லவி.

வந்தனம் பெரியோர்களே—ஒன்று
வழுத்தக் கேளும் இப்பொழுது சிறியேன் (வந்)

அநுபல்லவி.

இங்கு நாம் சுகம் அடைய வேண்டி
இறக்க ஜீவனை வதைக்க லாகுமோ (வந்)

சரணம்.

1. ஆண்டு தோறும் ஐயையோ—நாம்
அம்மன் மகிழுவா ளென்றே
வேண்டியே பல ஆடு கோழிகளை
வெட்டி மடிக்கின் றோமே மிகவே (வந்)

2\. அருள் நிறைந்த நம் நாட்டிலே—இந்த
அநியாயச் செயல் கூடுமோ
தரணியில் தெய்வப் பேரினுல் கொலை
தன்னைச் செய்தல் பாவம்! பாவம்!! (வந்)

பெரியோர்களே அடியேன் நமஸ்காரம். நம்முடைய கிராமதேவதைக்குக் காப்புக் கட்டி விழா நடத்துவதை நானும் அன்புடன் ஏற்று, என்னுல் இயன்ற பணிகளையும் செய்ய, முன் வருகின்றேன். ஆனுல், இவ்விழாவில் மனித தருமத்திற்கும், தெய்வத் திருவருளுக்கும் மாருகக் கொலைத் தொழில்கள் நடக்கப்போகின்றன. தெய்வங்களை வணங்குவதும் சிறப்புச் செய்து கொண்டாடுவதும் மனிதன் சன்மார்க்க நெறியைப் பயில்வதற்காகவேயன்றித் துன்மார்க்க நெறியில் ஒழுகி அழிவதற்கல்ல. ஆதியில் நம் பரத கண்டத்தில், 'அஹிம்ஸா பரமோதர்ம' என்ற ஜீவ காருண்யத்தை விருஷபதேவரே கண்டருளினுர். அதனை மஹாவீரரும் புத்தரும் உலகெங்கும் பரவச் செய்தார்கள்; அப் பேரறத்தையே மனிதர்களின் மூலதர்மமாகப் போதித்து வந்தார்கள் அந்த அறமே தற்காலம் மகாத்மா காந்தியவர்களால், உலக மெங்கு முள்ள கிராமத்திலும், நகரத்திலும், பாலர், விருத்தர், ஆண், பெண் முதலானவர்களின் வாக்கில் அஹிம்ஸா பரமோதர்ம: என்று ஒலிக்கிறது.

"நல்லா றெனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி"

என்ற குறளாசிரியரின் கூற்றுப்படி, நம்முடைய ஆன்மா சாந்தி யடைய நல்வழியாக உள்ளது கொல்

லாமையேயாகும். கொல்லாமையே, எல்லாத் தருமங் களுக்கும் மூலதர்மமாக நின்று, அன்பையும், பக்ஷபாத மின்மையையும், நற்குண நற்செய்கைகளையும் சாந்தத் தையும் சன்மார்க்கத்தையும் அளித்து, முத்திக்கும் வித் தாகி நிற்கின்றது. இதுவே கடவுளை வழிபடுங் குணமா கும். நம்முடைய தெய்வ விழாவிலோ இந் நல்லறம் அழிந்து, பொல்லா அறமாகிய கொலைச்செயலைத் தெய் வம் விரும்புவதாகக் கூறி, திக்கற்ற ஊமைப் பிராணி களாகிய ஆடு, கோழிகளை இரக்கமின்றி வெட்டிப் பலி யிடப்போகின்றோம். பூமி, சூரியன், சந்திரன், வாயு, வருணன் முதலிய கண்கண்ட தெய்வங்கள் நம்மையும், ஏனைய சிற்றுயிர்களையும் தங்கள் செயல்களால் சமமா கவே காத்துவருகின்றன. இப் பஞ்ச பூதங்களுக்கும் மேலானதாக விளங்கும் எந்தத் தெய்வமும் எல்லா உயிரையும் மேற்கூறிய பஞ்ச பூதங்களைப்போலவே சமத்துவமாகக் காக்கவேண்டுமல்லவா ?

அந்தோ! வாயில்லாத ஏழைப் பிராணிகளைத் தெய்வத்தின் பேரால் பலியிடுங் கோரச் செய்கையைத் தடுக்கத் திருவாங்கூர் மஹாராணியாரைப்போன்ற காருண்யமிகுந்த அரசிகளும் அரசர்களும் தோன்றா மையால், இன்றும் நம் நாட்டில் அநேக ஆலயங்கள் ரத்தப்பெருக்கோடு கொலைக்களங்களாக மாறி யிருக் கின்றன. அஹிம்சா பரமோதர்ம: என்ற பேரறத் தைப் பரவச்செய்த மஹா வீரர் பிறந்த மாட்சிமை யுடைய நாடன்றோ நம் நாடு! பிம்பிசாரன் என்ற அரசன் யாகத்தில் கொல்லத் துணிந்த ஆயிரக்கணக் கான ஆடுகளின் உயிரை மீட்ட புத்தபிரான் அவ

தரித்த புண்ணிய பூமியன்றோ நம் பூமி! பசுவின் கன்றினது உயிருக்காகத் தன் அருமைப் புதல்வனின் உயிரைத் தேர்க்காலில் வீழ்த்திய மனுநெறி கண்ட சோழனின் தமிழ் நாடன்றோ, நம் தமிழ் நாடு! மேலும், இந்து மதத்தில் பிறந்த நாம் நம் பெரியோர்களாற் கூறப்படாத அநீதியான உயிர்ப்பலியைப் பூசாரிகளின் பொய் வார்த்தைகளை நம்பிச் செய்வது தர்மமா?

பெரியோர்களே, நன்காராயுங்கள். உலகத்தின் மதிப்பையும் எல்லாம் வல்ல இறைவனின் திருவருளையும் பெறுதற்குக் கொல்லா விரதத்தை மேற்கொண்டு, நம்முடைய விழாவில் ஆடு கோழிகளுக்குப் பதிலாகப் பூசனிக்காய்களைப் பலி கொடுத்துப் புண்ணியம் பெறுவோம் என்று பெரியோர்களைப் பிரார்த்திக்கின்றேன்.

முருகேச முதலியார் புன் முறுவலோடு தரையை நோக்குகிறார். அருணாசல முதலியார் அக்கம் பக்கம் பார்க்கிறார். அண்ணாமலைப் பிள்ளை "ஆகாது, ஆகாது" என்று தலையை அசைக்கிறார். கன்னி நாய்க்கர் 'கறகற' எனப் பல்லைக் கடித்துக்கொள்ளுகிறார். குண்டப்பக் கவுண்டர் கண் சிவக்கப் பாலசுந்தரனை உருட்டி நோக்குகிறார்.

கூட்டத்தில் ஒருவர்—என் வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கிறீர்கள், ஒற்றைச்சாண் பையல் தத்துவம் பேசுகிறானே. இது, நம் பெரியவர்கள் காலத்திலிருந்து நடந்து வருவதுதானே! புதிதல்லவே! என் மயங்குகிறீர்கள்.

கன்னி—ஒருவரும் மயங்கவில்லை. வழக்கப்படியே நடக்கவேண்டியதுதான்.

குண்டப்பன்—பெரியதனக்காரர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டார்கள். இனி அவரவர்கள் வேலையைப் பார்க்கலாம். கூட்டம் முடிந்து விட்டது.

அண்ணுமலைப் பிள்ளை—பலி, நேற்று இன்று நடந்ததா! கிராம தேவதைக்குப் பலிதானே முக்கியம்.

மணியக்காரர்—தம்பி! நீ கூறியவைகளெல்லாம் உண்மையே. ஆனாலும் இது பரம்பரையாக நடந்து வருகின்றபடியால் சீக்கிரத்தில் வேறுவழி திரும்பமாட்டார்கள். என்னவோ இவ் வருடம் பழையபடியே நடக்கட்டும்; பின்னால் பார்க்கலாம்.

பாலசுந்தரம்- என்ன! தாங்களும் இவ்வாறு கூறிவிட்டீர்களே. தங்களுடைய மனத்திற் பட்ட உண்மை அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள். யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

மணி—என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்வதனால் பிரயோஜனமில்லை. ஊரார் அபிப்பிராயத்திற்குமுன் ஒருவன் அபிப்பிராயம் என்ன செய்யக்கூடும்? காப்புக் கட்டிக்கொள்ளுகின்றவர்கள் பலிச்சட்டி ஓடும்போது பலியில்லாமல் ஓடப் பயப்படுகிறார்கள். நான் என்ன செய்வது?

பாலசுந்தரம்—அக் காரியங்களை நாங்கள் செய்கிறோம்.

குண்டப்பன்—போ! போ! செய்துவிட்டாய். பலியில்லாமல் உற்சவம் நடத்த முடியாது. பலியில்லாமல் உற்சவம் நடத்துவதைவிட உற்சவத்தை நிறுத்திவிடலாம்.

மணி—தம்பி! பார்த்தாயா? நான் முன்னமேயே சொல்லவில்லையா? கேட்கமாட்டார்கள். பாவம்! நீ என்னவோ கஷ்டப்படுகிறாய். நல்ல வழிதான். கேட்டால்தானே.

பாலசுந்தரம்—தாங்கள் மனம்வைத்தால் நடக்கும்

மணி—யார் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். நாழிகை யாய்விட்டது; போய்வருகிறேன். நீயும் போய்வா.

பாலசுந்தரம்—(கூட்டம் கலைந்துபோகின்றன) ஆ! ஹா! என்ன நம்பிக்கை! அறவார்த்தைகளை மறவார்த்தைகளாய் எண்ணுகின்ற மாந்தர்களும் இருக்கின்றார்களே! ஆடு கோழிகளைக் கேட்கின்ற சாமிகளும் இருக்கின்றனவாம்! மனிதனைக் கொலைபுரியும்படி தூண்டுகின்ற தெய்வமும் ஒன்று இருக்கின்றதாம்! என்னே மனிதனின் ஞானம்!

மாணிக்கம்—(மணியக்காரர் குமாரன்)

("தோடுடைய செவியன்" என்ற மெட்டு)

இராகம் காம்போதி—தாளம்—ஆதி.

மணி லெதற்குரை யாடுகிறாய் செய்யும்
வேலையை நாம் செய்தால்
நானில மீதினில் ஆடு கோழி வதை
நசித்திடும் அறிவாயே
ஆன வுயிர்ப்பலி சாமியும் கேட்கிற
தாமே அதிசயமே

ஆணில் சிறந்திடும் நாமவர் திறமையை
அறிகுவோம் வருவாயே.

சுந்தரம், என் வீணுகைக் கத்துகிருய்? 'மயிலே மயிலே இறகுபோடு' என்ருல் போடுமா? நாம் செய்பவேண்டிய வேலையைச் செய்தால், ஆடு கோழி வெட்டுகிற தெல்லாம் அப்பலத்தில் வரும். சாமி ஆடு கோழிகளைக் கேட்கிறதாமே! பார்ப்போம், வா.

பாலசுந்தரம்—மாணிக்கம், ஆத்திரப்படாதே, இன்னும் மூன்று நாட்கள் இருக்கின்றன. அதற்குள்ளாக இவர்களை நாம் வயப்படுத்திவிடலாம். சாந்தமாய் இரு.

வடிவேல்—நரகில் மூழ்கும் முயற்சியராகிய இவர்களுடைய காதிலா தருமம் நுழையும்? பலியிடாவண்ணந் தடுப்பதற்கு ஏதாகிலும் ஒரு தீர்மானஞ் செய்துகொண்டு போவோம்.

மாணிக்கம்—ஆமாம். முதலில் வரி கொடுக்கவொட்டாமல் தடுத்துப் பார்ப்போம். அதில் நமக்கு ஜெயம் கிடைக்காவிடில் மறியல் செய்யவேண்டியதுதான்.

வடிவேல்—ஆதிதிராவிடர்களைக்கூடத் திருப்ப முயலவேண்டும்.

பாலசுந்தரம்—ஆம், ஆம். நாளையதினம் சேரிக்குள்ளே சென்று முயற்சி செய்யவேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு உணர்ச்சி உண்டாகும்

மாணிக்கம்—(சிரித்துக்கொண்டே) அவசியம். சேரிக்குள் சென்றால்தான் ஊரிலும் கிளர்ச்சி உண்டாகும். வாருங்கள் போகலாம். (கலைகிறார்கள்)

காட்சி 2

[சேரியில் ஆடுவெட்டி ஆறுமுகம் தன் வீட்டில் கொலைத்தொழிலைப்பற்றி வருந்திப் படுத்துக்கொள்ளல்.]

ஆடுவெட்டி ஆறுமுகம் தனக்குள் சிந்தித்தல்:—

என்ன பொழப்பு நம்ப பொழப்பு. ஊரல ஊராமதேவதைக்குக் காப்புகட்ட ஆரம்பிச்சாங்க. அதில ஆடுவெட்டிற மிராசு நம்ப பரம்பரைக்காருது. நேற்று ஊர்க் கூட்டத்தில் பட்டணத்து பிள்ளை மணியக்காரு பிள்ளை இவங்கள்ளாம் தெய்வத்துக்குப் பலியிடக் கூடாதுண்ணு எவ்வளவோ சாஸ்திரங்கள் சொன்னுங்க. அதைக் கேட்டா குடல் நடுங்குகிறது. நம்ம தலையில கொலை செய்யிற தொழில அந்த பிரம்மா எழுதி அனுப்பிச்சிட்டான். அடா எழவே! ஊரில இருக்கிறவன் ஏர் உழுது பொழக்கிறான்! கவலை யடிச்சி பொழக்கிறான்! வண்டி ஓட்டி பிழைக்கிறான்! வாரா சாரம் பயிரிட்டு பொழைக்கிறான்! தோட்டி தலையாரி மிராசு பிடிச்சி பொழக்கிறான்! பட்டணத்தில் இருக்கிறவன் ரிக்ஷா, கைவண்டி இழுத்து பொழக்கிறான்! இன்னும் எப்படி எப்படியோ பொழக்கிறான்க! நம்ம பெரியவன்க கொலை செய்யிறதெ நமக்கு கொடுத்திட்டு

போயிட்டாங்க! அடா சனியனே, சுடுகாடு காத்து பிழைக்கிறது இருந்தாகூட போதும்! இந்த கொலைத் தொழிலை விட்டுவிடலாமே; கொலை செய்யாதீங்க! ஊமைப் பிராணிங்களே தலை வெட்டாதீங்க என்று அந்த பிள்ளைங்க சொன்னதெ இந்த ஊர் பெரிய மனுஷன்ககூட கேக்கமாட்டன்றாங்க! நாம் என்ன செய்யுறது! பாவம்! அந்த ஜீவன்களுக்கு வாய் இருந்தா இந்த கூட்டத்தில் வேண்டிக்கொள்ளாதா! அப்பப்பா அதையெல்லாம் நினைச்சா உடம்புகூட சிலித்துக்கொள்றது! என்னமோ நாளைக்குத் தெரியுது. தூங்குவம். கள்ளுக்குக்கூட காசில்லை. அந்தக் கழுதெ தாய் வீட்டுக்குப் போனவ. இன்னம் வரல. படுத்துப்போம்.

[ஆடுவெட்டி ஆறுமுகம் உறங்கும்போது ஆடு கோழிகள் தங்களை வெட்ட வேண்டாமென்று கனவில் அழுதல்; கனவுகண்டு விழித்துக்கொண்டு சிந்தித்தல்.]

ஆடுவெட்டி ஆறுமுகம் (தனக்குள்) ஆ! என்ன! உண்மையா! பொய்யா! கனவா! ஐயோ! வாயில்லாத ஜீவன்கள் என்னைச் சுற்றிசுற்றி யழுததுங்களே! எங்கே அந்த ஜீவன்க! (பல இடமும் சுற்றிப் பார்த்தல்) அப்பப்பா! எங்களை வெட்டவேண்டாம்! வெட்டவேண்டாம்! என்று கண்ணீர் விட்டு அழுததுங்களே! ஐயையோ! என்ன செய்வேன்! பாழும் பிராசாச்சே! ஊர்ல இருக்கிற பெரிய மனுஷன்க தொந்தரவு செய்வான்களே! என் தலைவிதியே! எனக்குக் கொலை செய்யுற

தொழிலதாஞ கொடுக்கவேணும்! பாவம் அந்த அநாதை ஜீவன்க அழுதது என் குழந்த குட்டிங்க அழுதமாதிரி இருக்கிறதே! எப்படி வெட்டுவேன்! சீ மிராசுமாச்சு கிராசுமாச்சு! இந்த கொலைத்தொழில விட்டுடவேண்டியதுதான்! இந்த ஊர்ல பொழப்பு ஆப்புடாவிட்டா பட்டணத்தில போய் ரிக்ஷா இழுத்தாவது பொழக்கிறது! சுடுகாடு காக்கிற வேலை ஆப்பட்டாபோதும்! இந்த கொலைத்தொழிலே நமக்கு வேண்டாம்! அந்த பிள்ளைங்க என்னன்னமோ வேலை செய்யுறுங்க. அது ஜெயிச்சுபூட்டா நம்ம புடிச்ச சனியன் ஒழிஞ்சுபூடும். எல்லாவற்றையும் பார்த்துகொண்டு நம்ம சமாசாரத்தை கிராம பெரியதனக்காருக்கு சொல்லிவிடலாம்! பார்ப்போம்! கிராம தேவதை இருக்கிரு!

காட்சி 3

[பாலசுந்தரம், மாணிக்கம், வடிவேல் ஆகிய மூவரும் வீடு வீடாகப் பிரசாரம் செய்தல்.]

பாலசுந்தரம்—மாணிக்கம், இனி வீடு வீடாகச் சென்று கிளர்ச்சி செய்வோம் வாருங்கள், நாழிகையாய்விட்டது. (மூவரும் ஒரு வீட்டில் நுழைதல்)

வீட்டுக்காரர்—(எழுந்து) வாருங்கள், வாருங்கள்; உட்காருங்கள்.

பாலசுந்தரம்—நீங்கள் உட்காருங்கள். நாங்கள் இதோ உட்காருகிரேம்.

வீட்டுக்காரர்—என்ன காரணமோ, தம்பிகள் இவ்வளவு தூரம் வந்தது?

பாலசுந்தரம்—ஒன்றுமில்லை. நம்முடைய ஊரில் நடக்கப்போகும் காப்புக்கட்டு உற்சவத்தில் ஆடுகோழிகளைப் பலியிடாமல் பூசனிக்காய்களைக் கொடுக்கும்படி, நேற்றுப்பெரியதனக்காரர்களைக்கேட்டுக்கொண்டோம். அவர்கள் பழைய குருட்டு நம்பிக்கையை விடுவதற்கு மனம்வராமல் ஏதேதோ சாக்குச் சொல்லுகின்றார்கள். ஆதலால் நாங்கள் வீடுவீடாகச் சென்று ஒவ்வொருவரையும் எங்கள் கொள்கையை ஆதரிக்கச்செய்து, 'ஆடுகோழிகளைப் பலியிடாமலிருந்தால் வரி கொடுப்போம்; இல்லாவிடில் கொடுக்கமாட்டோம்' என்று கூறும்படி தூண்டுதற்காக வந்திருக்கிறோம். தங்களுடைய வீட்டிற்குத்தான் முதன்முதலாக வந்தோம். ஜீவகாருண்யம் என்ற சிறந்த தருமத்தை எண்ணித் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடும்படி கோருகிறோம்

வீட்டுக்காரி—இதுவரையிலுமில்லாத புதுக் காரியங்களைச் செய்யலாமா? அம்மனுக்கு ரத்தப்பலியில்லாவிட்டால்................

வீட்டுக்காரர்—(கோபமாக) சீ! கழுதை, அம்மா வந்து இரத்தப்பலி கேட்கிறாளா? எல்லாம் மனுஷன்க வயிற்றுக்காகத்தான்.

பாலசுந்தரம்—அம்மா, தெய்வம் என்றால் நமக்கும் மற்ற ஜீவன்கள் எல்லாவற்றிற்கும் பொதுவானதுதானே. மனிதனுக்கு ஒரு தெய்வமும், மற்றவைகளுக்கு ஒரு தெய்வமுமாக இல்லையே. மனிதனை கொலை முதலிய மகா பாதகங்கள் செய்யாதவனாகவும்,

புலாலுண்ணுதவனாகவும் இருக்கவேண்டுமென்று சாஸ்திரங் கூறுகின்றது. அப்படியிருக்க, இத் தீச்செயல்களைத் தெய்வம் விரும்புமா?

வீட்டுக்காரர்—அவளுக்கென்ன தெரியும். அடுப்பூதவும் அசட்டுத்தனமாகப் பேசவுந்தான் தெரியும். தற்காலத்தில் எத்தனைப் பெண்கள், கல்விகற்று, ஆண்களைக்காட்டிலும் அறிவுடையவர்களாக விளங்குகின்றார்கள்! இந்தப் பிணத்தின் பேச்சு ஒரு பேச்சா?

மாணிக்கம்—ஆம்! ஆம்! அநேகப் பெண்கள் கல்வியில் ஆண்களுக்கு மேற்பட்டிருக்கின்றார்கள்.

வீட்டுக்காரி—(சிரித்துக்கொண்டே) தம்பியின் தங்கைகூடத்தான் படித்துக்கொண்டிருக்கிறாள். அவளுடைய நாகரிகமும் நடைஉடைபாவனையும் பேச்சும் வேறாகத்தான் இருக்கின்றன. எங்களுக்கெல்லாம் அவளோடு பேசக்கூட வெட்கமாயிருக்கிறது.

வீட்டுக்காரர்—சரி! படிப்பின் பயனை அறிந்து கொண்டாயா? அதனிடத்தில் போய் பலியிடுவது நல்லதா, கெட்டதா? என்று கேட்டுக்கொண்டுவா; அப்பொழுது உனக்குப் புத்திவரும்.

மனைவி—அவள் நல்லதென்று சொல்லுவாளா? காலங் கலியாகிவிட்டதே. இதோ இந்தக் குழந்தைகளெல்லாம் படித்த புத்திசாலிகளானபடியால் பலியிடுவது பாவமென்கின்றார்கள். பெரியவர்களாகிய நீங்களெல்லாம் பலியிடத்தான் வேண்டுமென்கிறீர்கள். இப்படித்தானே யிருக்கும், படியாத பெரிய பெண்களுக்கும் படித்த சிறு பெண்களுக்குமுள்ள வித்தியாசம்.

புருஷன்—(சிரித்துக்கொண்டே) ஓ! ஹோ! எங்களையும் உங்களோடு படியாதவர்களாகச் சேர்த்துக் கொண்டாயா!

பிள்ளைகள்—கைதட்டி உரக்கச் சிரித்தல்.

புருஷ்ன்—பலியிடுவது பாவமென்றும் படித்தவர்களே புத்திசாலிகளென்றும் தெரிந்துகொண்டாயே! அதற்காக உன்னை மிகவும் மெச்சுகின்றேன். தம்பிகாள்! ஊரில் பிரிவு கொடுக்காதவர்களோடும் பலியிடக் கூடாதென்பர்களோடும் என்னை ஒருவனுகச் சேர்த்துக்கொள்ளுங்கள். என்னவோ அறிவில்லாத காட்டுமிரண்டிகள் காலத்தில் நடந்ததை இன்னுமா செய்துகொண்டிருக்கவேண்டும்?

பிள்ளைகள்—சந்தோஷ ஆரவாரம் செய்தல்.

பாலசுந்தரம்—அண்ணு! அடியேன் அநேக நமஸ்காரம். தங்களைப்போன்ற பெரியார்கள் நால்வர் ஐவர் இருந்தாலும் நம்முடைய கிராமத்தின் பெயரை உலகமறியச் செய்துவிடலாம். இந்த இருபதாம் நூற்ருண்டிலும் பழைய மூடப் பழக்கங்களை விடாப்பிடியாய்ப் பின்பற்றுபவர்களைக் காண வருத்தமாயிருக்கின்றது. என்னவோ, கடவுள் கிருபையாலும் தங்களைப்போன்ற பரந்த நோக்கமுடைய பெரியார்களின் ஆசீர்வாதத்தாலும், இந்த அம்மையாரைப்போன்ற லக்ஷ்மிகளாலும் ஆடு கோழிகளுக்கு யாதொரு தீங்குமின்றி ஜெயமுண்டாகவேண்டும். போய் வருகின்ருேம். நமஸ்காரம். நீங்களும் இவ்வுண்மையைப் பலருக்குஞ்சொல்லுங்கள்.

வீட்டுக்காரர்—போய் வாருங்கள்! சத்தியத்தைச் சொல்லப் பயமென்ன! தாராளமாகச் சொல்லுகின்றேன்.

பாலசுந்தரம்—மிகவும் சந்தோஷம். போய்வருகின்றோம்.

இவ்வாறு ஒவ்வொரு வீடாகச் சென்று பலியின் கொடுமையையும் அநாகரிகத்தையும் எடுத்துரைத்து, 'பலியிடாமலிருந்தால் பிரிவு கொடுங்கள்; இல்லாவிடில் பிரிவு கொடுக்காதீர்கள்' என்று சொல்லிவிட்டு, மாலை 5 மணிக்குச் சேரிக்குச் சென்றார்கள்.

காட்சி 4.

[பாலசுந்தரம் மாணிக்கம் வடிவேல் மூவரும் சேரியில் வருதல்]

குண்டன்—அட! அண்ணன்! மணியக்கார் குழந்தையும் வேறே யாரோ நாலைந்து பேரும் சேரிக்குள்ளே வந்துட்டாங்கடா!

மொட்டை—ஐயையோ! நம்ம ஊரில்கூடவா இந்தக் கூத்து! எங்கெங்கேயோ பாப்பார், முதலியார் முதலிய எல்லா ஜாதியார்களும் சேரிக்குள்ளே வந்து பிரசங்கம் பண்ணுவதாகக் கேள்வி! என்னடா இந்த ஊர் முதலியார் சண்டை பிடிப்பாங்கடா! எங்கடா அவங்க!

குண்டன்—அதோ பஜனை கோயிலண்டை வந்துட்டாங்கடா !

மதுரை—அடே முத்து ! கலிகாலக் கூத்துடா ! நம்ம ஊர் முதலியார் பிள்ளைகளைப் பாருடா ! சேரிக்குள்ளே வந்துட்டாங்கடா !

பாட்டி—என்னடி அம்மா காலங் கெட்டுப் போச்சே ! எனக்கும் அறுபது வயசாச்சு ; இந்த மாதிரி அநியாயம் பார்த்ததுமில்லே கேட்டதுமில்லே ! இந்தக் காலத்தில்தான் இப்படி நடக்குது ! என்ன விபரீதமோ, வாங்கடி போவோம்.

பஜனைக் கோயிலண்டை கூட்டம்

முருகன்—சாமிங்க ! என்ன இப்படி பண்ணி விட்டீங்களே! உள்ளே வரலாமா? ஐயமார் கோவிச்சுப் பாங்களே !

மாணிக்கம்—முருகா, கோபிக்கட்டும். நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். உங்களைத் தீண்டாதாரென ஒதுக்கி வைத்திருந்த காலம் மகாத்மா காந்தி அவர்களால் மலையேறிவிட்டது. இனி ஊரார் கோபித்தாலுங் கேட்கமாட்டோம். உற்றார் வெறுத்தாலும் விடமாட்டோம். எங்கள் கடன் பணி செய்து கிடப்பதே. அப் பணியை எங்கும் சமத்துவமாய்ப் புரிவதென்று நிச்சயஞ்செய்துவிட்டோம். அஃது ஊராயிருப்பினுஞ் சரி, சேரியாயிருப்பினுஞ் சரி, மனிதன் வாழுமிடமெல்லாம் மனிதன் போக உரிமையுண்டு. ஆகையால் இன்று உங்களினங்களின் முன்னேற்றத்தைக் கருதி நாங்கள் உங்கள் ஊருக்குள் நுழைந்தோம்,

சத்தியத்திற்குப் பயமும் தீட்டுங் கிடையாது. ஆகையால் நாங்கள் கூறும் சத்திய வழியை நீங்கள் பின்பற்ற வேண்டும். என்னருயிர் நண்பர் பாலசுந்தரம் உங்களுக்காக ஓர் அருமையான உபந்யாசம் புரிவார். அதை அமைதியாகக் கேட்டு அதன்படி நடக்க முன் வாருங்கள்.'

பாலசுந்தரம்—என் அருமை ஆதித்திராவிடசகோதர சகோதரிகளே! நாங்கள் எங்கள் மதங்களேயும், உள்ளூர் உறவினர்களேயும், பரம்பரை வைதிகவழக்கங்களேயும் மதியாது உங்கள் சேரிக்குள் நுழைந்திருக்கின்றோம். இப் புதுமையைக் கண்டு நீங்கள் ஆச்சரியமும் அச்சமும் அடைந்திருக்கின்றீர்கள். இவ்வளவுகாலமாக உங்களேக் கழுதை, பன்றி, நாய் முதலிய மிருகங்களினுங் கீழாகக் கருதி நடத்தி வந்தார்கள். மகாத்மா காந்தியவர்களின் திருவருளால் தீண்டாமை என்னுங் கொடிய வழக்கத்தை மண்மூடுங் காலம் உதயமாகியிருக்கின்றது. இவ் வுதய காலம், உங்கள் துன்பம் இன்பமாக மாறுவதுமன்றி, பாரத மாதாவின் பழி நீங்கவும், இந்துமதத்தின் மாசு மறையவுமே ஏற்பட்டதென்று நினைக்கின்றேன். இவ் வுதய காலத்தை நீங்கள் அலக்ஷியஞ் செய்யாமல் உங்கள் நன்மையைக் கருதி உழைக்க வரும் பெரியார்களேப் பின்பற்றி உங்கள் பழைய அநாகரிக வழக்கங்களே ஒழிக்க முன் வரவேண்டும். உங்கள் வகுப்பாரை அநேக ஆயிர ஆண்டுகளாகத் தீண்டாதாரென ஒதுக்கிவைத்துள்ள கொடுமைக்கு அருத்தமேயில்லே. புலாலுண்ணலே கார

ணமாக உங்களைப் புலையர் என அழைக்கின்றனராம். என்னே நீதி! தற்சமயம் நம்முடைய கிராமத்தில் காப்புக்கட்டி உற்சவம் நடக்கப்போகின்றது. அக் கிராம தேவதைக்கு ஆடு கோழிகளைப் பலி கொடுக்கப் போகின்றார்கள். அப் பலியைத் தெய்வம் ஏற்றுக் கொள்ளுகின்றதாம். அவ்வாறு தெய்வம் பலியை விரும்பினால் அதுவும் தீண்டாத தெய்வ மன்றோ! அந்தப் புலைத் தெய்வத்தை இந்த மேல் வகுப்பார் எவ்வாறு தீண்டிக்கொண்டும், வணங்கிக்கொண்டும் வருகின்றார்களோ அறியேன். அந்தப் புலைத் தெய்வமும் உங்கள் நாற்றத்தை விரும்புவதில்லையாம். நீங்கள் அருகில் வந்துவிட்டால் தீட்டுப் பட்டதென ஆளின்பேரில் வந்து அட்டகாசம் பண்ணுகின்றது. அந்தத் தெய்வத்திற்கு ஆடுகோழிகளை வெட்டுவது உங்கள் கரங்கள்தாம் தவிர நீங்கள் செய்யும் பாற்பொங்கல் தேங்காய் பழங்களையும் புலாலையும் ஏற்றுக் கொள்ளுகின்றதாம்! உங்கள் உடல்மாத்திரம் அருகில் வரப்படாதாம்; என்னே சாமியின் கொடுமை! உண்மையாக சாமியின் கொடுமையா? மனிதரின் சூழ்ச்சியா? ஆராயுங்கள்.

ஆடு வெட்டி ஆறுமுகம்— ஆமாஞ் சாமி! நீங்க சொல்ற தெல்லாம் உளுமைதாஞ் சாமி! தெய்வ மெங்கே தேவதை யெங்கே! எல்லாம் மனுஷாள் தாஞ் சொல்றாங்கோ!

(எல்லாரும் நகைத்தல்)

பாலசுந்தரம்—ஆ! விளங்குகின்றதா? மனிதர்கள் தான் இவ்வாறு போலிச் காரணங்கள்கூறி உங்களை

ஆதியிலிருந்து அடிமைகளாக்கிக்கொண்டு உங்களுழைப் பால் உயிர் வாழ்ந்து வருகின்றார்கள். உங்களுக்குக் கல்வியும் செல்வமும் விருத்தியாகா வழியில் அழுத்தி வைத்திருக்கின்றார்கள். இனியாகிலும் கண்விழியுங்கள். தற்காலம் உங்கள் நற்காலத்தின் அறிகுறியாகவோ கட வுளின் சோதனையாலோ நம்முடைய கிராமத்தில் காப் புக்கட்டி உற்சவம் நடக்கப்போகின்றது. இவ்விழாவில் உங்கள் வகுப்பாரனைவருக்கும் வழிகாட்ட நீங்கள் முன்வர வேண்டும். உங்களில்யாராகிலும் பலிகொடுப் பதாகப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தால் அதை அடியோடு நிறுத்தவேண்டும். அதற்குப் பதிலாகத் தேங்காய் பழம் கொடுத்துவிடுங்கள். இவ்வாறு சாமி யின் பேரால் கொலை புரியும் கொடிய வழக்கத்தை நிறுத்துவதே உங்கள் முன்னேற்றத்தின் முதல் விரத மாகக் கொள்ளுங்கள். தவிர உங்களுக்குரிய ஆடுவெட் டும் மிராசையும் விடுவதோடு, உங்களில் யாரையாகிலும் காப்புக்கட்டிக் கொள்ளுபவராக நியமிக்கும்போது அவ ரும் ஆடு பலியில்லாம லிருந்தாலொழியகாப்புக்கட்டிக் கொள்ள முடியாதென்று மறுத்துவிடவேண்டும். இவ் வாறு நீங்கள் இந்தக்கிராமத்தில் துணிந்து நின்றீர்களே யானல் உங்களைப் பின்பற்றி அநேக கிராமத்தார்களும் நடப்பார்கள். அதனால் உங்கள் சமூகம் இந்தப் பக்கத் திலும் சிறிது சீர்திருத்தமடையும். எங்கள் முயற்சி வீணாகாமலும் உங்கள்சந்ததிகளின் வருங்காலக்ஷேமத் திற்குப் பங்கம் விளையாமலுமிருக்க விரும்பினால் நீங் கள் எங்களைப் பின்பற்றிக் கிராம தேவதைகளுக்குப் பலி யிடாமல் பாற்பொங்கல் படைக்கவேண்டும். இப்புதுக் கொள்கைக்காகத் தெய்வத்திற்கோ, எஜமானர்

களுக்சோ அஞ்சவேண்டாம். ஏனெனில், எத்தனையோ ஆயிரவாண்டுகளாக நீங்கள் போற்றிவருந் தெய்வங்களும் உங்களைக் கண்திறந்து பார்க்கவில்லை. அடிமைகளாக வைத்திருக்கும் எஜமானர்களும் உங்களை எட்டிப்போ எட்டிப்போ என்று துரத்தி அடித்துக் கொண்டே காலங் கழிக்கின்றார்கள். இவ்வாறே நீங்கள் அஞ்சி வருவீர்களேயானால் இதைவிடக் கேவலமான நிலைமையைத்தானடைவீர்கள். "தன் கையே தனக்குதவி" என்பதுபோல உங்கள் நன்மைக்கு நீங்களே பாடுபடவேண்டும். உங்கள் மனதை உறுதிப்படுத்திக்கொண்டு இவ்விழாவில் பலியிடுவதில்லையென உறுதிமொழி கூறவேண்டு மென்று வேண்டுகின்றேன்.

முனியன்—(சேரி பெரியதனக்காரன்) சாமி நீங்க சொல்லிவந்த தெல்லாம் நெஜந்தான். எங்கள் பிரார்த்தனைகளில் ஒரு உயிர்கூடபலியில்லாமல் பாற்பொங்கல் படைக்கின்றோம். ஆனால், காப்புக்கட்டிக் கொள்வது மாத்திரம் ஊரோடு ஒத்துதான்போகணுஞ்சாமி. இல்லாவிட்டால் ஆண்டைங்களுக்கு கஷ்டமாப் போய்விடும். ஆடு வெட்டுவது ஒருவன் வேலை. அது அவன் இஷ்டம். நீங்கள் சொல்றதெல்லாம் எங்கள் நன்மைக்காகத் தானே. உங்கள் சுகத்துக்கா சொல்றீங்க! ஆடுவெட்டி ஆறுமுகம் அதோ நிற்கின்றான் பாருங்க.

ஆடுவெட்டி ஆறுமுகம்—(சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து) சாமி! நேற்றுராத்திரி என்கனவில் ஆடுகோழிகள் என்னைச் சுற்றி சுற்றி, எங்களை வெட்டவேண்டாமென்று அழுததுங்க. அதைப்பார்த்தபின் என் மனம் ஒடஞ்சியே போச்சு! நீங்களும் தெய்வம்போல் வந்து

நிற்கிறீங்க. இதுவே சத்தியம். கடவுள் சாட்சியாக சத்தியம். இன்றுமுதல் ஆடுவெட்டும் மிராசை விட்டு விடுகிறேன். எந்த உயிரையுங் கொல்வது மில்லை. சத்தியம்; சத்தியம்.

கூட்டத்தார்—(ஆவலாகக் கைதட்டி ஆரவாரித்தல்) இனிமேல் சேரியில் கொலையே ஒழிந்தது.

பாலசுந்தரம்—சந்தோஷம்! நீங்களே சன்மார்க்கர்கள்; ஆறுமுகம்! உன்னைக் கலியுக நந்தனராகப்போற்றுகின்றேன். உன் அறிவை மெச்சுகின்றேன்.

அன்பர்களே! உங்களை உலகம் ஆவலாக நோக்கிப் பார்க்கப்போகின்றது. உங்கள் சந்ததிகளும் உங்களை மறவாமலிருக்கும்படியான புகழ்சரீரம் எடுத்துவிட்டீர்கள். நீங்களே உங்கள் குலத்தவர்க்கு உண்மையான வழிகாட்டிகள். இன்று கொடுத்த வாக்குறுதியை என்றும் மறவாமல் நிறைவேற்றுங்கள். உங்களுக்கு நற்புத்தியையும், நீண்ட ஆயுளையும் நிறைந்த சம்பத்தையுமளித்தருளும்படி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். நாங்கள் போய்வருகின்றோம். காப்புக் கட்டிக்கொள்வதில் சற்றுக் கவனம் வைத்துக்கொள்ளுங்கள்.

முனியன்—போய்வாருங்க சாமி! காப்புக் கட்டிக் கொள்வதைப்பற்றி யோசிக்கிறோம்.

மாணிக்கம்—என் அருமைச் சகோதர சகோதரிகளே! உங்களுக்கு நற்காலம் பிறந்திருக்கின்றது. சுகமாக வாழுங்கள். போய்வருகின்றோம்.

வடிவேல்—(சிரித்துக்கொண்டே) கலியுக நந்தனரே! போய்வருகின்றோம்.

ஆறுமுகம்—(சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து) எல்லோரும் போய்வாருங்கள் சாமி.

(வழியில்)

பாலசுந்தரம்—ஊரைக் காட்டிலும் சேரியாரே மேலானவர்களென்றுநினைக்கின்றேன். ஊரில் யாரோ இரண்டொரு வீட்டுக்காரர் பிரார்த்தனைக் கடாக்கள் வெட்டப் போவதாகக் கேள்வி. அதைப் பற்றி அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம். சேரியார்மாத்திரம் பலியின்றிப் பூஜையைச் செய்தார்களேயானால்சேரியாரின் சிறந்த பூஜை ஊராரின் கோர பூஜையைக் கண்டு குலுங்கக் குலுங்க நகையாதா? நரகத்தை மதியாவிடினும் நாணத்திற்காகிலும் நடுங்கவேண்டாமா? பார்க்கலாம். நம்மவரை ஏனோ இறைவன் மனிதராகப்படைத்தான்! மனித ஜென்மமும் மிருக சுபாவமுமா யிருக்கின்றதே! இழிவான செய்கையைப் புரிந்துகொண்டு உயர்ந்தவர், உயர்ந்தவர், என்று உளறிக்கொள்ளுகின்றார்கள். நாம் இன்று சேரிக்குள் நுழைந்ததைப் பற்றியும் பலவிதமாகப் பேசுவார்வள்.

வடிவேல்—அவசியம் பேசுவார்கள் ! கிணற்றுத் தவளை நாட்டு வளப்ப மறியாததுபோல நம்மவர்க்கு உலகானுபவங் கிடையாது. ஆகையால் நம்மை இழிவாகத்தான் எண்ணிப் பேசுவார்கள்.

மாணிக்கம்—ஒன்றும் பேசமுடியாது. உழவுத் தொழில் புரிகின்ற காலத்தில் பஞ்சமர்களும் நம்மவர்களும் கலந்தாகவேண்டியதுதான். இவர்கள் சரீரங்கள் அவர்கள் மேலேயும் அவர்கள் சரீரங்கள் இவர்கள் மேலேயும் படும்போது பலமுறை பார்த்திருக்கின்

றேன். இவர்களுக்குக் கோபம் வந்துவிட்டால் அவர்களைத் தீண்டிக்கொண்டு அடிக்கின்றார்கள். மேலும் சேரியில் தீப்பிடித்துக் கொண்டால் ஊரார்ஓடி அணைக்கின்றார்கள். அம்மாதிரியே ஊரில் தீப்பிடித்தால் சேரியார் வீடுகளிலும், கிணறுகளிலும், குளங்களிலுஞ் சம்பூர்ணமாகக் கலந்துகொள்ளுகின்றார்கள். இதைக்கேட்டால் ஆபத்துக்குப் பாவமில்லையென்பார்கள். நாமும் அவ்வாறே ஆடுகோழிகளின் ஆபத்திற்காகவும், மனிதர்கள் பாவமறியாது கொலைத்தொழில் புரிந்து நரக ஆபத்திற்காளாகும் நிலைமைக்கும் இரங்கியே சேரிக்குள் நுழைந்தோம். இதில் என்ன பிழை இருக்கின்றது. தப்பிதமாக வைத்துக்கொண்டாலும் தலைவர் மகாத்மா காந்திக்குமுன் இவர்கள் நம்மை என்ன செய்யமுடியும். ஒன்றும் நடக்காது, வாருங்கள் போகலாம்.

பாலசுந்தரம்—மாணிக்கம்! பேஷ்! ஆஹா! சமயோசிதமான பதிலளித்தனை! இவ்வாறு எல்லார்க்கும் எளிதில் வாராது. உன்னுடைய உண்மையான ஊக்கம் ஊற்றுப்போல் வார்த்தைகளைக் கொடுக்கின்றது. இறைவன் திருவருள் நமக்கு ஜெயத்தை யளிக்கவேண்டும். வாருங்கள் போகலாம்.

காட்சி 5

மணியக்காரர்வீடு

[மணியக்காரர், கன்னி நாய்க்கர், அருணு சல முதலியார் முதலியவர்கள் உட் கார்ந்திருத்தல்].

பூசாரி—சுவாமி தண்டம்.

மணியக்காரர்—பூசாரி! எல்லாந் தயாராகிறதா?

பூசாரி—தயாராகிக்கொண்டு வருகிறது. ஊரில் தான் கலகம் உண்டாகும்போ லிருக்கிறது.

மணியக்காரர்—என்னடா கலகம்?

பூசாரி—யார் யரோ பிரிவு கொடுக்கமாட்டே னென்கிருர்களாம். பலி கொடுக்கக்கூடா தென்கிருர்க ளாம். சாமி என்ன கீமிஎன்ன! சாமி ஆடுகோழிகேட் குதா? என்று எகதாளம் பண்ருங்க. தலைகொண்ணுப் பேசுருங்க.

மணியக்காரர்—பூசாரி, உலகம் பலவிதம். அதற் கெல்லாம் நாம் தலைகொடுத்து முடியாது. நாம் வழக் கப்படி செய்வதை நிறுத்தவேண்டாம். மாரிமுத்தை யும், ராஜகோபாலையும் அழைத்துக்கொண்டு வா, வசூல் விஷயம் ஒன்றுந் தெரியவில்லையே.

அருணுசலம்—அதோ வந்துவிட்டார்கள். பிரிவு சமாசாரம் அவர்களைக் கேட்டால் தெரிகிறது.

மணியக்காரர்—மாரிமுத்து! ராஜகோபால்! உட் காருங்கள். இதுவரை எவ்வளவு வசூலாயிற்று. இன் னும் எவ்வளவு வசூலாகவேண்டும்.

மாரிமுத்து—பாதிக்குமேல் வசூல் ஆகிவிட்டது. இரண்டொருவர் தகராறு பேசுகிறார்கள். சிலர், ஆடு பலியிடாமலிருந்தால் கொடுக்கிறோம் என்கிறார்கள்.

மணியக்காரர்—அப்படி எத்தனை வீடுகளிருக்கும்.

மாரிமுத்து—நடுத்தெரு முழுவதும் ஆடுபலியிடக் கூடாதென்கிறார்கள். நாய்க்கமார்தெருவில் ஐந்தாறு வீட்டுக்காரர்கள் இருக்கிறார்கள்; நடுத்தெரு முத்துக் கவுண்டர் 'பலியில்லாமல் காப்புகட்டுவதென்றால் இந்தத் தெருவில் வசூலுக்கு வாருங்கள்; இல்லாவிடில் எங்களைப் பிரிவும் கேட்கவேண்டாம்; கொலைகார சாமியையும் இந்தத் தெருவில் கொண்டுவர வேண்டாம்' என்று கடினமாய்க் கூறினார்.

மணியக்காரர்—அப்படியா! இனி இவர்களைப் போய் வேண்டவேண்டாம். இன்று தகராறு பேசுகிறவர்கள் அன்றே கூட்டத்தில் ஏன் சொல்லக்கூடாது. நாளைத் தேரிழுக்கும்போது அவர்கள் வீட்டில் பிரிவு கொடுத்தாலொழிய, தீபாராதனை வாங்க முடியாதென்று கூறிவிடுங்கள். ஆனதாகட்டும்.

(குண்டப்பக் கவுண்டர் வேகமாக வருதல்)

குண்டப்பர்—(உரத்த குரலில்) என்ன அநியாயம்! இந்த அநியாயம் இந்த ஊருக்குத்தான் அடுக்கும். கீழ்வரப்பு மேல்வரப்பு என்பதே பஞ்சாய்ப் பறந்து போச்சு.

மணியக்காரர்—என்ன சங்கதி! ஏன் இரைகின்றாய். சமாசாரத்தைச் சொல்லு. அப்பப்பா! காப்

புக்கட்டும் உற்சவத்தை ஆரம்பித்தாலும் ஆரம்பித்தோம். தாலி யறுந்துபோகிறது.

குண்டப்பர்—நான் சொல்லவா! அதை நினைக்கும்போதே என் வயிறு எரிகின்றது! நீசம்! நீசம்!! அதோ நிற்கின்ற வெட்டியானைக் கேளுங்கள்.

மணியக்காரர்—(வெட்டியானைப் பார்த்து) என்னடா சங்கதி!

வெட்டியான்—(சிரித்துக்கொண்டே) ஒன்றுமில்லை சாமி! நேற்று இராத்திரி உங்க கொழந்தையும், பட்டிணத்தில் படிக்குதே அந்தக் கொழந்தையும் இன்னும் சில குழந்தைகளும் சேரிக்குள்ளே வந்து பிரசங்கம் பண்ணுங்க.

கன்னி—ஆ!! ஆ!! சேரிக்குள்ளவா வந்துவிட்டார்கள். ஊரில் பெரிய மனிதர்களிருப்பதையும்கவனிக்கவில்லையா!

மணியக்காரர்—சும்மா இரும். முழுமையுங்கேட்போம். அடே! வெட்டியான்! உள்ளே வந்து என்ன பிரசங்கம் செய்தார்கள்.

வெட்டியான்—அதான் சாமி! கூட்டத்தில்சொன்னுங்களே ஆடு வெட்டக்கூடாதுனு, அதைத்தான் பிரசங்கம் பண்ணுங்க! சேரியில் யாரும் பலியிடுவது கூடாதுனு எங்கள் கூட்டத்தில் கட்டுப்படுத்தி விட்டாங்க. ஆடுவெட்டி ஆறுமுகம் ஆடு வெட்டுவதில்லை என்னு சத்தியம் செய்துகொண்டான். இதுதான் நடந்தது சாமி.

மணியம்—அப்படியா! அழிந்துபோகக் காலம் வந்துவிட்டது.

குண்டப்பர்—இனிமேல் பறையன் நம்மை மதிப்பானா!

மணியம்—ஏது! இந்தப் பையன்கள் செய்வதெல்லாங் குறும்புத்தனமாகவே யிருக்கின்றதே! கேட்பாரில்லை என்று நினைத்துக்கொண்டார்களா? என்னவோ, பாலசுந்தரம் தாயற்ற பிள்ளையாயிருந்தாலும், அவன் நற்காலத்தால் சென்னையில் வாசிக்கும் பாக்கியம் கிடைத்து, புத்திசாலியாயிருக்கின்றான் என்றல்லவோ எண்ணி யிருந்தேன்.

குண்டப்பர்—உம், என்ன வாசித்தான். இதோ தெருத் தெருவாக வாசிக்கிறானே!

பூசாரி—சாமி! எல்லாம் அவராலேயே கலகம் உண்டாகிறது. நம்மஊர்ப்பிள்ளைகளையுங்கெடுக்கத்தான் அந்தப் பாவி லீவு விட்டான்போ லிருக்கிறது. அவரு இந்த தெய்வங்களையும் பூசாரிகளையுஞ் சும்மா பழிக்கிறாருங்க.

மணியம்—சரி இருக்கட்டும். அடே முனியா! என்னடா சமாசாரம், வெட்டியான் சொன்னது உண்மைதானா?

முனியன்—ஆமாம் சாமி! அம்மன் எங்களுருக்கு வரும்போது பிரார்த்தனைக் கடாக்கள் வெட்டுவது வழக்கம். அதை நாங்கள் இனி செய்வதில்லையென்று தீர்மானித்திருக்கிறோம். போனவருஷம் கோயமுத்

தூரில் நடந்த ஆதித்திராவிட மகாநாட்டில் பலியிடக் கூடாதென்று ஒரு தீர்மானஞ் செய்திருந்தார்கள். அதை அநுசரித்துத்தான் நாங்கள் பலி யிடுவதை விட்டுவிட்டோம். மற்றதெல்லாம் சாமிங்க சொல்லு கிறபடி செய்யக் காத்துக்கொண் டிருக்கிறோம்.

மணியம்—சரிதான். அது உங்களிஷ்டம். பொதுக்காரியங்களைச் செய்யத் தடையில்லையே.

முனியன்—இல்லே! இல்லே! அம்மனுக்குண்டான எல்லாக் காரியங்களையுந் தடையின்றிச் செய்கிறோம்.

மணியம்—ஆறுமுகம்! உன் சங்கதி யென்ன?

ஆடு-ஆறுமுகம்—சாமி! எங்கவமிசத்தில் இத்தனே காலமா ஆடுவெட்டிக்குனு வந்தாங்க. நானும் 20 வருஷகாலமா செய்துக்குனு வந்துட்டேன். அது பாவம் என்னு எத்தனேயோபேர் சொன்னாங்க! அப் பொழுதெல்லாம் ஒன்றுந் தோணவில்லே. ராத்திரி ஒரு கனவு கண்டேஞ் சாமி! அதை நினேச்சாகூட மனங் கொதிக்கிறது சாமி! எனக்கு அந்தவேலே வேண் டாஞ் சாமி! வேறே ஏதாவது கொடுத்தா உங்க புண் ணியத்தில் பொழச்சிடுவேன். இனிமேல், கொலே செய்வ தில்லே என்னு ராத்திரி சத்தியஞ் செய்து கொண்டேன் சாமி.

மணியம்—சரி! இனி நாங்கள் யாரையாகிலும் அமர்த்திக்கொள்ளலாமா? நீ போட்டியாக வரமாட் டாயே?

ஆறுமுகம்—வரவில்லை சாமி. கொலை செய்யவா போட்டிபோடணும்! எனக்கு அந்தக் கொலைத் தொழிலே வேண்டாஞ் சாமி.

மணியம்—சரி, போய் வாருங்கள்.

ஆதித்திராவிடர்கள்—போய் வருகிறோம் சாமி, நமஸ்காரம்.

மணியம்—பூசாரி! நாளை இரவுதானே காப்புக் கட்டுவது. நாளைக்கொரு ஆடு உண்டா?

பூசாரி—ஆமாம் சாமி. அதைச் சொல்லவேயிங்கு வந்தேன். இங்கு இவ்வளவு கதை நடந்தது. நாளைக் கொரு ஆடுவெட்டும்போது தடுக்கப் போகிறார்க ளென்று ஊரெல்லாம் பேசுறாங்க.

மணியம்—தடுப்பான்! தடுப்பான்! நாளை இரவு 7 மணிக்கே நான்கு கானிஸ்டேபில்களை வரவழைத்து விடுகிறேன். அருகில் வருவார்களா! அதோடு ஜெயில் தான். சரி, நாளை இரவு ஆடுவெட்ட ஆசாமியைப் பாருங்கள். மற்றக் கதைகளை நான் பார்த்துக்கொள்ளு கிறேன்

பூசாரி—சாமி, பக்கத்தூரில் எங்களவர் ஒசனிருக் கிறார். அவரை அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்.

மணியம்—சரி, கொண்டுவா! என்னவோ! எடுத்த காரியத்தை இளைக்கவிடுவதில்லை; நாளைக்கு எல்லாம் சரியாக நடத்திவிடவேண்டும். சாப்பாட்டு வேளையாய் விட்டது. போய்வாருங்கள்.

பூசாரி—நமஸ்காரம் சாமி! சாமி மனஸு வச்சா எது நடக்காது.

அங்கம் 2 காட்சி 1

[கிராமதேவதை கோயில், கிராம ஜனங்கள் கூடுதல். மணியக்காரரும் அவருடைய சகாக்களும் பூஜா சாமான்களோடு மேளதாள முழங்க வருதல்.]

மணியக்காரர்—பூசாரி! சீக்கிரம் ஆகட்டும்.

பூசாரி—எல்லாந் தயாராகவே யிருக்கின்றன. சாமான் வரவில்லையே என்றுதான் காத்திருந்தோம்.

குண்டப்பன்—பூசாரி! ஆட்டை எங்கே கட்டட்டும்.

பூசாரி—சாமி! அங்கு, தூரத்தே கட்டிவையுங்கள். அம்மனுக்குப் பூஜைசெய்து வர்ணிக்கும்போதுதான் தேவை.

மணி—ஆமாம்! ஆமாம்! அப்படிக் கட்டிவையும்.

(அம்மனுக்குப் பூஜை செய்தல், வர்ணித்தல், சிலம்புகளோடு பலர் வரிசையாக இரு பக்கங்களிலும் நிற்றல்.)

ஆசிரிய விருத்தம்

ஒரு பூசாரி—சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியாய் நின்ற வுமையே
மற்றவர்கள்—ஹா (சிலம்பாட்டுதல்)
ஒருவன்—சுக்ரவாரப்பெருமைகண்டுனது சேவை
யுஞ் சொல்லவும் எளிதாகுமோ
மற்ற—ஹா (சிலம்பாட்டுதல்)
ஒரு—சந்தநிதி யாகியே செந்தமிழ்ப் புராணி
யென் சலிப்பெலா மாற்றி யருள்வாய்

மற்—ஹா (சிலம்பாட்டுதல்)
ஒரு—சற்குணி, மெற்குணி, நிர்க்குணி, சதுர் வேத சமயமும் மாரிநீயே
மற்— ஹா (சிலம்பாட்டுதல்)
ஒரு—சிந்தைமிக நொந்துயான்வந்தகுறையுந்தன் முன் செப்பவுங் கேட்கவில்லையோ
மற்—ஹா (சிலம்பாட்டுதல்)
ஒரு—செய்பெற்றதில்லையோ நீதியுணர்வில்லையோ ஜெகமெலாம் பெற்ற தாயே
மற்— ஹா (சிலம்பாட்டுதல்)

சிலம்புடன் பாட்டு

முந்தி முந்தி விநாயகரே ஆம் ஆம்
முக்கணர் மகம்தனே ஓம் ஓம்
கந்தருக்கு முன்பிறந்த ஆம் ஆம்
கற்பகமே முன்னடவாய் ஓம் ஓம்
வேலவர்க்கு முன்பிறந்த ஆம் ஆம்
விநாயகரே முன்னடவாய் ஓம் ஓம்
மாரித்தாய் வல்லவியே ஆம் ஆம்
மகராசி வாருமம்மா ஓம் ஓம்
மாயன் சகோதரியே
மாரிமுத்தே வாருமம்மா ஆம் ஆம்
தாயே துரந்தரியே
சங்சரியே வாருமம்மா ஓம் ஓம்
பெரியபாளை யத்தமர்ந்த
பேச்சியென் னும்மாரித்தாயே ஆம் ஆம்
பெரியபாளை யம்விட்டுப்
பேரரசி வாருமம்மா.
(வர்ணித்துக்கொண் டிருத்தல்.)

பூசாரி—சாமி, ஆடு வரவேண்டியதுதான்.

மணியக்காரர்—கவுண்டரே, ஆட்டைப் பிடித்து வாரும்,

கவுண்டப்பர்—என்ன மணியக்காரரே! மணி ஏழாகப்போகின்றது, போலீசாரைக் காணுமே!

மணி—ஒன்றுந் தெரியவில்லை. எந்நேரமானா லும் வந்துவிடுவார்கள்.

ஒருவன் (மணியக்காரரிடம் ஓடிவந்து) சாமி! பாலசுந்தரம், உங்க பிள்ளை இன்னும் எழெட்டு பேர் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

(எல்லாரும் எழுந்து பார்க்கின்றார்கள்.)
[பாலசுந்தரமும் அவன் சகாக்களும் பாடிக் கொண்டு கோயிலருகில் வருதல்.]

கந்தா காருண்யனே என்ற மெட்டு

ஜீவசாருண்யமே ஜென்ம புண்ணியமே
பூவில்வாழுயிர்கள் புகல் கண்ணியமே

தேவராதி யானவரும் பாவலர் நாவலர் மற்றுங்
காவலர்ஞானிகளோடுமேவியதவராஜர்போற்றும் (ஜீவ)

மாட்சிமை பெறுவதற்குச் சாட்சிநற் கருமமென்றே
சூழ்ச்சியா லறமறிந்துகாட்சியாய்க்கொண்டாடநன்றே
மனிதஜென்மமொன்றே மதிநிறைந்ததொன்றே ()

ஆருயிரனைத்துமே நம் பேருயிர்க் கிணையதாமே
கூறிடும் வேதமொழியைத் தேறிடில் சோதரர்தாமே
அன்பு பூண்டிடுவோம் அருள் சுரந்திடுவோம் (ஜீவ)

மண்ணிலேயுயிர்கள்படும் எண்ணிலாத்துன்பங்கள்கண்டே
புண்ணிய நமது வாழ்வை யெண்ணிடாதுருகிரண்டே
இரக்கம்காட்டிடுவோம் இன்பமூட்டிடுவோம் (ஜீவ)

ஓடியாடி வேடிக்கையாய் நாடி நம்மை நயந்துநல்ல
காடுமேடு கரம்பில்மேய்ந்து கேடுசூதுகள் யாவுமில்லா
ஊமைப்பிராணிகளே உற்றதோழர்களே (ஜீவ)

தேவதைபலி கேட்டதென்று நாவுருசிக்கேவிரும்பி
பாவிகள்பூசாரிகளின் கேவலமொழியை நம்பிக்
கொலையும் புலையும் வேண்டாம் கொடும்பலியும்
வேண்டாம் (ஜீவ)

பாலசுந்தரம்—என் அருமைத் தாய்மார்களே! தந்தைமார்களே! அந்தோ! மானிடராகப் பிறந்த நாம் நம்மைவிட உயர்ந்ததெனக் கொண்டாடும் தெய்வத்திற்குக் குற்றமற்றதும், திக்கற்றதும், பயத்தையுடையதும், தேகமே தன் ஆஸ்தியாகவுடையதும், தனக்குச் சற்று நேரத்தில் வரப்போகின்ற ஆபத்தை அறிந்து கொள்ள முடியாததும், அறிந்தாலும் நம்முடைய மனம் கரையும் வண்ணம் தன்னை உயிர் மீட்கும்படி கேட்கப் பேசும் பாக்கியமற்ற ஊமைப்பிராணியாயும், தடுப்பதற்குக் கரங்களில்லாததாயும், தப்பித்துக் கொண்டோட வலியற்றதுமான இந்த ஏழைப்பிராணியை (கண்ணீர் விடுகின்றான்) அந்தோ! இரக்கமின்றி வாளால் வெட்டப் போகின்றோமே! ஐயோ! எந்தத் தெய்வந்தான் கொலையால் திருப்தியடையும்! பெரியோர்களே! பலி யென்பது காட்டு மிராண்டிகள் செய்கை, பாமர மக்களின் தத்துவம், நம்முடைய

இந்து மதத்திற்குப் பொருந்தாது. வேண்டாம்; பலி வேண்டாம், கொலை வேண்டாம், பூசனிக்காய்களைப் பலி கொடுத்து இந்த ஏழைப்பிராணியை விடுதலை செய்யுங்கள்.

மணியக்காரர்—தலை குனிதல்.

குண்டப்பன்—பூசாரி! ஏன் வேடிக்கை பார்க்கின்றீர்கள். உங்களுடைய வன்னித்தல் வேலை ஆகட்டும். பாதியில் நிறுத்திவிட்டு...(கோபமாகப் பார்க்கின்றார்.)

பூசாரிகள்—சிலம்பு போடுதல்.

அடங்காத மானிடரை
ஆட்டிவைக்கும் மாரிமுத்தே ஓம் ஓம்
துஷ்டர்கள் தென்டனிடத்
துடுக்கடக்கும் மாரிமுத்தே ஆம் ஆம்
பரிகாசம் பண்ணவரைப்
பல்லைப் பிடுங்கிவைப்பாய் ஆம் ஆம்
ஆயி மகமாயி
ஆரணஞ்சொல் காரணியே ஓம் ஓம்
எருமைக்கடா சாவுனக்கு
எக்காலத் தேவியரே ஆம் ஆம்

[ஒருவன் பேரில் ஆவேசம் வருதல்)

ஆ! ஆ! ஹா! அடேய் (பல்லைக் கடித்தல்)

பூசாரி—அம்பா! யாரம்மா தாங்கள்!

ஆவேசக்காரன்—அடே! நான்தாண்டா கிராம தேவதைடா! ஏண்டா இன்னும் காலதாமதம்!

பூசாரி—அம்மா! நடந்துகொண்டுதானிருக்கிறது.

(ஜனங்கள் பிரமித்தல்)

ஆவே—சீக்கிரம் ஆகட்டுமடா? பலியிட்டு ரத்தத்தைக் காட்டுங்கடா!

பூசாரி—அப்படியே தாயே!

குண்டப்பன்—மணியக்காரரே! பார்த்தீரா! பையன்கள் என்னவோ குதிக்கின்றார்களே! பலியை நிறுத்தினால் வாந்திபேதிதான்.

மாணிக்கம்—(ஒருகையை மூடிக்கொண்டு அம்மா தாயே! என் கையிலுள்ளதை உள்ளபடிசொல்லம்மா?

ஆவே—அடே! என்னைச் சோதிக்கவா வந்தாய் (பல்லைக் கடித்தல்.)

மாணி—ஆமாம், இதை உள்ளபடி சொன்னால் தான் உன்னைத் தெய்வமென்று நம்புவோம்.

ஆவே—(மெதுவாகக் கீழே சாய்தல்) உஸ். உஸ்.

பூசாரி—பலியேறிவிட்டது, போங்கையாபோங்க.

(மாணிக்கமும் மற்ற நண்பர்களும் சிரித்தல்.)

கன்னி—(மணியக்காரரைப் பார்த்து) என்ன இன்னும் போலீஸ் வரவில்லையே! மணி ஏழுக்குமேலாகிறதே.

மணி—எந்நேரமானாலும் வந்துவிடுவார்கள். அதற்கொன்றும் சந்தேகமில்லை.

குண்டப்பகவுண்டர்—பூசாரி! ஆட்டண்டைபோ

பாலசுந்தரம்— [ஆட்டைப் பிடிக்கிறான்]

பூசாரி—(பாலசுந்தரத்தைப் பார்த்து) சாமி ஆட்டை விடுங்கள்.

பாலசுந்தரம்—ஆட்டை விடமுடியாது! என்னை வேண்டுமானால் பலிகொடுங்கள். உங்கள் முன்னோர்கள் நரபலியென்று அநாதை மனிதர்களைப் பலிகொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

பூசாரி—ஆட்டைப் பிடித்திழுத்தல்.

பாலசுந்தரம்—(ஆட்டின் கழுத்தைப் பிடித்துக் கொண்டு) என் உயிர் போனாலும் விடமாட்டேன்.

(மாணிக்கமும் வடிவேலும் ஆட்டைசூழ்ந்து நிற்றல்.)

மணி—கவுண்டரே, நீர்போய்ச் சொல்லிப்பாரும்.

குண்டப்—என்னால் முடியாது. அந்தப்பையன்கள் என்மேல்தான் கோபமா யிருக்கிறார்கள். போனால் சண்டைவரும். இரண்டு கட்சியாகும்.

மணி—அதோ போலீஸார் வந்துவிட்டார்கள். தெய்வம் சரியான வேளையில் போலீஸாரைக் கொண்டு வந்துவிட்டது.

போலீஸார்—(மணியக்காரரைப் பார்த்து) சலாம் சார்.

மணியக்காரர்—சலாம்! சலாம்! இப்ரஹீம்! ஏன் லேட் ?

இப்ரஹீம்—(ஹெட் கானிஸ்டேபில்) ஆம் லேட்டாப் போய்விட்டான். அங்கிட்டுப் புறப்படவே 6 மணி அடிச்சுட்டான்.

மணி—ஆனாலும் பாதகமில்லை. பையன்கள் தடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். நீங்கள் இங்கேயே நில்லுங்கள். நான் எச்சரிக்கைசெய்து பார்க்கிறேன்.

ஹெட்போலீஸ்—அப்படியே செய்யுங்கள்.

மணியம்—(ஆட்டினருகில் சென்று பாலசுந்தரத்தைப் பார்த்து) பாலசுந்தரம், ஆட்டைவிடு. இளங்கன்று பயமறியாது என்பதுபோல, தகாத காரியத்தில் ஈடுபட்டுத் தடுக்கிறீர்கள். போலீஸார் வந்திருக்கிறார்கள். அவர்கள் சட்டப்படி ஏதாகிலுஞ் செய்துவிட்ட

பின், அப்பா ஐயா என்பதில் பிரயோஜனமில்லை. உன்னுடைய படிப்புக்கு ஹானியைத் தேடிக்கொள்ளாதே. ஜாக்கிரதை !

பாலசுந்தரம்—

சிறைவரினும் வருக சிறுமைவரின் வருக
குறைவரினும் வருக கொடுமைவரின் வருக
உறையுமுயிர் படுந்துயரை ஒழிப்பதற்கு முயலு
நிறையுடைய மனமாறேன் இதுவுண்மை பெரியோரே.

ஐயா ! நாங்கள் பிடிவாதம் செய்யவில்லை ; நியாயத்தைக் கோருகின்றோம். இந்தத் திக்கற்ற ஏழை ஆடு இவ்விடத்தில் புலிக்கூட்டம் நரிக்கூட்டம் இருப்பின் ஒருக்கணமாகிலும் இவ்வாறு நிர்ப்பயமாய் நிற்குமா? தன் எஜமானனைப்போன்ற மானிடக் கூட்டமென்றன்றோ பயமற்று நிற்கின்றது. இத்தகைய எளிய பிராணியைத் தெய்வங் கேட்டதென்று கொல்லப் போகின்றீர்கள். தெய்வம் ஆடு பலி வேண்டுமென்று யாரிடமாவது நேரே கூறியதுண்டா ? அவ்வாறு தெய்வம் பலியை விரும்புவதாயின் அதன்முன் ஆட்டை உயிரோடு நிறுத்தி, ஆட்டின்உயிரை அத்தெய்வத்தையே வாங்கிக்கொள்ளும்படி வேண்டி நில்லுங்கள். அஃது உயிரை வாங்கிக்கொண்டு உடலைப் பிரேதமாகத் தள்ளட்டும். அவ்வாறு நடந்தால் உயிர்ப்பலிக்கு நானும் உடன்படுகிறேன். இந்தப்பெரும் மானிடக் கூட்டத்தின்முன் ஓர் அநாதரவான எளிய ஆட்டின் உயிர் அநியாயமாய்வெட்டப்படுகிறதென்றால், அதைத் தடுக்காமல் வேடிக்கைப் பார்ப்பதுபேடித்தனமல்லவா? நம் போன்ற மானிடரொருவருக்கு இம்மாதிரியான

நிலைமை ஏற்பட்டுவிட்டால் இந்நேரம் என்ன நடந் திருக்குமென்று தாங்களே சிந்தித்துப் பாருங்கள். வாயில்லாத திக்கற்ற பிராணியாய் இருப்பதனாலன்றோ அதன் உயிரை வாங்க இத்தனை பேருங் கூடிப் போலீஸாரையும் கொண்டுவந்து விட்டீர்கள். இந்த ஆட்டின் உயிரும் என் உயிரும் ஒன்று; உடல் வேறு. ஆகையால் என்உயிர் போனாலன்றி அதன்உயிர்போக என் கண்ணால் பாரேன். (ஆட்டைப் பிடித்துக் கொள்ளுகிறான்)

மணி—இந்தத் தத்துவம் எல்லாருக்குந்தெரியும். (பிள்ளையைப் பார்த்து) அடே! மாணிக்கம்! நீ இவ்வி டத்தைவிட்டுப் போகிறாயா, இல்லையா? குறும்புத் தனங்கள் செய்துகொண் டிருந்தால் வீட்டுவழி நாட விடேன், ஜாக்கிரதை!

ஜனங்கள்—ஐயோ! ஐயோ!! போலீஸார் வந்து விட்டார்களே! இந்தப் பாழும் பிள்ளைகள் ஏனோ இப் படிப்பிடிவாதஞ் செய்கின்றார்கள். (இன்னும் பலவாறு பேசிக் கொள்ளுகிறார்கள்.)

கன்னி நாய்க்கன்—(மாணிக்கத்தைப் பார்த்து) மாணிக்கம்! அப்பா பேச்சைக்கேள். இதெல்லாம்உனக் குத் தகுமா! அப்பாவுக்குக் குறைவு ஏற்படும்.

மாணிக்கம்—நன்றாயிருக்கிறது! என் குறைவு வருகிறது! கொலைசெய்கின்றோமா? கொள்ளையிடுகின் றோமா? கொலை செய்யாதே என்றால் குறைவா? வெகு பேஷ்!

மணியம்--நாய்க்கரே! நீர் இங்கு வாரும்! தறு தலைகளோடு பேசினால் தகாததெல்லாம் வரும். (ஹெட்

கானிஸ்டேபிலைப் பார்த்து) இப்ராஹிம்! என்னால் கூடியவரையில் பார்த்துவிட்டேன். ஒன்றும் முடிய வில்லை. பலியாகவேண்டும். உங்கள் சட்டப்படி அவர் களை அவ்விடத்தைவிட்டு விலகச்செய்து பூசாரியிடம் ஆட்டை ஒப்பித்துவிடுங்கள்.

இப்ராஹிம்—அப்படியே சார். (போலீஸார் விரை வாகப் பாலசுந்தரத்தண்டை செல்லுதல்) தம்பி! ஆட் டுக்கடாவை விடு; பூசை செய்ய மணியாகிவிட்டான்.

பாலசுந்தரம்—தயவு செய்து என்னை ஒன்றுங் கேட்க வேண்டாம். இந்த ஏழைப்பிராணியை அநி யாயமாக வெட்டுவதைப் பார்க்கச் சகியேன். என்னை வேண்டுமானால் சுட்டுவிடுங்கள்.

இப்ராஹிம்—தம்பி! நான் மகம்மதியனாயிருக்கிறான். நீ சொல்றதை நம்பறான்! ஊரல உன் கட்சியில் பலம் இல்ல! நான் பல ஊருங்கள்ள சாமிக்கு ஆட்டுக்கடா நிறுத்தி விட்டத பார்த்துமிருக்கிறான்; கேட்டு மிருக்கி றான்! இந்த ஊரல சுத்த ஹராம் இருக்கிறான். இந்த வருஷம் விட்டுடு. மறுவருஷம் பலம் சேர்த்து வேலை செய்! உம் பக்கம் பலவரான் இல்லை.

பால—அநேகவந்தனம்! தங்கள் காருண்ய குணத் திற்காக ஆண்டவனை ஆசிர்வதிக்கும்படி பிரார்த்திக்கின் றேன். என்மனம் இவ்வுயிரை வெட்டச் சகியாது. ஆகையால் நான் தங்களிஷ்டப்படி நடக்க முடியாத தற்கு வருந்துகின்றேன். தாங்கள் சட்டப்படி செய் வதில் எனக்கு ஆக்ஷேபனை யில்லை.

மணி—இப்ரஹீம் ! கால தாமதம் வேண்டாம். சாம, பேத, தானமெல்லாம் பிரயோகித்தாகிவிட்டது. இனிப் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை.

இப்ரஹீம்—இல்ல ! இல்ல ! இதோ (கானிஸ்டேபில்களைப் பார்த்து) இவரைப் பிடிச்சுக்கொண்டு போங்கள்.

(போலீஸார் பாலசுந்தரத்தைக் கையைப்பிடித்திழுத்தல். பாலசுந்தரம் ஆட்டை விடாது அணைத்துக்கொள்ளல். போலீஸார் ஆட்டைவிட்டுப் பிரித்துப் பாலசுந்தரத்தைத் தூக்கிச்செல்லல். பாலசுந்தரம், ஐயோ உயிர் போகின்றதே என்று கூச்சலிடல். மாணிக்கம் ஓடிவந்து ஆட்டைப் பிடித்தல். ஒரு கானிஸ்டேபில் மாணிக்கத்தை தூர இழுத்துக் துக்கொண்டுபோதல். உடனே சிலம்பொலியும் பறையோசையும் முழங்க வாளேந்திய பூசாரி ஆட்டின்பக்கம்நிற்றல். பாலசுந்தரம் பெருங்கூச்சலோடு, தெய்வமே ! தெய்வமே ! ஐயோ ! என்று புலம்பல், ஆட்டை வெட்டல். போலீஸார் பாலசுந்தரத்தை விட்டுவிடுதல்)

பால—(ஓடிவந்து வெட்டுண்ட ஆட்டின் உடலையும் தலையையும் மடியில் வைத்துக்கொண்டு அழுதல்) ஐயோ ! ஐயோ ! என்னருமை ஊமைச் சகோதரா ; உயிரை இழந்துவிட்டனையா ! என்செய்வேன் ! எவ்வாறு வாழ்வேன்! அந்தோ! உன்வாழ்நாளை ஒழித்துவிட்டார்களே! பாழான தெய்வமே, ஐயோ, கண்ணீர் வடிகின்றதே, அம்மாவென வாயைத் திறக்கின்றதே, உடல் துடிக்கின்றதே, அந்தோ, பாழும் மனிதர்கள் எவ்வாறு மனந்துணிந்து வெட்டுகின்றார்களோ, ஐயோ உயிர் விடும்போது என்ன நினைத்தனையோ, மனைவி மக்



பலியாலிறந்த ஆட்டினைத்தழுவிப் பாலசுந்தரம் புலம்பல்

களைப் பிரிந்தனையே, ஐயோ, ஐயோ, (தலையை முத்தங் கொடுத்துத் தவிக்கின்றான்.) பாழான தெய்வமே! நீ கோயிலிலிருக்கின்றாயா? இவ்வாறு உயிர்களைத் துடிக்கத் துடிக்க வெட்டிப் பலியிடும்படி கேட்கின்றாயா, நீ தெய்வமா, பாழான கல்லே, உடலற்ற முண்டமே, உன்னைத் தெய்வமென்று கூறவும் நாக்குக் கூசுகின்றதே! ஐயோ மாணிக்கம், நம் சகோதரனையிழந்து விட்டோமே! தருமம் அழிந்துவிட்டதே! அதருமம் தலை விரித்தாடுகின்றதே! நாம் பாடுபட்டதெல்லாம் பாழாய்விட்டதே!

புலம்பல்

"பண்டித மோதிலாலைப்பறிகொடுத்தோமே" என்றமெட்டு

பல்லவி.

ஐயையோ தெய்வமே நீயறியவில்லையோ

அநுபல்லவி.

அறியவில்லையோ மனங் கரையவில்லையோ (ஐ)

சரணம்

பொய்மை பிறப்பே பிறந்து
மேன்மை யறமே மறந்து
கையினிலே வாளையேந்திக் கழுத்தை வெட்டுகின்றார்
கழுத்தை வெட்டுகின்றார் மனங் களிக்கப் புசிக்கின்றார்

தொஹரா.

எவ்வுயிர்க்குந் தெய்வமொன்றே
மெனுமுண்மை யறியாத பேதையர்கள்

ஒவ்வாத பெயர்கொடுத்தே ஊருக்கொரு
சிறுதெய்வ மென உண்டாக்கிப்
பவ்வியர்போல் பசப்பிடும் பூசாரிகளின்
பதர்மொழியின் வலையிற்பட்டுச்
செவ்வியரும் மற்றையரும் பலியெனவே
உயிர்மாய்க்குஞ் செய்கையந்தோ.

பாட்டு.

செப்பிடவும் வாய்குளறும்
சிந்திக்கவும் மனம்பதறும்
ஒப்பிடவும் உலகில் பாவம் வேறு இல்லையே
வேறு இல்லையே பழி விடுவ தில்லையே
அப்பப்பா துடிதுடித்து வாய்திறக்குதே
வாய்திறக்குதே கண்ணீர் வடித்தழுகுதே. (ஐ)

(ஜனங்களெல்லோரும் கண்ணீர்விட்டுக் கலங்கல். பாலசுந்தரம் மூர்ச்சையாய்விழுதல். மணியக்காரர், போலீசார் முதலியவர்களும் பிரமித்தல்.)

பூசாரி—(மணியக்காரரிடம் ஓடிவந்து) சாமி! அவர்களைத் தூர அகற்றிவிட்டால் மற்ற வேலைகளைப் பூர்த்தி செய்துவிடலாம்.

இப்ரஹிம்—சீச்சீ! தூரப் போடா! முழுகிப் போய்ட்டான்; ஆடுதின்ன ஜரூரா; திருட்டுப்பேயே!

மணி—போடா எல்லாந் தெரியும்.

இப்ரஹிம்—மணியக்காரே! நான் இன்று மகா பாவம் செய்துட்டான்! நங்கள் ஜாதி கொலை செய்வான்! பசுதி முன் வெட்டறுன் இல்லை. இந்தப்

பிள்ளை ஒருஜீவனுக்குஅழுருன் நமக்கும்துக்கமாய்விட்டான்! நீங்கள் இந்தப் பாவவேலையை விட்டுவிட்டான் நல்லது! துக்கம்வரான்! அழுரான்! நாளைக்குப் பலி வேண்டாம்! இன்னக்கு வெட்ணுன் போதும்.

மணி—என்னமோ எனக்குந் துக்கமாய்த்தானிருக்கிறது. இவ்வளவு கொடுமைக்கும் நான்தான் காரணம். பரம்பரையாய் நடந்து வருவதை, நம்மால் நின்றது என்ற பேர் என் வரவேண்டுமென்றே பிடிவாதமாயிருந்துவிட்டேன். மேலும் ஊரார் என்ன நினைப்பார்களோ வென்று பாராமுகமா யிருந்துவிட்டேன்.

இப்ரஹிம்—என்ன நினைக்கிருன்! தாங்கள் சொன்னுல் ஊரில் கேட்பான்.

மணி—குண்டப்ப கவுண்டரே! கன்னி நாய்க்கரே: அண்ணுமலே! என்னசங்கதி! பார்த்தீர்களா! துக்கத்தை;

ஆடுவெட்டி ஆறுமுகம்—சாமி! இந்தக் கோரமையைப்பார்த்துக்கெண்டா இருக்கிறீங்க! என்ன ஐயா! தன் கூடப் பிறந்தவர் இறந்தாப்போல அழுதங்களெ! எங்க சேரியிலே ஒருபலிகூட இடப்போவதில்லேங்க! நீங்க என்னமே ஒரு மாதிரியாய்...... .. ..

குண்ட—(ஆறுமுகத்தைப் பார்த்து) தெரியுமண்டா! எங்களுக்குப் புத்திசொல்ல வந்துவிட்டாயா!

மணியம்—கவுண்டரே! கோபம் வேண்டாம்! இன்று கல்மனதெல்லாங் கரைந்துபோய்விட்டது.

குண்—என் கூப்பிட்டீர்! அதைச்சொல்லுங்கள்.

மணியம்—ஒன்றுமில்லை. இன்றுநடந்த சம்பவங்களைப் பார்த்துக்கொண்டுதானே யிருந்தீர்! பையன்களை நான் இவ்வளவு உண்மையானவர்களென்று எண்ணவேயில்லை. இந்த ஆட்டைப் பலிகொடுத்த பின்பே அவர்களின் உள்ளம் வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆகையால் இனி நடக்கப்போகும் ஒன்பதுநாள் உற்சவங்களிலும் உயிர்ப்பலிக்குப் பதிலாகப் பூசனிக்காய்களைக் கொடுத்துவிட வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றேன். அநேக இடங்களில் பலியே நின்றுவிட்டதாக ஹெட்கானிஸ்டேபில் இப்ராஹீம் சொல்லுகின்றார். ஆகையால் ஒரே மனதாய்ப் பூசனிக்காய்களையே கொடுத்துவிடலாம். அந்தக் கொலைப் பாவத்திற்கு நாம் ஏன் ஆளாகவேண்டும். அதை உங்களுக்குச் சொல்லவே அழைத்தேன்.

ஜனங்கள்—பேஷ்! பேஷ்! அப்படியே செய்யுங்கள். அநேகருக்குப் பலியிடுவதில் சம்மதமேயில்லை; இப்பொழுது யாவருக்கும் சந்தோஷமே

அருணாஜலம்—சரிதான் அப்படியே செய்துவிடுவோம். கொலை செய்வது பாவந்தான்.

குண்—ஆ! ஹா! கொலைசெய்வது பாவமென்று இன்றுதான் தெரிந்ததா? இத்தனை நாளாக இந்த நியாயம் எங்கு ஒளிந்திருந்ததோ! மணியக்காரரே இன்று வெண்டைக்காயாய் விட்டார். மற்றவர்களைச் சொல்ல வேண்டுமா?

கன்னி—நான் சொந்தமாக ஆடு வெட்டினால் அதைக்கூட நிறுத்தி விடுவீர்களா?

மணி—கோபித்துக்கொள்ளாதீர்கள். இந்த வருடம் பலியின்றி நடத்திப்பார்ப்போம். பின்னல் ஏதாகிலும் தீமை நேரிட்டால் அப்பொழுது பழையபடியே பலி செய்துவிடலாம்.

கன்னி—சரி! சரி! உங்களிஷ்டம். அப்பொழுது கூடத்தான் பலியில்லாமல் செய்தால் உங்களை யாராகிலும் கேட்கப்போகின்ருர்களா! என்னமோ! எல்லாம் கிராமதேவதை பாரம் (போய்விடுகிருர்.)

மணி—பாலசுந்தரம் அழாதே ! உடம்பெல்லாம் இரத்தமப்பா! எழுந்திரு! உன்னுடைய பரிசுத்தமான மனதையும், கல்வியறிவின் மேன்மையையும், பெருந் தன்மையையும், புத்தி கூர்மையையும், இரக்கமுள்ள ஹிருதயத்தையும் உண்மையான உணர்ச்சியையும் இன்றுதான் கண்டேன். இன்று நடந்த கொடுஞ் சம்பவத்திற்காக நான் பெரிதும் வருந்துகின்றேன். உன் அழுகை என் ஹிருதயத்தைப் பிளந்துவிட்டது. உன் விருப்பப்படி இனிப்பலி நடத்துவதில்லை. நீயே முதன்மையாக நின்று இந்த உற்சவத்தைப் பலியின்றிப் பூர்த்திசெய். உன்னுடைய பழைய சகாக்களையும் துணையாகக்கொண்டு விழாவைச் சிறப்பாக நடத்தி அம்பனின் அருளைப் பெறுங்கள். துக்கப்படாதே. எழுந்திரு !

பாலசுந்தரம்—ஐயா! அநேக நமஸ்காரம். இனி வரும் புண்ணியமனைத்தும் தங்களுடையதே. இந்த எளிய சகோதர ஆட்டினிடம் என் மனம் பற்றுக் கொண்டிருப்பதால் இனி இதை எவரிடத்துங் கொடா

மல் புதைத்துவிட விரும்புகின்றேன். ஆகையால் தாங்கள் தயவுசெய்து உத்திரவிடவும்.

மணி—அவ்வாறே செய். இன்னும் 7 ஆடுகள் வாங்கிவிட்டோம். அதையும் உன்னிடமே ஒப்புவித்து விடுகின்றோம்; இந்த நிமிஷத்திலிருந்து இவ் விழாவை உன் இஷ்டம்போலவே நடத்திக் கொள்ளலாம்.

பூசாரி—(ஓடிவந்து) சாமி! முதல் நாள் ஆடு எங்களைச்சேர்ந்ததுங்க. அதை வீணாய் மண்ணில்புதைத்து விடலாமா ?

ஹேட் கா—தூ! நாயே! சாமிக்கு சாமிக் குண்ணு ஆடுவெட்டி எமாத்துறான்! தூ, போடா; ஹராம்!

மணி—அடே! பூசாரி! அந்த ஆட்டை இனிக் கொடுக்கமுடியாது. இனிமேல் பாலசுந்தரம் சொற்படியே நீங்கள் நடக்கவேண்டும். என்னை ஒன்றுங் கேட்கவேண்டாம்.

பூசாரி—சாமி! பலியில்லாமல் அம்மனுக்குக் காப்புக் கட்டக் கூடாதுங்க.

மணி—எல்லாம் கட்டலாம். பல இடங்களில் பலியே நின்றுவிட்டதாம். அதுபோல் இவ்வூரிலேயும் நடத்தவேண்டியதுதான்.

பூசாரி—சாமி! கிராமத்துக்கு ஏதாகிலும்......!

இப்ராஹிம்—அடே! நான் காவலி குடிவாடா, தென்னலி, குடியாத்தம், வெள்ளூர், விருத்தாசலம்,

சோழம்பேடு, சிதம்பரம், தேனும்பேட்டை எல்லாம் உத்தியோகம் செய்திருக்கிறுன் ; அங்கே பலி கின்று பூட்டான் ! ஊர் மழை பெயரான்; பயிர்விளைருன்; சுக மாயிருக்கிறுன் ! கழுதை புளுவுருன் ! மிராசுபறந்து பூடும் கபுர்தார் தூரபோ !

(பாலசுந்தரம் மாணிக்கம் முதலியவர்கள் தங்கள் சகாக்களுடன் வெட்டுண்ட ஆட்டைத் தூக்கிக் கொண்டுபோய்ப் புதைத்தல். ஏராளமான ஜனங்களு டன் மற்ற 7 ஆடுகளையும் ஓட்டிக் கொண்டு வீட்டிர்குச் செல்லுதல்.)

கூட்டத்தில் ஒருவர்—தம்பி இந்த 7 ஆடுகளையும் என்ன செய்யப்போகிருப் ?

பாலசுந்தரம்—சென்னையில் பிஞ்சாரப்போல் (pinjarapole) என்று மிருகங்களின் பாதுகாப்புச் சாலை ஒன்றிருக்கின்றது. அவ்விடத்தில் விட்டுவிடப் போகின்றோம். இனி மனிதர்களுக்கும் மற்ற ஜீவராசி களுக்கும் பொதுவாயுள்ள எமன் வரும்வரை அவை களுக்கு மரண பயமில்லை.

அங்கம் 3 காட்சி 1.

(மணியக்காரர் மகள் பார்வதி நந்த வனத்தில் தனக்குள் சிந்தித்தல்.)

கலியாணம்! கலியாணம்! என்று நம்முடைய பெற்றோர்கள் நம்மைப்பற்றி அடிக்கடி கவலைப்படுகின்றார்கள். நல்லவானகக் கிடைக்கவில்லையே யென்றும் நலிகின்றார்கள். நம்முடையதாயோ செல்வக் குடும்பங்களிலேயே நமக்கு நாயகனைத் தேடுகின்றாள். தந்தையோ தகுந்த கல்விமானகப் பார்க்கின்றார். சுற்றத்தாரோ குலம்! குலம்! என்று நற்குலத்தையே நாடுகின்றார்கள்; நாமோ ஒன்றுங் கவனியாது வாள்ாவிருக்கின்றோம்; முறைப்படி கன்னிகைகள் தங்கள் கண்களுக்கு விருந்தாக அழகுள்ள மணவாளனையே தேட வேண்டும். நம்முடைய மனமோ கலியாணத்தைப் பற்றியோ காதலனைப் பற்றியோ கவலைப்படாமல் அரும் பெரும் நூல்களை வாசித்து மகிழ்வதிலேயே பேரானந்தமடைந்து வருகின்றது. கலியாணம் என்ற வார்த்தையைப்பற்றி வீட்டில் பேசும்போதெல்லாம் செவி சாய்க்காம லிருந்துவிட்டோம். நாம் இவ்வாறிருப்பதைப்பற்றி நம் பெற்றோர் படுந் துயரத்திற்கோ அளவேயில்லை. இன்றோ! ஆ! புத்தகத்தின் பேரிலேயே புத்தி செல்லவில்லையே! பாலசுந்தரத்தின் மேலன்றோ மனம் பாய்கின்றது. காதல் மனதைக் கரைக்கின்றதே! விவாகமெப்பொழுதென என் பெற்றோரைத் தூண்ட என்மனம் வேகமா யெழுகின்றதே! காதலர் காதலிகளின் கதைகளைக் கேட்பினும் படிப்பினும் பித்

தர்களென்றும் பரிகசித்துப் பேசுவேனே. நேற்றும் இன்றும் நான் ஒரு பேதையாகவும் பித்தியாகவும் அன்றோ நின்று விட்டேன். கற்ற கல்வியுங் கை கொடுக்கவில்லையே! ஆ! பாலசுந்தரம்!

இராகம்—சுட்டி தாளம்—ஆதி.

பல்லவி.

நைவ தெதற்கோ அறியேன்—எனைப்
பெற்றோர் தினம் (நை)

அநுபல்லவி.

கையில் வெண்ணெயிருக்க நெய்தனக் கலைவார்போல்
காதலர் இங்கிருக்கக் கணவன் எனக்குத்தேடி (நை)

சரணம்.

இந்த உலகிலவர்க்கே—இணை
யானவர் எவருளர்
சிந்தைக் கிசைந்தபால சுந்தரரை யன்றிநான்
தேடேன் எவரையுமே நாடேன் சத்தியமிதே (நை)

என் பெற்றோர்கள் தேர்ந்தெடுத்தவர்களில் ஒரு வராகிலும் உமக்கிணையாவரோ? உம்முடைய உயர்ந்த கல்வியும் உன்னத நோக்கமும், நிறைந்த சாமர்த்திய மும் சிறந்த அழகும் என் மனதைக் கொள்ளை கொண்டுவிட்டன. விதியின் திருவிளையாடல் வேறு வழியில் விடுமோ? பார்ப்போம்! ஆ, அதோ வள்ளி வருகிறாள்.

(வள்ளி பார்வதியைப் பார்த்துப் பாடுதல்.)

சத்யவதேவசஞலா நாதா என்ற மெட்டு.

இராகம்—காபி. தாளம்—ஆதி.

பல்லவி.

பார்வதி பாராய் சோலை விநோதம்
பகர்வதற் கரிதாமே—இதன் நலமே (பா)

அநுபல்லவி.

நேர்பெறு மல்லிகை சண்பகமுல்லையும்
நிலவு ரோஜாவுமே நிலைபெறச் செழித்தே
நிலமிசை மயில்நடனம் செய்கிறதே (பா)

சரணம்.

வண்டுகள் மலர்களில் சென்றிசை பாடிட
மாங்குயில் கூவிட பாங்குறு தென்றல்
வருவது மிகச்சுகமே—அஞ்சுகமே (வ) (பா)

வள்ளி—என்ன பார்வதி! முகம் வாட்டமடைந்திருக்கின்றது. இரவெலாங் கண் விழித்தவள் போலக் காணப்படுகின்றாய். புத்தகத்தைப் படித்த வண்ணமே பூந்தோட்டத்தை மயிலைப்போல சுற்றி வருவாயே! இன்று வெறுங்கையும் வெறுப்பு முகமாகவும் காணப்படுகின்றாயே! காரணம் மென்ன? (என்னிடம் உன் மனமும் செல்லவில்லை.)

பார்வதி—(புன் சிரிப்போடு) ஒன்று மில்லையே! இரவு படித்த புத்தகம் முடிந்துவிட்டது. ஆகையால் அதை படுக்கையிலேயே வைத்துவிட்டு நேரே தோட்டத்திற்கு வந்துவிட்டேன்.

வள்ளி—நான் நம்பமாட்டேன். புத்தகத்தை தான் படித்துவிட்டாய்! முகம் வாடி யிருப்பானேன்!

பார்வதி—என்ன வள்ளி! நீ கூறுவது வேடிக்கையா யிருக்கிறது. பரிகாசஞ் செய்கின்றாயா?

வள்ளி—உன்னை பரிகாசஞ் செய்ய என்ன இருக்கிறது. கன்னிகைகளுக்குரிய கவலை யேதாகிலும் உனக்குண்டா? நீ ஒரு.........

பார்வதி—(பெரு நகைப்பு.) வள்ளி! நான் ஒரு சந்நியாசினியா? கன்னிகைகளின் கவலை யென்ன?

வள்ளி—ஆமாம்! நீ ஒரு சந்நியாசினியே? உன்னைப் போன்ற வயதுவந்த பெண்கள் அதினும் படித்த பெண்கள் இவ்வாறு இருக்கமாட்டார்கள். விவாகப் பேச்சு வீட்டில் நடக்கும்போதே மனங்களித்து உடல் பூரித்து விளங்குவார்களே! அதிலும் தங்கள் வீட்டில் யாராகிலும் என்னைப்போன்ற தோழிக ளிருந்தால் அவர்களைச் சும்மா விடுவார்களா? தனக்காக தேர்ந்தெடுத்த நாயகரின் அந்தஸ்தையும் அழகையும் பற்றி அடிக்கடி கேட்டு மகிழ்வார்களே! நீ தான் என்னமோ சந்நியாசினி மாதிரியிருக்கின்றாய் புத்தகங்கள் படிப்பதிலும் பத்திரிகை வாசிப்பதிலுமே சதா காலங்கழிக்கின்றாய். பாழான பிரம்மன் உன் தலையில் எப்படி எழுதி யிருக்கின்றானோ?

[பார்வதி பாடுதல்]

பல்லவி.

பேதையென்றே யெண்ணி நீயும் பேசிவிட்டாயே (பே)

அநுபல்லவி.

மாதர் எண்ணப் படிநடக்க
வையகத்தில் உரிமையுண்டோ (பே)

சரணம்.

தந்தை தாய்சொற் படியே பெண்கள்
தாம் நடத்தல் நீதியாமே
எந்த நாளும் அவரென் விருப்பிற்
கிசைந்திடாரே இதற்கென்செய்வேன் (பே)

நான் விரும்பி யிருப்பதைத்தான்
நாடியெவரே முடிப்பார்
என் என்னை நீ பரிகசித்தே
இகழ்கின்றாயே தோழியின்றே. (பே)

பார்வதி—(புன் சிரிப்போடு) வள்ளி ! பெண்கள் தங்கள் பெற்றோர்கள் வழியே ஒழுகவேண்டுமேயன்றி தங்கள் இஷ்டம்போல் நடக்க உரிமையுண்டா ? அவ்வாறு மீறி நடந்தால் குலத்தைக் கெடுக்க வந்தவள் என்று பேசமாட்டார்களா ? அதற்காக அஞ்சியே நான் மௌனம் சாதித்து விட்டேன் . என்னைப் போன்று என் தாயும் தந்தையும் தற்கால உலகப் போக்கை உணர்ந்தவர்களாயிருப்பின் என் இஷ்டம் போல் நாயகனைத் தேடிக்கொள்வேன். இது புதுமையல்ல ! பண்டைகாலங்களிலும் காந்தர்வ மணமும், சுயம்வர மணமும் நடந்ததைப் பல காவியங்களில்

கண்கூடாகக் காணலாம். என் மனமோ இவர்களால் கூறப்படும் பேர்வழிகளினிடம் செல்லவில்லை. என் செய்வது. என் விருப்பப்படியோ இவர்கள் நடக்க மாட்டார்கள். பின்னால் விதிவிட்டவழி யாகிறது! (வருந்தமாய்த் தலையைக் குனிகின்றாள்.)

வள்ளி—(பார்வதியை அணைத்துக்கொண்டு) என் கண்ணே! வருந்தாதே. உன் விருப்பம் எப்படியோ அப்படியே நடத்தி வைக்கின்றேன். இன்றே இந்த குடும்பம் பெரும் பாக்கியத்தைப் பெற்றது. இவ்வாறு முன்னமேயே கூறி யிருக்கப்பட்டதா? உன் தந்தையுந் தாயும் உன் நிலைமையை நினைக்கும் போதெல்லாம் உருகுகின்றார்களே! இனியாகிலும் அவர்கள் வயிற்றில் பாலை ஊற்றம்மா!

பார்வதி—அப்படியா! அந்த வருத்தம் அவர்களிஷ்டப்படி நடக்கவில்லை யென்பதுதானே!

வள்ளி—இல்லை! இல்லை!! அவர்கள் வழியில் வராவிடினும் உன் அபிப்பிராயத்தை யாகிலுங் கூறப்படாதா வென்ற வருத்தந்தான்.

பார்வதி—வள்ளி! நீ ஒரு பைத்தியம். என் தந்தை ஒப்பினாலும் ஒப்புவார். என் தாயாரோ ஒரு நாளும் என் விருப்பத்தை நிறைவேற்றாள். அவள் பணமோ! பணமோ வென்று பணப்பேய் பிடித்தலைகின்றாளே!

வள்ளி—பார்வதி! உன் விருப்பத்திற்கு மாறாக பேசுங்காலம் மலையேறிவிட்டது உன்னைப்பற்றி நேற்று இரவுகூட பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது

உன் தாயார் 'நாம் கூறும் புருஷன் பிடிக்காவிட்டாலும் தன் மனதிலுள்ளதையாகிலும் சொல்லமாட்டேனென்கிறாளே' என்று வருந்தினாள். ஆகையால் உன் உள்ளத்திலுள்ள நாயகனை ஒளியாமல் என்னிடம் உரைத்துவிடு. நான் எப்படியாகிலும் உன் இஷ்ட நாயகனையே உனக்கு மணம்புரிவிக்கச் செய்கின்றேன்.

பார்வதி—வள்ளி! என் விருப்பமும் வினையும் இவ்வூரிலேயே நாயகனைத் தேடியிருக்கின்றன.

வள்ளி—பார்வதி! நீயே பாக்கியவதி! படித்தவள் படித்தவள்தான். தகுந்த நாயகன்! கல்வி, அழகு, வீரம், இளமை, பெருந்தன்மை, சாமர்த்தியம் முதலிய யாவும் ஒருங்கே அமையப்பெற்றவன்.

பார்வதி—(புன் சிரிப்போடு) யார் அவர்? என் உள்ளத்தினின்றும் வெளிவராமுன்னமேயே ஆளை வருணிக்கின்றாயே! ஞானேந்தியமா?

வள்ளி—பார்வதி! ஞானம் வேண்டுமா! யுக்தி ஒன்றேபோதும்! 'இவ்வூர்' என்றபோதே பாலசுந்தரத்தைவிட வேறு யாருனக்கிணையானவர் இருக்கின்றார்கள்.

பார்வதி—வள்ளி! நீயே என் உண்மைத்தாய். என் உயிரினும் உயிராயுள்ள அவரை என்னோடு பிணைப்பது உன் கடமை. என் மனம் இரண்டு மூன்று நாளாகப்படும் வேதனையை இறைவனே யறிவான். இவரையன்றி வேறொருவரை மணப்பதில்லையென உறுதி கொண்டுவிட்டேன். இஃது முடியாவிடில் துறத்தல் அல்லது இறத்தல் என்ற......

வள்ளி—வாயை மூடு! பார்வதி! இறந்தலா? அஞ்சாதே! நானிருக்கும்வரை உனக்கொரு குறைவுமில்லை. அவரையே உனக்கு மணவாளனாகச் சேர்த்து சிறப்பிக்கின்றேன் பார். ஆமாம்! பார்வதி! பாலசுந்தரத்தின் கருத்தேதாகிலும் கண்டு காதல் கொண்டனையா? அன்றி நீயே மனத்திற்குள் நினைத்துக் கொண்டிருக்கின்றாயா?

பார்வதி—நானே காதல் கொண்டுள்ளேன். அவருடைய கருத்தோ ஒன்றும் இதுவரை நான் அவர் மூலம் அறியவில்லை.

வள்ளி—சரி! நாம் முதல் முதல் அவர் உட்கருத்தை அறியவேண்டும். அதன் பின்பே நாம் வீட்டில் வெளியிடல் நலமென நினைக்கின்றேன். உன் யோசனை எப்படி?

பார்வதி—ஆமாம். நான் இரவே அம்மாதிரித் தான் எண்ணினேன். என் கைப்பட ஒரு லெட்டர் எழுதித் தருகிறேன். அதைக்கொண்டு போய் அவரிடங் கொடுத்து அதற்கு சாதகமாக உரைக்க வேண்டியவைகளை உரைத்து அவர் கருத்தையுங் கடிதமூலம் பெற்றுக்கொண்டுவா. ஒரு நாளைக்கு நேரே சந்திக்கும்படியாயும் கூறிவா.

வள்ளி—அப்படியே செய்கின்றேன். நல்ல யுக்தி தான். லெட்டர் எழுதிக்கொண்டுவா.

(இருவரும் அறைக்குப் போதல். லெட்டர் எழுதி வள்ளி பெற்றுக்கொண்டு போதல்.)

காட்சி 2.

[பூசாரிவீட்டில் பூசாரிக்கும் பூசாரி மனைவிக்கும் சம்பாஷணை.]

பூசாரி மனைவி—சாப்பிடலையா? நாழியாயிடுத்தே

பூசாரி—சாப்பிடுறதா ?

கண்ணிகள்.

பூசாரி.

பூசாரி வீட்டினிலே-பானு-பொங்கவைத்த சிமாட்டியே
காசு-வர-மார்க்கமில்லை-கெட்ட காலம் வந்துநேர்ந்ததடி

பூ - மனைவி.

பாளையத்தாள் துணையிருக்க நமக்கு-பணத்திற்கென்ன பஞ்சமையா
ஏழைக்கிரங்கிடுவாள் நமக்கெப்போதுமே துணைபுரிவாள்

பூசாரி.

மாதே பிழைப்பினிலே இப்போ-மண்விழுந்துபோச்சுதடி
மாரியாத்தா பூசை யெல்லாம் மலையேறி போச்சுதடி

பூ — மனைவி.

பூசை தனைக்கெடுத்த—அந்தப்பொல்லாத பாவிஎவன்
நாசகாலம் வந்திடுமே-இந்த நாட்டிலம்மன் கோபம் வந்தால்

பூசாரி,

பாவி பாலசுந்தரந்தான் அம்மன்பலியை நிறுத்திவிட்டான்
காவு கொடுக்காததால் மிகக்-கஷ்டம் வந்துநேர்ந்ததடி

பூ - ம ஜை வி.

பலி யில்லா விட்டாலென்ன-தேங்காய் பழம்-பொங்கல்
படைத்தாலுமே
நலமாகக் காணிக்கையும்-இங்கே-நமக்குவரத் தடை
யில்லையே

பூ சா ரி.

உயிருக் குயிர் கொடுப்பாள்-என்ற-உறுதிகொண்ட
மாந்தரெல்லாம்
உயிர்க்காவு கொடுக்காவிட்டால்-மாரி-உண்மையென
நம்பாரடி

பூ - ம ஜை வி.

என் செய்வோம்—என்ன செய்வோம் இந்த இழவு பய
லுக் கென்ன செய்வோம்
எப்படி இனிபிழைப்போம்-என் இச்சையுள்ள
கண்ணாளரே

பூ சா ரி.

பாவிப் பயலைக்கொல்ல-ஒரு-பக்காவேலைசெய்யவேணும்
பக்கா வேலை செய்துவிட்டால்—மிகப்-பணம் காசு
மிஞ்சுமடி

பூ-மனைவி—அப்படியானு அவன்பேரில் ஒரு சங்கதி இருக்குது! அதை ரகசியமா செய்தா நம்ம தெய்வத்தை ஊரார் விடவே மாட்டாங்க. பலிக்கு ஆடு மந்தை மந்தையாய் வரும். கள்ளு சாராயம் பீப்பா பீப்பாவா வரும். பக்தியும் வளரும்.

பூசாரி—அப்படியா!—என்ன சொல்லு! முடியுமானு இப்பவே செய்து விடுகிறேன்.

பூ-மனைவி—அந்த பாலசுந்தரத்து சின்ன அம்மா இருக்கிருளே அவளுக்கு பாலசுந்தரத்தைக் கொல்ல ணும்னு எண்ண மிருக்கிறது. இந்த சமாச்சாரம் ஒரு மாதத்திற்கு முன்னடி சொன்ன. பையன் லீவுக்கு இங்க வருவான். அவனுக்கு சூன்யம் வைத்துவிட்டா அம்பது ரூபாய் தருகிறேன், இந்த விஷயத்தை உன் ஆம்படையானைக் கேட்டுக்குணுவா என்று சொன்னுள். அதை நான் கேட்டுக்குணுவந்து இரண்டு நாள் பொறுத்து எங்க வீட்டுக்காருக்கு சூன்யம் வைக்கத் தெரியாதாம்; வேறே எங்கேயாவது பாாத்துக்கொள் ளச் சொன்ருரு என்று உன்னைக் கேட்காமலே சும்மா சொல்லிவிட்டேன். இந்த சமாச்சாரத்தை வெளி யிடாமலிருக்க ரூபா 5-ம் என்னிடம் கொடுத்தாள். அது எனக்கு இப்போதான் ஞாபகம் வந்தது. உங்க ளால் எதாகிலுஞ் செய்ய முடிஞ்சா சொல்லுங்க, இப் பவே காரியத்தை முடிச்சு விடலாம்.

பூசாரி—அது சரி! அவன்பேரில் அவளுக் கென்ன விரோதம்.

பூ-மனைவி—என்ன இருக்குது! சக்களத்தி பிள்ளையல்லவா! மேலும் ரொம்ப கெட்டிக்காரனு யிருக்கிறுன். பட்டிணத்தில் படிக்கிறுன். அவுங்க முதலியார் கடன் வாங்கி, கடன் வாங்கி அந்த பையன் படிப்புக்கே அனுப்பி விடுராராம். தன் சொந்தப் பிள் ளைகளை கவனிக்கிறதில்லையாம். அதோடு சொத்தும் சொற்பமாயிருக்குது! இதான்! தெரியாதா?

பூசாரி—ஹொ! ஹோ! சரி! நல்ல யோசனை தான். அப்படியே நடத்திவிடலாம். இப்போ செய்தா

யாருக்குஞ் சந்தேகமிராது. தெய்வந்தான் செய்துடுத்துணு சொல்லுவாங்க! மோர் இருந்தா கொண்டுவா. விஷங்கலந்து கொடுக்கின்றேன், அதை சாப்பாட்டில் விடச்சொல் ஒழிந்து போய்விடுவான்.

(பூசாரி மனைவி அதை வாங்கிக்கொண்டு தயங்கி துக்கமுகமாய் நிற்றல்.)

பூசாரி—ஏண்டி! என்னமோ முழிக்கிறே?

பூ-மனைவி—ஐயோ பாவம்! தாயற்ற பிள்ளை! (தலையைக் குனிதல்.)

பூசாரி—அடி சண்டாளி! பகையாளிக்குப் பாவம் பார்க்கிறாயே! நம்ம வமிசத்துக்கே உலைவைக்கின்ற பாதகனாயிற்றே! இப்ப அவனை விட்டுவிட்டா நம்ம தெய்வத்துக்கே மதிப்புப் போய்விடுமே! நேற்று நம்ம பூசாரி ஜாதியை எளுத்தாளம் பண்ணினதைப் பார்க்கலையா?

பூ-மனைவி—ஆமாம்! ஆமாம்! ஒழியட்டும் இதோ போறேன் (போகின்றாள்.)

காட்சி 3.

[பார்வதி தனியாக ஓர் அறையில் சமாச்சாரப் பத்திரிகைப் படித்துக் கொண்டிருத்தல்.]

பார்வதி—(திடீரென்று பத்திரிகையைக் கீழே எறிந்துவிட்டு) இன்னேரம் வள்ளி நம் காதலரை சந்தித்திருப்பாளா ! என்னமோ ஒன்றுந்தோன்ற வில்லையே ! போனகாரியம் முடிந்ததோ இல்லையோ தெரிய வில்லை. (ஒரு காகிதத்தை எடுத்துத் தன் கண்ணை மூடிக்கொண்டு பென்ஸலால் வட்டக்கோடு போட்டுக் கொண்டே) நம்முடைய காரியம் சித்தியாகி யிருந்தால் இக் கோடு ஒன்ருக்ச் சேரவேண்டும். (பாதி கோடு கிழித்தவுடன்) ஐயோ ! சேராவிட்டால் நம் முயிர் பிரிந்துவிடுமே ! என் செய்வது (பெரு மூச்சு விடுகின்ருள்.) வள்ளி வருகின்ருளா வென்று வெளியே வந்து பார்க்கின்ருள் வள்ளி புன்முறுவலோடு வருகிறதைப் பார்த்துவிட்டுச் சந்தோஷமாக உள்ளே வருகின்ருள்.)

வள்ளி—ப ர்வதி ! கண்டேன் ! ஜெயம்.

பார்வதி—ஆ ஹா ! என் அருமைத் தோழி ! இதற்கிணையாக உனக்கென்ன கைம்மாறு செய்யப் போகின்றேன் ! இதை அணிந்துகொள் (என்று ஒரு மோதிரத்தை வள்ளிகையில் தரிக்கின்ருள்) என்ன நடந்தது ! சற்று விளக்கமாகக் கூறு பார்க்கலாம்.

வள்ளி—(சந்தோஷ முடையவளாகி) பார்வதி நான் கடிதத்தைக் கொடுத்தேன் ! யடித்துப் பார்த்தார் ! சிரித்தார் ! பிறகு என்னை சற்றுநேரம் உற்றுப் பார்த்து, வள்ளி ! இச்செய்கை அபாயகரமானது ! இது வெளியானல் என் நிலைமை என்னகும் ! அதினும் இச்சமயத்திலா ! ஊரில் என்மேல் அநேகர்

பகைமை கொண்டுள்ளார்கள்! என் மனம் அஞ்சுகின்றது! மேலும் பார்வதியின் பெற்றோர்கள் பெரிய இடங்களைப் பார்ப்பார்கள்! கல்வியின் பெருமை அவர்களுக்குத் தெரியாது! இதை மறந்துவிடும்படி பார்வதியை நான் வேண்டினதாகக் கூறிவிடுமென்று பதிலளித்தார். உடனே நான் ஐயையோ! இந்தப் பதிலை அவளுக்குக் கூறினேனானால் அவள் ஆவி நீங்குவது நிச்சயம் என்று கண்டிப்பாய்ச் சொன்னேன். பிறகு சற்று யோசித்து நான் பார்வதியை மணக்க வேண்டுமென்ற கருத்தினாலேயே கஷ்டப்பட்டு வாசித்தது! அந்த நினைப்பின் சக்தியே இன்று இவ்வாறு காதலை உண்டாக்குகிறது! பார்வதியின் மனக் கருத்துப்படி அவளை மணந்து கொள்வதாகச் சொல்லிவிடு என்றுசொன்னார். பிறகு பார்வதிஉன்னைநேரே சந்திக்க விரும்புகிறாளென்றும், நந்தவனத்தில் பகல் 12-மணிக்கு வந்தால் யாரும்இருக்கமாட்டார்களென்றும் நாளையதினம் நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோமென்றும் சொன்னேன். அதற்கும் சம்மதித்துள்ளார்.

பார்வதி—(வள்ளியைக் கட்டித்தழுவி) என் உயிர்த்தோழி! உன் சாமர்த்தியமே சாமர்த்தியம். நாளை என் காதலரைக் காணலாமா?

வள்ளி—ஆஹா! நிச்சயமாகக் காணலாம்! உன் தயார் வருகிறார்கள். நான் போய்வருகின்றேன் பிறகு பேசிக்கொள்ளலாம்.

பார்வதி—செய்! (பத்திரிகை எடுத்து வாசிக்கின்றாள்.)

காட்சி 4.

[பாலசுந்தரம் தன் வீட்டில் தனியாக பார்வதியின் கடிதத்தைப் படித்துக்கொண்டு தனக்குள் சிந்தித்தல்.]

பாலசுந்தரம்—ஆ! பார்வதி! உன் திருக் கரத்தால் வரைந்துள்ள திருமுகம் என் மனதையும் அறிவையுங் கொள்ளை கொண்டது! நான் உன்னை நினைந்தல்லோ இவ்வுன்னத பதிவிக்கு வந்தேன்! உன்னை கைவிடுவேனு! இதோ வருகின்றேன்! அஞ்சாதே! (சற்றுயோசித்து) நாம் சுய உருவோடு சென்றால் யாராகிலும் பார்த்து விடுவார்கள். நாமும் அவள் ஜீவகாருண்ய முடையவளா வென்பதை அறியவிரும்பியுள்ளோம். ஆகையால், மாறுவேடம் பூண்டு செல்வோம்! இவ்வூரில் குருவிக்காரர்கள் இருக்கின்றார்கள், அங்கு சென்று குருவிக்காரவேடம் பூண்டு அவள் முன் ஓர் உயிரைக்கொல்ல முயற்சிப்பதுபோல் பாவனைக் காட்டி அவளைப் பரிக்ஷிப்பதோடு அவள் மனதில் எந்நாளுங் குடிகொண்டிருக்கும்படியாய் இவ்வேடத்தைக் காட்டி மகிழ்விப்போம்!

தாயாரம்மாள்—(பாலசுந்தரத்தின் சிறியதாயார் பாலசுந்தரம் இருக்கும் அறையை நோக்கிக் கையை முறித்து) பாவிமுண்டை! சக்காளத்தி! என் குழந்தைகளுக்கு ஒரு விரோதியைபெற்றுவிட்டு ஒழிஞ்சா! ஊரில்வர வாந்திபேதி இவனுக்கு வரப்படாதா! இவனுக்கெல்லாம் அழ நம்ம தலையில் அந்தப் பிரம்மா எழுதினுன்! (என்று வைதுவிட்டு ஓர் ஓரமாக நின்று

மெல்லியகுரலில்நல்லவள்போல, அப்பா! பாலசுந்தரம் சமையல் ஆகிவிட்டது! வந்து சாப்பிட்டுப்படியப்பா!

பாலசுந்—அம்மா! இதோ வந்துவிட்டேன்! தம்பி சாப்பிட்டானா! பள்ளிக்கூடத்திற்கு நாழிகை யாய்விட்டதே!

தாயாரம்மாள்—அவன் சாப்பிட்டு பள்ளிக்கூடம் போய்விட்டான்! நீ வா!

காட்சி 5.

[பகல் 12 மணிக்குப் பார்வதியும் வள்ளியும் நந்தவனத்தில் பாலசுந்தரத்தின் வரவை ஆவலாக எதிர் பாத்துக்கொண் டிருத்தல்.]

பார்வதி—வள்ளி! மணி 12 ஆயிட்டிருக்குமா?

வள்ளி—ஆயிட்டதே! வந்துவிடுவார்!

பார்வதி—என் ஆருயிர்த்தோழி! நான் காலையிலிருந்து எப்பொழுது 12 மணி அடிக்குமென எதிர் பார்த்தவண்ணமாகவே இன்று காலங் கழித்தேன்! இரண்டொருதடவை கடிகாரத்தையும் வைதேன்! ஒருவேளை வராமற் போய்விடுவாரா? இன்னுங் காணோமே.

வள்ளி—காதல் மயக்கம் அவ்வாறுதாம் இளைஞர்களை வாட்டும்! பகலை இரவென்றும் இரவைப் பகலென்றும் அறிவிழந்து பிணத்தச்செய்யும். அக்காதல் உன்னைமாத்திரம் சும்மா விடுமா?

பார்வதி—அறிவின்மிக்க வள்ளி! நீ கூறுவன யாவும் உண்மையே! நேற்று இரவை நான் கழித்தது ஒரு யுகமாகத் தோன்றிற்று! இரவைப் பார்த்து பாழும் இரவே! காதலர்களுக்கு நீ உற்ற சினேகிதை யாயினும் என்னைப் போன்ற கன்னிகைகளுக்கு நீ பகையாளியன்றோ! மேலும் பகலை எதிர்பார்க்கின்ற என்முன் நீவந்து தோன்றுகின்றாயே! பகலை என் மறைத்தாய் பாவி என்று கடிந்து கூறினேன்! பிறகு சிறிது அறிவு தோன்றியதும் நாணமடைந்தேன் வள்ளி!

[பாலசுந்தரம் குருவிக்கார வேடத்துடன் வந்து ஒரு அணிற்பிள்ளையைப் பிடித்தல்.]

பாலசுந்தரம்—(ஓர் அணிப்பிள்ளையைப்பிடித்து) ஆ! ஆ! ஒரே காடான்! அணிபிள்ளான்! ஆவ்! ஆவ்! ஜோ! திண்டி!

பார்வதி—(திடுக்கிட்டு) ஐயோ! அந்த குருவிக்காரன் ஏதோ ஒரு ஜீவனைப்பிடித்துக் கொல்லுகின்றானே! (ஓடுகிறாள்! வள்ளியும் பின்தொடருகிறாள்) (குருவிக்காரனைப்பார்த்து) அடே! ஐயோ! பாவி அணிற்பிள்ளையை விடடா! கொல்லாதே! பாவம்!

குருவிக்காரன்—அம்மே! எங்க ஜாதி பொழப்பு! அம்மே! காடை, கவுதாரி, மைனா, குருவி, முசல், நரி, பூனை, எலி, இந்த ஜந்துக்களை பிடித்து சாப்பிடுகிற ஜாதியாச்சே! பாவம்ணு சொல்ற! ஹோ!

பார்வதி—பிழைப்பா ! உயிர்க் கொலைசெய்தா பிழைக்கவேண்டும் ! அது மகா பாதகம் ! போன ஜென்மத்தில் இவ்வாறு உயிர்க் கொலை செய்த பாவத்தால்தான் நீ இவ்வாறு ஈனஜாதியில் பிறந்து அலைகின்றாய் ! நாங்கள் உயிர்களிடத்து அன்பாயிருந்ததால்தான் இத்தகைய உயர்ந்த ஜாதியில் எவ்வித குறைவுமின்றி இன்பமாக வாழ்கின்றோம் ! பாவம் ! அந்த அணிற்பிள்ளையைப்பார் ! எவ்வளவு அழகாக இருக்கிறது ! அது நமக்கு என்ன தீங்கு செய்தது ! அதை கொல்ல நினைப்பது தீமையல்லவா ! யோசித்துப்பார் ! உயிர்க் கொலைசெய்து இதைவிட கேவலமான ஜென்மத்தையடைய விரும்புகின்றாயா ? உயிர்க்கொலை செய்யாமல் காட்டிலுள்ள கனி, கிழங்கு, காய்களைத்தின்று எங்களைப்போன்ற மேலான பிறப்பை அடைய விரும்புகின்றாயா ? இவ்விரண்டில் எது வேண்டுமென்பதை ஆராய்ந்து கூறு .

குருவிக்காரன்—அம்மே ! சரும்பை தின்னாமல் வேம்பைத்தின்ன யாரு ஆசைப்படுவாங்க ! உயிர்க் கொலை செய்யாமல் மேலான ஜென்ம மெடுக்கத்தான் விரும்புகின்றேன் !

வள்ளி—அப்பா! குருவிக்காரா! நன்றாக தேர்ந்து சொன்னாய் ! இதனாலேயே நீ நல்ல ஜென்ம மெடுப்பாய் !

குருவிக்காரன்—(வள்ளியைப் பார்த்து) நீங்க ரொம்ப ! ரொம்ப ! கெட்டிக்கார அம்மே ! நான் உயிரைக் கொல்லாமல் காய் கனி சாப்பிட்டா எனக்கு இந்த அம்மாளைக்கூட கலியாணஞ் செய்து வச்சுடுவே!

பார்வதி—சீ! துஷ்டா! என்ன பேச்சு பேசினுய்! வெளியே போ! (கோபமாக) வள்ளி! அண்ணுத்தையைக் கூப்பிடு.

வள்ளி—(குருவிக்காரனை காலிலிருந்து சிரசுவரை நோக்குதல். பாலசுந்தரமெனவறிந்து) பார்வதி! மணி பன்னிரண்டு ஆகிவிட்டது! (இவர்தான் என்று கண்ணுல் சிமிட்டுதல்)

குருவிக்காரன்—பார்வதி! கோபித்துக் கொள்ளாதே! நான்தான் உன் ஆசைக்காதலன் பாலசுந்தரம்! நீ ஜீவகாருண்ய சிந்தையுடையவளா வென்பதை ஆராயவும் வெளியார் யாவருக்கும் நம்முடைய விஷயம் தெரியாமலிருக்கவும் இவ்வேடம் புனைந்து வந்தேன் (என்று புன்னகையோடு நிற்கின்றுன்.)

(பார்வதி! நாணியவளாகி தலைகுனிந்து கொண்டு நிற்கின்றுள். வள்ளி பாலசுந்தரத்தை ஆச்சரியமாசப் பார்த்து நகைத்து தூர விலகிவிடுகின்றுள்;)

பாலசுந்தரம்—பார்வதி! என்ன சிந்திக்கின்றுய்! எனக்கு அரிய தருமம்போதித்து உன்னைப்போன்ற உயர் பிறப்பை எனக்குத் தந்துவிட்டாய்! அப்பிறப்பால் உன்னையே மணக்கும் பாக்கியமும் உண்டாகப் போகிறதல்லவா?

பார்வதி—(அன்போடு பார்த்து) என் ஆருயிர்க் காதலரே! என்னை ஏமாற்றிவிட்டீர்களே! தங்களை உண்மையிலேயே குருவிக்காரன் என்றே நினைத்திருந்தேன். அதனுல் பல இழிவான வார்த்தைகளை உப

யோசகப்பரித்தி விட்டேன்! அதற்காக அடியவளை மன்னிக்கப் பிரார்த்திக்கின்றேன்!

பாலசுந்தரம்—மன்னித்தலா! காதலர்களுக்கு மன்னிப்பும் ஒன்று உண்டா! அவ்வார்த்தைகள் எனக்கு பெருமகிழ்ச்சியை யல்லவோ தந்தது!

பார்வதி—அப்படியா! மிக்க சந்தோஷம்! அந்த அணிற்பிள்ளையைக் கொடுங்கள் பார்க்கலாம்! (வாங்கிக் கொண்டு, ஆ! அணிற்பிள்ளையே! எங்களிருவரை யும் காதலராக்கவேஇவ்வுலகில் பிறந்துவளர்ந்தாயோ? அல்லது போன ஜென்மத்தில் எங்களிருவரின் நட்பினராகவிருந்து எங்கள் மனக்குறையை நிறைவேற்ற முடியாமல் இந்த ஜென்மத்தில் அதனை நிறைவேற்றவே எங்கள் மத்தியில் வந்து தோன்றினையோ! ஒன்றும் தோன்றவில்லையே! (என்று முத்தங் கொடுக்கின்றாள்.)

பாலசுந்தரம்—பார்வதி! உன்னை மணக்க வேண்டியே இவ்வளவு நாளாக நான்வாசித்து உன் பாக்கியத்தால் B. A., ஹானர்ஸிலும் தேர்ந்தேன்! உன்பெற்றோர்கள் என்ன நிலைமையி லிருக்கின்றார்க ளென்று தெரிந்து கொண்டாயா? பெரிய கடிதம் எழுதியனுப்பிவிட்டாயே!

பார்வதி—பெற்றோர்களைப்பற்றி அவசியமில்லை. என் இஷ்டத்திற்குமாறாக அவர்கள் நடக்கமாட்டார்கள். அதற்காக தாங்கள் கவலைப்படவேண்டாம்!

பாலசுந்தரம்—இவ்வளவு தைரியம் உனக்கெவ்வாறு உண்டாயிற்று. இது நியாயமா?

பார்வதி—தைரியமா? தற்கால மாதர் சங்கங் களை உண்டாக்கிற்று! பெண்களுக்கும் ஆண்களைப் போல சர்வ சுதந்தரமும் அளிக்கவேண்டுமென்று பத்திரிகைகளில் எங்கள் கூட்டத்தார் போர்புரிவதை தாங்கள் படித்ததில்லையா! அவைகளே எனக்கு நானே நாயகனைத் தேர்ந்தெடுக்கச் செய்தவை!

பாலசுந்தரம்—நன்று! நன்று!! ஒரு கிராமத் தில் வசிக்கும் ஓர் பெண்ணுக்கு இத்தகைய பேரறிவும் சுதந்தர தாகமும் உண்டாவது அரிது! அரிது! மெச்சினேன்! என் உயிரே! அறிவின் உருவே! என் உள்ளங் குளிர்ந்தது! உன்னையன்றி வேறொரு வரை மணப்பதில்லை யென்று உறுதி கொண்டேன்! அஃதில்லையேல் பிறகு என்னைவிட ஓர் ஒப்பற்றத் துறவி இந்த உலகில் இருக்க மாட்டார்கள்! இது சத்தியம்! சத்தியம்!!

பார்வதி—ஓஹோ! தாங்கள் உயிரோடு வாழ் வீர்களா? நான் அன்றே ஆவியை மாய்ப்பேன்!

பாலசுந்தரம்—ஆ! பார்வதி! உயிரை மாய்த் துக் கொள்வாயா! என்னே அன்பு! (மயக்கமாய்ச் சாய்கிறார்.)

பார்வதி—(நாலாபக்கமும்பார்த்து) பாலசுந்தரத் தைத் தன் கரங்களால் தழுவி, காதலரே! தாங்கள் என்னை இன்றே கொன்று விடுவீர்கள் போலத் தோன்றுகின்றதே! எழுந்திருங்கள். நம்மை ஆண் டவன் கைவிடமாட்டான்! நமதெண்ணம் கைகூடும்! அஞ்சவேண்டாம்! நீங்களும் துறக்கவேண்டாம்!

நானும் இறக்கவேண்டாம்! இன்று அடியேனுக்கு உயிர் பிச்சை கொடுத்தீர்கள்! நாமிருவரும் இப்பேருலகில் இணையற்ற காதலராக வாழவும் ஜீவகாருண்ய மாகிய பேரறத்தை நிலைநாட்டி கடைசியில் எம்பெருமான் திருவடியைச் சேர்ப்பிக்கவும் புண்ணியம் நம்மிடம் நிழல்போல தொடர்ந்திருக்கிறது! எழுந்திருங்கள். அடியாளை வருத்தாதீர்கள்!

பாலசுந்தரம்—(ஆவலோடு பார்த்து) பார்வதி! உன் அறிவை எவ்வாறு அளவிட்டு உரைப்பேன்! காதலிலும் கருணைமொழி! காதலிலும் தருமவார்த்தை! உன்னையடையும் பாக்கியமே என்பாக்கியம்! உன்னையன்றி யான் யாரையும் மணப்பதில்லை அஃது உன்னுடைய முயற்சியாலே நடைபெறவேண்டும். நினைவிருக்கட்டும்! நான் சென்று வருகின்றேன்! அதோ மாணிக்கம் வருகின்றார்.

(மாணிக்கம் வருகிறார்.)

வள்ளி—பார்வதி! அண்ணன் வருகிறார்! குருவிக்காரனைப்பற்றி அண்ணனிடம் சொல்லு!

பார்வதி—(பாலசுந்தரத்தைப் பார்த்து) நீங்கள் போங்கள். போய்விடுங்கள் அப்பா குருவிக்காரரே! ஜாக்கிரதை! எவ்வுயிரையுங் கொலை செய்யாதே! காய் கனி சாப்பிடு!

குருவிக்காரன்—அம்மே! அப்படியே! கொலை செய்யுறது இல்ல!

மாணிக்கம்—(பார்வதியைப்பார்த்து) என்னம்மா! அந்த குருவிக்காரன் இங்கே ஏன் வந்தான்?

பார்வதி—அண்ணு ! நம்முடைய தோட்டத்தில் இந்த அணிற்பிள்ளையைப் பிடித்துவிட்டான் ! நான் ஓடி அந்தக் குருவிக்காரனுக்குத் தருமம் போதித்தேன் ! இதை என்னிடம் விட்டுவிட்டு இனி உயிர்க் கொலை செய்வதில்லையென்றும் காய் கனி கிழங்கு முதலியவைகளையே புசிப்பதாகவும் சத்தியம் செய்து விட்டு சென்ருன் !

மாணிக்கம்—நன்று ! நன்று ! நல்ல அறிவும் கல்வியும் நாகரிகமும், நிறைந்த நம் நாட்டு மக்களையே எங்களால் திருப்ப முடியவில்லை ! நீ ஒரு காட்டு மனிதனை திருப்பினதற்காக உன்னை என்னவென்று புகழ்வது ! அருமை ! அருமை! உன்னுடைய ஹிருதயமே எப்பெருமான் நடம்புரியும் இடமென வறிந்தேன் !

பார்வதி—வெகு வேடிக்கை ! உங்கள் நண்பர் பாலசுந்தரத்தின் ஹிருதயந்தான் அத்தகையக் காட்சிக்கு இடமாகும் !

மாணிக்கம்—உண்மைதான் ! நீ ஒரு சிறு பெண்ணுகவிருந்தும் வெகு தைரியமாக ஒரு காட்டுமனிதனிடம் வெற்றி பெற்றது அருமையல்லவா !

பார்வதி—சரி சரி ! (புன்னகை) அண்ணு ! இந்த அணிற்பிள்ளைக்கு ஒரு கூடு சம்பாதித்துக் கொடுங்கள் ; வளர்க்கப் போகிறேன் !

மாணிக்கம்—ஐயையோ ! பார்வதி ! உன் ஜீவ காருண்யமே பறந்துபோய்விட்டது !

" பூவைகிளி தோகைபுணரன்ன மொடுபன்பா
யாவையவை தங்கிளையினீங்கி யழவாங்கிக்
காவல்செய்து வைத்தவர்கள் தங்கிளையினீங்கி,
போவார்புகழ் நம்பியிது பொற்பிலதுகண்டாய் " என்ற

ஆன்றோர் மொழிப்படி இத்தகைய ஜீவராசிகளைத் தங்கள் இனத்தினின்றும் பிரித்து கூட்டில் அடைப்பவர்கள் அடுத்தப் பிறவியில் தங்கள் இனத்தைவிட்டுப் பிரிந்து அலைவார்களென்பதை அறிபாயோ! அந்த எண்ணத்தை உடனே மறந்துவிடு! அணிற்பிள்ளையை விட்டுவிடு!

பார்வதி—அண்ணு! அடியேனை மன்னிக்க வேண்டுகின்றேன்! இந்த உயரிய தருமத்தை நான் அறியாததால் இவ்வாறு சிந்தித்தேன்! ஐயோ! கிளிப்பிள்ளை! கீரிப்பிள்ளை! மைஞ! முதலிய பறவைகளைக் கூண்டில்வைத்து வளர்ப்பவர்களும் என்னைப் போல் அறியாதவர்களாகத் தானிருப்பார்களோ! என்னமோ! தெரியவில்லை! இனி இப்போதத்தினை பிறற்கு போதிக்க முற்படுவேன். தயவுசெய்து அந்தக் கவியை எழுதித்தாருங்கள்!

மாணிக்கம்—Very Scon! அப்படியே தருகின்றேன். வா வீட்டிறகுப் போகலாம்!

வள்ளி—ஆமா மம்மா! ரொம்ப நாழிகையாகி விட்டது! குருவிக்காரன் ஒரு தருமம் பெற்ருன் நீ ஒரு தருமம் பெற்ருய்! இன்று இருவரும் ஒன்ருய் விட்டீர்கள்!

பார்வதி—(புன்னகையோடு சிரித்துக்கொண்டே) வள்ளி! உன்னாலேயே இவ்வளவும் நடைபெறுகிறது!

மாணிக்கம்—ஆமாம்? ஆமாம்! வள்ளி என்ன சாதாரண பெண்ணா! வெகு புத்திசாலியாயிற்றே!

அங்கம் 5—காட்சி 1.

[தாயாரம்மாள் குமாரன் குணசேகரன் பள்ளியிலிருந்து வீட்டிற்கு வருதல்.]

குணசேகரன்— வீட்டில்நாலாபக்கமும்அம்மா! அம்மா என்று கூப்பிடுதல், ஓ! அம்மாள் இன்னும் வரவில்லை. நம்மோடு வந்த பிள்ளைகளெல்லாம் விளையாட வந்துவிட்டிருப்பார்கள். நாமும் சீக்கிரம் போவோம்! பசி அதிகமாயிருக்கின்றது. பலகாரம் ஏதாகிலும் இருக்கிறதா பார்ப்போம். (தேடி கடைசியில் ஒரு டம்ளரைக் கையில் வைத்துக்கொண்டு) பலகாரம் ஒன்றும் காணோம். இந்த டம்ளரில் நல்ல மோர் இருக்கிறது. இதை குடித்துவிட்டுச் செல்வோம், அம்மா கேட்டால் பூனை குடித்துவிட்டது யென்று சொல்லிவிடலாம்.

(குடிக்கின்றான் மாரை அடைக்கிறது. சிறிதுநேரம் அல்லல்பட்டு இறந்து விடுகிறான்.)

காட்சி 2.

[தாயாரம்மாள் வீட்டிற்கு வரும் வழியில் பேசிக்கொள்வது.]

தாயாரம்மாள்—(தனக்குள்) இன்றுதான் என் மனம் நிம்மதியாக இருக்கும். என்னைப்பிடித்த சனியனும் தொலையும். சக்காளத்திப்பிள்ளையை ஒழிக்க பூசாரி புண்ணியங் கட்டிக்கொண்டான். இந்தப்பாவி படிப்பு படிப்பு என்று எவ்வளவோ பணத்தை வாயில் போட்டுக்கொண்டான். என்பிள்ளைகள் திக்கற்றுப் போல கடக்கிறதுங்க. இன்று இராத்திரியோடு ஒழிஞ்சுபோறான். பூசாரி பெண்டாட்டி கொடுத்த மோரை உறியில் வைத்தேன்! இன்று பாலசுந்தரம் பாவிக்குச் சாப்பாட்டில் ஊற்றி கொன்றுவிடுகிறேன். வீட்டிற்குப் போவோம் (உள்ளே செல்லுகின்றாள்.)

தாயாரம்மாள்—(திடுக்கிட்டு மனதிற்குள்) என்ன கதவுதிறந்திருக்கிறது. பையன்பள்ளிக்கூடத்திலிருந்து வந்துவிட்டானா? (உள்ளே செல்லல்.)

[கூடத்தில் பையன் தலைவிரி கோலமாய் படுத்திருக்கக் கண்டு நடுநடுங்கி உள்ளே போய் உறியைப் பார்த்தல். டம்ளர் கீழே யிருக்கக்கண்டு பயந்தோடி பையனைப் புரட்டிப் பார்த்துப் பிணமா யிருக்கக் காணல்.]

தாயாரம்மாள்—(மனதிற்குள் துக்கித்தவளாகி) ஐயோ! கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழி நமக்கே பலித்துவிட்டதே! தெய்வமே! என்ன செய்வேன்! (மறுபடியும் தேர்ந்து) சரி! இப்பவும் அந்த பாதகனை சும்மா விடுவதில்லை. இந்தப்

பழியை அவன் பேரிலேயே சுமத்திவிடவேண்டும். அதோடு அவனும் ஒழியட்டும் (என்று எண்ணி உள்ளே ஓடி அந்த டம்ளரில் கொஞ்சம் மோர்விட்டெடுத்துக் கொண்டுவந்து பையனின் பக்கலில் மோர் சிந்தினது போன்று டம்ளரை சாய்த்து வைத்துவிட்டு உரத்தக் கூச்சல் போட்டு) ஐயோ! ஐயோ! என் பிள்ளையைக் கொன்றுவிட்டானே! கொன்றுவிட்டானே!

(ஆ என் ஜானகி என்ற மெட்டு)

இராகம்—முகாரி. தாளம்—சாப்பு.

பாலா என் கண்மணியே பாலா மடிந்தனையோ
பாவியினியென் செய்வேனே—மகனே! மகனே!!
மகனே!!!
பால சுந்தரமென்னும் பாதகன் உயிர்வாழ
பாலகன் நீமடிந்தாயே.விதியே! விதியே!! விதியே!!!
நானொன்று நினைத்திட நீயொன்று நினைத்தாயே
நானெவ்விதமாய்வாழ்வேனே-தெய்வமே! தெய்வமே!!
தெய்வமே!!!

[கூச்சல் கேட்டு ஜனங்கள் ஓடிவரல். மணியக்காரரும் மற்றும் பலரும் வீட்டிற்குள் வேகமாய் நுழைதல்.]

மணி—ஐயோ! யார் கொன்றது?

தாயாரம்மாள்— ஐயா! யாரோ விஷம் வைத்துக் கொன்றிருக்கின்றார்களே! (சிந்தின மோரைக் காண்பித்து) இதோ பாருங்கள்! மோரில் விஷங்கலந்து என் கண்மணியைக் கொன்றார்களே! ஐயோ என் பிள்ளையைப் பறிகொடுத்தேனே!

ஜனங்கள்—என்ன அநியாயம்! யார் செய்திருப்பார்கள். எங்கே? முதலியாரைக் காணோமே!

(பையனின் தந்தை நடேசமுதலியார் ஓடிவருதல்.)

தாயாரம்மாள்—(அவரைப் பார்த்ததும்) ஐயோ! ஐயோ! பையனைக் கொன்றுவிட்டார்களே!

நடேச முதலி—(அழுதுக்கொண்டே) அப்பா! என் அப்பா! ஐயோ! குணசேகரா!

மணிய—(நடேச முதலியாரைப் பார்த்து) அழாதீர். வாருங்கள்.

[வெளியே வருதல். மணியக்காரர் ரிபோர்ட் எழுதி வெட்டியான் வசம் போலீஸுக்கு அனுப்புதல்.]

மணிய—(நடேச முதலியாரைப் பார்த்து) பாலசுந்தரம் எங்கே?

நடேச முதலி—(துக்கத்தோடு)எனக்குத் தெரியாதையா.

பக்கத்திலொருவர்—பாலசுந்தரம் அதோ வருகிறார்.

பாலசுந்தரம்—(அழுதுக்கொண்டே) தம்பீ! தம்பீ! என்னைப் பிரிந்தனையா? (உள்ளே சென்று பிணத்தின்மேல் விழுந்தழுதல். அங்குள்ள ஆண்களும் பெண்களும் அழுதல்.)

தாயாரம்மாள்—அடா பாவி! கொன்றுவிட்டுக் கட்டி அழுகிறாயே! விஷம் வைக்க மனம் வந்ததா! சண்டாளா! துரோகி! பங்காளியைக் கொள்ளுயா!

பாலசுந்தரம்—(திடுக்கிட்டு) அம்மா! அம்மா! என்னவார்த்தை கூறினீர்? (காதை மூடிக்கொண்டு வெளியே வருதல்.)

(போலீஸ் வருதல்.)

சப்-இனிஸ்—மணியக்காரரே! பிணம் எங்கே!

மணி—உள்ளே இருக்கிறது. வாருங்கள்.
(எல்லாரும் உள்ளே செல்லல்.)

சப்-இனிஸ்—இந்தப்பையனின் தாய் தந்தையர் யார்?

மணி—(நடேச முதலியாரையும் அவர் மனைவியையும் காண்பித்து) இவர்கள்தாம்.

சப்-இனிஸ்—(நடேச முதலியாரைப் பார்த்து) முதலியாரே! உங்கள் குமாரன் இறந்த காரணம் என்ன?

நடேச—(வருத்தத்தோடு) எனக் கொன்றுந் தெரியாது. இப்பொழுதுதான் வந்தேன்.

சப்-இனி—பையன் விஷத்தால் இறந்திருக்கின்ருன். யாராகிலும் விஷம் வைத்துதான் இருக்கவேண்டும். உமக்கு யார் பேரிலாகிலும் சந்தேகமுண்டா?

நடேச—இல்லை! இல்லை! எனக்கு யார்பேரிலும் சந்தேகமு மில்லை, விரோதிகளுமில்லை.

தாயரம்மா—அடா பாவி! சந்தேகமில்லையா? உனக்கே ஒருதரம் சுட்டிக் காட்டினேனே! வஞ்சனைக் கார தோஷி! இல்லையென்று சொல்லுகிருயே?

சப்-இனி—விஷம் வைத்தவர்கள் உனக்குத் தெரியுமா அம்மா ?

தாயாரம்மாள்—(ஆத்திரத்தோடு) ஆ ! ஹா இந்தப் பாதகன்தான். (பாலசுந்தரத்தைக் காண்பித்தல்.)

நடேச—அடிசண்டாளி ! ஐயையோ ! பழி போடுகின்ருளே !

சப்-இனி—(நடேச முதலியாரைப் பார்த்து) சும்மா இருமையா. அம்மா ! உனக்கு நன்ருகத் தெரியுமா ?

தாயாரம்மாள்—நன்ருகத் தெரியும். அவன் தான் விஷம் வைத்தவன். வேறேயாருமில்லை. இவன் படிப்பிற்கு பணம் வேண்டுமாம். பங்காளியைக் கொன்ருல்தானே அவன் பாகத்தையும் படிப்புக்குச் செலவழிக்கலாம். எனக்கு அநேக நாளைக்கு முன்னுடியே இவன்பேரில் சந்தேகந்தான். இந்த ஊரில் விஷம் ஏது ! பட்டணத்திலிருந்து விஷம் கொண்டுவந்து என் மகனைக் கொன்ற பாதகன் இவனே ! சந்தேகமேயில்லை !

சப்-இனி—மணியக்காரரே கேட்டீரா ?

மணி—(இரு காதுகளையும் மூடிக்கொண்டு) அப்பப்பா ! அவன்பேரில் குற்றமேயிராது ! இது வீண் பழியே. ஆண்டவன்தான் அறியவேண்டும்.

ஜனங்களும், "அடிப்பாதகி" "பழிபோடுகிருயா" வென்று பலவாருகப் பேசுதல்.

சப்-இனி—(பாலசுந்தரத்தைப் பார்த்து) உன் பெயர் என்ன ?

பாலசுந்தரம்—என் பெயர் பாலசுந்தரம்.

சப்-இனி—உன் தம்பிக்கு விஷம்வைத்தவர்கள் யாரென்று தெரியுமா ?

பாலசுந்தரம்—தெரியாது ! எந்தப் பாவி வைத்தானோ ?

சப்-இனி—உன் சிறிய அன்னை உன்பேரில் சந்தேகமாகச் சொல்லுகிறதே.

பாலசுந்தரம்—எல்லாம் வல்ல இறைவனுக்கும் என் ஹிருதயத்திற்குமே என் நிரபராதித் தன்மை விளங்கும்.

சப்-இனி—அம்மா ! நிறையப் படித்த பிள்ளையாயிருக்கிறது. இவர் இத்தகைய இழிவான செய்கையைச் செய்யத் துணிவாரா ?

தாயாரம்மாள்—இந்த ஊரில் எங்களுக்குப் பகை யாருமில்லை. இவனன்றி வேறொருவருங் கொல்ல மாட்டார்கள்.

சப்-இனி—மணியக்காரரே ! என்ன சங்கடமாய்விட்டதே ! பாலசுந்தரம்தான் என்று சொல்லும் போது நான் என்ன சொல்லுவது. பிணமும் பாலசுந்தரமும் ஸ்டேஷனுக்குப் போய்த்தான் ஆகவேண்டும்.

நடேச—ஐயையோ ! பாலசுந்தரத்தின் பேரில் குற்றமேயில்லை. அந்தப் பாதகியேதான் செய்திருப்

பாள். இன்று இவன் பாஸ் செய்தியைக்கேட்டுப் பொருமைகொண்டு இவளே செய்திருப்பாள். இவளே செய்திருப்பாள்! இவளைப் பிடித்துக்கொண்டு போங்கள். பாலசுந்தரத்தின்பேரில் சந்தேகம் வேண்டாம். ஐயையோ! தெய்வமே!

பாலசுந்தரம்—(தகப்பனர் வாயைமூடி) அப்பா! உமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? பெற்றதாய் பிள்ளையைக் கொலை செய்வாளா? என் சிறிய அன்னையின் பேரில் பழி போடாதீர்கள். நானே போய் வருகிறேன். நீர் பயப்படாதீர். சத்தியம் எப்பொழுதும் மாருது. வாயில் வந்தபடியெல்லாம் போசாதீர். என் அன்னையின்பேரில் குற்றமில்லை. நானே குற்றவாளி! என் தம்பியைக் கொன்றவன் நானே! (சப் இனிஸ்பெக்டரைப் பார்த்து) என்னை அரஸ்டு செய்யுங்கள்.

ஜனங்கள்—அந்தோ! என்ன அநியாயம். தெய்வமே! பாலசுந்தரத்தையா விலங்கிடுவது! ஐயோ! அவனு கொலையாளி! அடிப்பாதகி! சக்காளத்தி புத்தியைக் காண்பித்தாயா? (என்று பலவாருகப் பேசுதல்.)

சப் இனிஸ்பெக்டர் பிணத்தை வண்டியிலேற்றி விட்டுப் பாலசுந்தரத்தை விலங்கிடாது காவலோடு ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லுதல்.

மாணிக்கம்—ஆ பாலசுந்தரம்! ஐயோ! ஐயோ! (என்று புலம்பல்.)

(தசரத ராஜகுமார என்ற மெட்டு.)

இராகம்—காப்பி. தாளம்—ஆதி.

[பாலசுந்தரம் மாணிக்கத்தைக் கட்டித்தழுவி]

பல்லவி.

எதுக்கும் நீ கலங்காதே - மிகத் தீதே - நமக்கேதான்
வாராதே

அநுபல்லவி.

நீதிக்கொருகுறைவும் வாராதெப் போதும்
நிச்சய மாகுமிது தான் புவி மீது
ஆதியில் அமைத்திட்ட விதிதவ றுது
அப்பனே இதையுணர்-வாயே-தேறு-வாயே
தேறிநீயே-செல்வாயே (எ)

மாணிக்கம்.

பல்லவி.

உனைப்பிரிந் தெவ்விதம் -'ஐயா - நானும்!- உய்வேன்
மனம் - நைவேன் - என் செய்வேன்.

அநுபல்லவி.

எனக்குகந்த நண்பனேயினி மேலே
எவர்துணை யுடனிருப் பேன்புவி மேலே
மனத்துயர் மிகுத்திட வேயத றுலே
வாடிநொந் திடவிதித் தானே-பிரம்மன் ருனே
புத்தி - மானே - இனி நானே (உனை)

பாலசுந்தரம்.

ஜீவவதையை நீக்க வேதினம்தொண்டு
செய்துவந் தோமுயர் நெறிதனில் நின்று
பாவியர் நம்மீது பகைமிகக் கொண்டு
பதறிட இடர்புரிந் தாரே—சினந் தாரே
நல்ல பேரே—அடையாரே (எது)

மாணிக்கம்.

அறம்புரிந்த நமக்குப் பலனிது தானோ
அநியாயக் காரருக்கு ஜெயம்வந்த தேனோ
சிறந்திட நாம்செய்த தொண்டெல்லாம் வீணோ
தெய்வந் தனக்கிதுசம் மதியோ—நன் மதியோ
தலை விதியோ—நம்—விதியோ (உனை)

காட்சி 3.

[பார்வதி வள்ளியின் வரவினை எதிர்பார்த்துக் கொண்டிருத்தல்.]

(வருத்த முகத்தோடு)

வள்ளி—அம்மா! அந்தப்பாதகி பால்சுந்தரந் தான் விஷம் வைத்துக் கொன்றானென்று பழிபோட்டுவிட்டாள் போலீசார் பாலசுந்தரத்தையும் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

பார்வதி—அம்மா! அம்மா! என்ன அநியாயம்! என்ன பாவம்!

[பார்வதி படுக்கையில் வீழ்ந்து மயக்கமாய்விடல்.]

வள்ளி—(பார்வதியின் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்து எழுப்பி) பார்வதி! அம்மா! அழதே! கடவுள் இருக்கின்றார் நம்மைக்காக்க. பாலசுந்தரம் எப்படியாகிலும் மீண்டுவிடுவார். எழுந்திரு, அப்பா வருவார்.

பார்வதி—வள்ளி (அழுகின்றாள்). கனவா! நான் காண்பது உண்மையா! நான் விழித்துக்கொண்டிருக்கின்றேனா! உறங்கிக்கொண்டிருக்கின்றேனா! அந்தோ ஒன்றுந் தோன்றவில்லையே! ஆ! என் காதலனை கொலையாளி! ஆ! கடவுளே!

(மதன உருவம் என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

எனதுயிர்க்குயிரான தோழி என்செய்வேன் மனம் ஏங்குதே
எதுயிர்தரியாது காதலர்க் கிந்த விதியும் நேர்ந்ததே(எ)

அநுபல்லவி.

காதல் மணஞ்செய் யாமுன் மிகுந்த கவலையடைந்து வாடினேன்
கருணை நிறைந்த அவரோ கொலைஞர் கடவுளே இது நீதியோ (என்)

தேறும் வழியோ காணேன் வள்ளி தீயவர் செய்த சூழ்ச்சியால்
ஜெகத்தில் மகிழ்ச்சி யனைத்தும் தொலைந்து
சீரழிந்ததென் வாழ்க்கையே. (என)

ஆ! கடவுளே! கொல்லாமையைப் போதித்தவர்க்கா கொலைக்காரனெனப் பட்டங்கட்டினாய்? தெய்வமே! காதலின்கதிஇதுதானா! வள்ளி! நான் என் செய்வேன்! நான் பாவியானேனே! என்னை காதலித்த அன்றே அவருக்குக் கஷ்டம்வந்து விளைந்ததே! என்னுடைய பாவமே அவரை இக்கதிக்குள்ளாக்கிற்றே! ஐயோ! என் உடல் பதைக்கின்றதே! ஊன் உருகுகின்றதே! உயிர் ஓட தவிக்கின்றதே! பாவி! (தலையிலடித்துக் கொண்டு) நான் ஏனோ அவரை என் காதலுக் குள்ளாக்கினேன்! அந்தோ! என்னென்ன நினைக்கின்றாரோ! தாங்கவொண்ணா இச்சங்கடத்தை நினைத்து எவ்வாறு கலங்குகின்றாரோ? ஐயோ! ஐயோ! எவர் செய்த தீவினையோ!

வள்ளி—(கண்ணீரைத் துடைத்து) பார்வதி அழாதே! உலகில் துன்பமற்று வாழ்வாரில்லை. வருவது வந்துதான் தீரும். ஆயினும் இது ஒரு சோதனை! 'துன்பமுற்றவர்க்கலால் இன்பமில்லையாதலின்' என்றபடி அவருக்குற்ற இப் பொய்த்துன்பம் பெரும் இன்பமாக மாறப் போகின்றது. நீ அஞ்சாதே. அவருக்கொரு ஆபத்தும் விளையாது. அந்தப் பாதகிதான் இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும். நாம் வருந்துவதில் பிரயோஜனமில்லை. இதன் மர்மத்தைக் கண்டுபிடித்து அவரை மீட்கும் வழியில் முயல்வதே நாம் அவருக்குக் காட்டும்உண்மைஅன்பாகும். அதற்குரிய வழியை யோசிப்போம்.

பாாவதி—(கண்களில் நீர் ததும்ப) வள்ளி! என் உயிர் இனி நில்லாது! அந்தோ! அவரை மீட்கவழி

தேடவேண்டுமென்ருயே, அது நம்மாலாகுமா ? ஆண்களா வெளியே சென்று உளவறிவதற்கு ! பெண்களாகவன்ரோ பிறந்தோம்.

வள்ளி—பார்வதி ! அவ்வாறெண்ணுதே ! நம் பண்டைய சரித்திரங்களில் பெண்கள் ஆண் வேடம் பூண்டுபலகாரியங்களைச் சித்திசெய்திருப்பதைப்படித்ததில்லையா ? அவ்வாறு நாம் ஏன் செய்யப்படாது இக்கொலை அந்தப் பாதகியாலேயே நடந்திருக்கவேண்டும். நாம் மாறுவேடம் பூண்டு துப்பு அறிய ஆரம்பித்தால் உண்மையைக் கண்டு பிடித்துவிடலாம். இதை நாம் கண்டுபிடித்து அவரை மீட்போமாளுல் உலக சரித்திரத்தில் நம்முடைய பெயர் அழியாமல் நிலை பெறும்.

பார்வதி—சரி ! அப்படியே ! நாளையதினத்தின் நிலைமையை யறிந்துகொண்டு மறுநாளிலிருந்து நாம் நம் காரியங்களைக் கவனிப்போம்

வள்ளி—அப்படியே ! கடவுளைப் பிரார்த்திக்கொள். நமக்குப் பயமில்லை. மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. சற்று கண்ணுறங்கு.

பார்வதி—உம் ! பணம் படைத்தவர், வைத்தியம் கொண்டவர், வித்தையுள்ளவா, விசாரமுள்ளவர் முதலிய நால்வர்க்கும் தூக்கமும் வருமா ? எனக்குப் பகலென்றும் இரவென்றும் ஒன்று உண்டா ! என் காதலர் வெளிவரும் நாளன்றி மற்ற நாளெல்லாம் வெறும்நாளே !

வள்ளி—பார்வதி! கலங்காதே! அவரை மீட்கும் விஷயத்தில் கவலையிருக்கட்டும். வீணாக வருந்துவதால் என்ன பயன். முயற்சியால்தான் நடக்கவேண்டும்.

பார்வதி—வள்ளி! அவரை மீட்பதற்கு என் உயிரையுந் தியாகஞ்செய்யத் தீர்மானித்துவிட்டேன். இவ்வுலகில் என் உயிர்க்காதலரை யிழந்தபின் யான் அடையும் பயன் மற்றொன்றுண்டோ ?

வள்ளி—சரி! சரி! முயற்சியுடையார் இகழ்ச்சியடையார், என்றபடி நம்முடைய தியாக முயற்சி நமக்குக் கைமேல் பலனை யளிக்கும். பயப்படாதே! இனி குரல் கேட்டால் அம்மாள் எழுந்துவிடுவார்கள். சற்று கண்ணயர்.

காட்சி 4.

(பாலசுந்தரம் சிறையில் படுத்துக்கொண்டிருத்தல். மாணிக்கமும் மற்ற சில மாணவர்களும் மோட்டாரில் வந்து இறங்குதல்.)

காவலாளி—தாங்கள் யார்! எங்கே வந்தீர்கள் !

மாணிக்கம்—பாலசுந்தரம் எங்கே யிருக்கின்றார்? அவரைப்பார்க்க சிறையதிகாரியிடம் உத்திரவு பெற்றுள்ளோம். இதோ பார் !

காவலாளி—இந்த அறையில்தா னிருக்கின்றார். போய் பாருங்கள்.

மாணிக்கம்—பாலசுந்தரம் ! பாலசுந்தரம் !

பாலசுந்தரம்—(விழித்தெழுந்து) ஓ! வாருங்கள்! வாருங்கள்.

[மாணிக்கமும் மாணவர்களும் பாலசுந்தரத்தைக்கண்டு கண் கலங்கல்.]

பாலசுந்தரம்—வருந்தாதீர்கள். வருவது வந்தே தீரும்! (மாணவர்களைப்பார்த்து) அதற்குள் மதராஸுக்குச் செய்தி எட்டிவிட்டதா? உங்களுக்கு எப்படி தெரியும்!

மாணவர்களில் ஒருவர்—பாலசுந்தரம்! நமது மதத்தின் சீர்திருத்திற்காகவன்றோ இன்று இந்த நிலையில் இருக்கின்றீர்! என்னே தியாகம்! இதோபாரும் (என்று ஒரு சமாச்சார பத்திரிகையை அளித்தல்.)

(பாலசுந்தரம் பத்திரிகையை வாசித்தல். அதில் பலியை நிறுத்தின பாலசுந்தரம், மனிதனை கொலை புரிந்ததாக வழக்கு என்ற தலைப்பின் கீழ் சமாச்சாரம் பொதித்திருப்பதை படித்தார்.)

பாலசுந்தரம்—மாணிக்கம்! இந்த சமாச்சாரத்தை யார் அனுப்பினது!

மாணிக்கம்—எனக்குத் தெரியாது! யாரோ அனுப்பியுள்ளாாகள்.

பாலசுந்தரம்—மிக்க சந்தோஷம்! உங்களை சந்திக்கும் ஓர் பாக்கியத்தை அடையச்செய்த இந்த பத்திரிகை நிருபருக்கு எனது வந்தனம்! நீங்கள் எல்லோரும் மிக்க சிரமப்பட்டே இங்கு வந்திருக்க வேண்டுமென நினைக்கின்றேன்.

மாணவர்கள்—உம்மைவிட சிரமம் பெரியதா? தாங்கள் ஓர் ஆட்டின் உயிருக்காகப் பதறி அழுததை மாணிக்கத்தா லறிந்தோம். இத்தகைய இரக்கமுள்ள தாங்கள் தங்கள் தம்பியைக் கொன்றீர் என்று குற்றஞ் சாட்டப்பட்டு......................(எல்லோரும் வருந்து கிறார்கள்.)

பாலசுந்தரம்—வருந்தாதீர்கள்! இந்த கேஸில் ஒன்றும் பயமில்லை. என்னை அவமானப் படுத்தவே யாரோ சூழ்ச்சி செய்துள்ளார்கள்! பயப்படாதீர்கள்.

மாணவர்கள்—என்னமோ! எங்களுக்கு ஒன் றுந் தோன்றவில்லை. இன்னும் நம் தோழர்கள்வர இருக்கின்றார்கள். எல்லாரும் கேஸ் நடக்கும்தினம் அவசியம் வருவார்கள். வக்கீல் யார்?

பாலசுந்தரம்—வக்கீல் வேண்டாமென்று நினைக் கின்றேன். எதிரியோ என் சிறிய அன்னை. இந்த சங்கடத்தை என்னென்று எண்ணுவது! நமது சினே கிதர்களுக்கும் என் தாழ்மையான வந்தனத்தைச் சொல்லுங்கள்.

ஒரு மாணவர்—வக்கீல் அவசியம் வேண்டும் கேஸ்மிகக் கொடுமையானது! என்னாகுமோ வென் றல்லவோ நாங்கள் கவலைப்படுகின்றோம். என் சகோ தரர் ஓர் வக்கீல். அவரைக் கொண்டுவருகின்றேன்.

பாலசுந்தரம்—ஒன்றும் பாதிக்காது! நீங்கள் அஞ்சாதீர்கள். நானே வாதிக்கின்றேன்.

காவலாளி—சார்! சூப்பிரண்டண்ட் வந்து விடு வார். நீங்கள் சீக்கிரம் சென்று விடுங்கள்.

பாலசுந்தரம்—அன்புமிக்க நண்பர்களே! வந்தனம் நீங்கள் எல்லோரும் போஜனம் செய்துவிட்டு சென்னைக்குப் புறப்படுங்கள். அனைவருக்கும் என் வந்தனம். கேஸினால் எனக்கொன்றும் ஆபத்தில்லை யென்பதை! உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகின்றேன். அச்சம் வருத்தம் எல்லாம் விட்டுவிடுங்கள். (மாணிக்கத்தைப்பார்த்து) மாணிச்கம்! எல்லாரையும் போஜனம் செய்வித்து அனுப்பு!

மாணிக்கம்—ஆ! தயார்செய்துவிட்டுதான் புறப்படடேன்.

மாணவர்கள்—(கலக்கத்தோடு) நண்பரே சென்று வருகின்றோம். நாங்கள் லாயரோடு வருவோம்

பாலசுந்தரம் வந்தனம் சென்று வாருங்கள்!

காட்சி 5.

[ஒரு வீட்டில் ஒரு பையன் ஜுரமாய்ப் படுத்திருத்தல். பூசாரி வேப்பிலை அடித்து மந்திரித்தல்.]

இராமசாமி செட்டி—பூசாரி! என்ன தென்பட்டதா!

பூசாரி—தெரியுதுங்க! இன்னும் கொஞ்சம் மந்திரிச்சா தெரியும்.

பையன் தாயார்—ஐயா பூசாரி! நன்றாக மந்திரியப்பா! ஒரே பிள்ளை (அழுகிறாள்.)

இராமசாமி—சீ கழுதை! ஏன் அழுகிறாய், பூசாரி மந்திரிக்கட்டும், டாக்டரையும் அழைத்துவருகின்றேன்.

பூசாரி—ஐயா ! உங்களுக்கென்ன பைத்தியமா ? டாக்டர் ஏன் ! இது நம்ம ஊர் மாரியாத்தா தோஷம். பிரார்த்தனை செய்துக்கொள்ளுங்க ஒன்றும்பண்ணாது.

பையன் தாயா—அம்மா! உடம்பெல்லாம் சிலிர்க்கிறது. அப்பவே நினைத்தேன்.

பூசாரி—அம்மா ! காலணாவை மஞ்சள் துணியில் முடிந்து குழந்தை கையில் கட்டி அடுத்த வெள்ளிக்கிழமை அம்மனுக்குப் பொங்கலிட்டு ஒரு ஆட்டுக்கடா பலியிடுவதாக சொல்லிக் கொள்ளுங்க.

ரெட்டி—அடே, பூசாரி ! பலிதான் இனிமேல் கிடையாதடா ?

பூசாரி—ஐயா ! ஐயா ! உங்கவாயால் சொல்லாதீங்க. நம்ப ஊர் மாரியாத்தா ரொம்ப பொல்லாதவள். பாலசுந்தரங்கதியைத்தான் பார்க்கறீங்களே ?

பையன் தாயார்—ஆமாம் ! ஆமாம் ! பார்த்தோம். அம்மா ! மாரியாத்தா உனக்கு ஒரு ஆடு அடுத்த வெள்ளிக்கிழமை கொடுத்து விடுகிறேன். பிள்ளையை எழுப்பித்தரணும்.

ரெட்டி—பூசாரி நல்ல ஆடாக ஒன்று பார்த்து வாங்கிவிடு. அம்மன் சங்கதிடை நினைத்தாலே பயமாயிருக்கிறது !

பூசாரி—என்னுங்கோ. தெய்வமில்லாமலா பொழுதுபோவுது பொழுது விடியுது. படிச்சுப்புட்டா ஆயி போச்சா ! மாரியாத்தா மகாகோபக்காரி ! அவங்க அக்கா தங்கச்சிங்க ஒன்பது பேருங்க ! எல்லாம்

பொல்லாதவுங்க. அதிலும் நம்ம ஊர் மாரியாத்தாளை சொல்லவே வேண்டியதில்லை. பையனை மாட்டிவிட்டா பாருங்க. நான்போய்வாரேன்.

அங்கம் 6. காட்சி 1

[பார்வதி குடுகுடுப்பை வேடம் பூண்டு துப்பு அறிதல்.]

குடுகுடுகாரன்—அம்பா பலுக்கடி! அம்பாபலுக் கடி! மாரியாத்தா பலுக்கடி! குடு, குடு, குடு, குடு, குடு இந்த வீட்டிற்கு ஒரு அபாயம் வருது! அபாயம் வருது! மாரியாத்தா பலுக்கடி! ஐயோண்ணு பூர்ரா ஒருத்தி! அம்பா பலுக்கடி! கெட்டகாலம் வந்துடுத் துணு பலுக்கடி மாரியாத்தா! குடு குடு குடு குடு! மாரியாத்தா பலுக்கடி!

இந்த வீட்டுக்கு ஒரு சேதி வருது! கலியாண சேதி! கலியாண சேதி! அம்பா பலுக்கடி! குடு, குடு குடு! குடு!

(பூசாரித்தெரு போதல்)

குடு, குடு, குடு, குடு, குடு, குடு, குடு, கெட்ட காலம் வந்து விட்டது! கெட்டகாலம் வந்து விட்டது! ஆணு ஒன்று பெண்ணு ஒன்றுக்கு ஆபத்து வருது, அம்பா பலுக்கடி! மாரியாத்தா பலுக்கடி! குடு, குடு! குடு, குடு, குடு, குடு.

காட்சி 2.

[பூசாரியும் அவன் மனைவியும் பேசிக்கொண்டிருத்தல்.]

பூசாரி மனைவி—ஐயோ ! என்ன ! குடுகுடுப்பைக்காரன் இப்படி சொல்லிக்கொண்டு போருனே !

பூசாரி—(நடுங்கின வண்ணம்) ஆமாம் ! நான் கூட கவனித்துக் கொண்டுதான் இருந்தேன் ! ஆணு ஒன்று பெண்ணொன்றுக்கு ஆபத்துவருது என்று சொன்னான். என்னமோ ! தெரியல.

பூசாரி மனைவி—ஐயோ ! மாரியம்மா தாயே ! உன்னைப் பெருமைப் படுத்தவே இந்தத் தெரியாத பாலகர் செய்துட்டோம், பாதுகாரம்மா !

(அழுகின்ருள்)

பூசாரி—சீ ! சும்மாயிரு ! குடுகுடுப்பைக்காரன் சொல்லி விட்டா பலித்துபோவுதா ! நமக்கொன்றும் பயமில்லை. அவள் வீட்டில்தானே நடந்தது. நம்மை விசாரித்தா நமக்கொன்றுந் தெரியாதுணு சொல்லி விடலாம். பயப்படாதே. பொழுது விடிந்துவிட்டது. வேலையைப்பார்.

காட்சி 3

குடுகுடுப்பைக்காரன்—அம்பா பலுக்கடி, மாரியாத்தா பலுக்கடி குடு, குடு, குடு, குடு, குடு, கெட்ட காலம் வருது, கெட்டகாலம் வருது ! திருடு வெளியாகுது ! குடு, குடு, குடு ! அறியாத பாலகனின் பழி நீங்

குது ! மாரியாத்தா பலுக்கடி ! குடு, குடு, குடு, குடு, குடு, குடு.

தாயாரம்மாள்—அப்பா குடுப்பைக்காரா ! இங்கே வா.

குடுகுடு—அம்மா ஏன் கூப்பிட்டிங்க.

தாயாரம்மா—என் கூடவே வா ! ஒரு சமாச்சாரம் சொல்றன். பணந்தருகிறேன்.

குடுகுடு—அப்படியே, வருகிறன். மகராஜி வாங்கோ!

[தாயாரம்மாள் குடுகுடுப்பைக்காரனை அழைக்கொண்டு பூசாரி வீடுசெல்லல் வள்ளியும் பின்னே மறைவாகசெல்லுதல்.]

பூசாரி — (தாயாரம்மாளைப் பார்த்து) வாங்க அம்மா ! என்ன சமாச்சாரம், இவனை அழைத்துக் கொண்டு வந்தீரே !

(வள்ளி பூசாரியின் வீட்டுக் கொல்லைப்புறத்தில் துவரை மலார் மத்தியில் மறைந்திருத்தல். தாயாரம்மாள் பூசாரியை அழைத்துக்கொண்டு அவ்விடத்தில் வந்து ரகசியமாகப் பேசுதல்.)

தாயாரம்—பூசாரி! இந்த குடுகுடுப்பைக்காரன் இரண்டு நாளாய் எங்க தெருவில் வரும்போது கெட்டகாலம் வருது, கெட்டகாலம் வருது என்றும், ஐயோண்ணு ஒருத்தி போய் விடுறுணும் சொல்றுன். பயமாயிருக்கிறது. இவன் இப்படியே தெருத்தெருவா கத்தினை ஏதாகிலும் ஊரில் சந்தேக மூண்டாகும். ஆகை

யால் கொஞ்சம் பணங்கொடுத்து இவனை இந்த ஊரை விட்டு அனுப்பிடலாம்னு இங்கே அழைத்துக்கொண்டு வந்தேன்.

பூசாரி மனைவி—ஆம், ஆம், நேற்று எங்க வீட்டண்டை வந்து ஒரு பெண்ணுக்கு ஆபத்துவருது என்று கத்தினன். எங்களுக்கும் பயமாகத்தான் இருக்கிறது.

பூசாரி—மெய்தான். இவனை ஊரைவிட்டு அனுப்பி விடலாம். பணங் கொண்டுவந்தாயா! எனக்கென்ன பயம்ன, நான் விஷமோர் அனுப்பிய டம்ளர் மாரியம் மன் கோயில் டம்ளர். அதில் எழுத்து போட்டிருக் கிறது. அதைப் போலீஸார் எடுத்துக்கொண்டு போய் விட்டாங்க. அந்த எழுத்தை எங்க பார்த்துவிடுகிறாங் களோ வென்ற பயத்தால் இரவும் பகலும் அதே கவலை யாய் இருக்கிறேன். இதன் மத்தியில் இந்தப் பாதகன் என்னென்னமோ கத்துகிறான். சந்தேகமாயிருக்கிறது. இவனைத் தொலைத்துவிடுவதுதான் நல்லது.

தாயாரம்மாள்— இந்தா 2 ரூபாய். இதைக் கொடுத்து, அனுப்பிவிடு. இந்த ஊர்வழி இன்னும் ஒரு மாதம் தலைகாட்டக்கூடாதுனு சொல்லிவிடு.

(எல்லாரும் குடுகுடுப்பைக்காரனிடம் வருதல்)

பூசாரி—அய்யா! இந்தாரும் 2 ரூபாய். இதை வாங்கிக்கோ! இந்த ஊருக்கு ஒரு மாதம் வராதே! அப்புறம் வா. அப்படி செய்தாயானா, அப்ப வேறே ரூபா தருகிறோம.

குடுகுடுப்—சாமி! எனக்கு ரூபா வேண்டாம். ஏதாகிலும் பழைய கந்தை கொடுத்தாபோதும். நம்ப பொண்டாட்டிக்குக் கட்ட சேலையில்லை சாமி! (தாயாரம்மாளைக் காண்பித்து) அந்த அம்மா மனசுவச்சா ஒரு கிழிந்த சேலை கொடுக்கலாம்! மஹாராஜா நீங்க மேலே போட்டுக்குனு இருக்கிற அந்தக் கந்தையைக் கொடுத்தீங்கனு உங்க பேரைச்சொல்லி மேலே போட்டுப்பன்.

தாயாரம்—அப்படியே! பூசாரி, அந்தத் துண்டைக் கொடுத்துவிடு. நான் உனக்கு வேறே புதுசா எடுத்துத்தாரேன். இதோ போய், ஒரு சேலை எடுத்துவாரேன். அய்யா குடுகுடுப்பைக்காரரே! இங்கேயே இரும்.

(தாயாரம்மாள் வீட்டிற்குச் சென்று நல்ல சேலையாக ஒன்று எடுத்துவந்து கொடுத்தல்.)

குடுகுடுப்—அம்மா! சந்தோஷம்! சந்தோஷம்! நல்ல காலம் பிறக்குது! அய்யாவுக்கும் நல்லகாலம்! ஒரு கெட்ட காலம்வர இருந்தது. ஒரு பாவி கெட்ட எண்ணம் வச்சான். அவன் இதோடு அழிந்துவிடுகிறான். உங்களைப் பிடித்த சனியன், சூரியனைக்கண்ட பனிபோல பறந்துபோகுது. குடு, குடு, குடு, குடு.

தாயாரம்—அப்பா! சும்மாயிரு. நீ போய்விடு.

குடுகுடுப்—அம்மா! அப்படியே போய்விடுகிறேன் இன்னும் ஒரு மாதம் பொறுத்து வாரன். ஐயா மனசு வைக்கணும்.

பூசாரி—சரி ! சரி ! நீ போய்வா ! அப்ப வேறே மரியாதை செய்றன்.

குடுகுடுப்—சாமி நமஸ்காரம். அம்மா நமஸ்காரம் போய் வருகிறேன்.

குடுகுடுப்பைக்காரன் போய்விடுகிருன்.

தாயாரம்—பூசாரி ! சம்மன் வந்துவிட்டது. பாலசுந்தரந் தான் விஷம் வைத்தான் என்று சொல்ல நான் தீரமாயிருக்கிறேன்.

பூசாரி—அப்படித்தான் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் கேஸ் உங்களைத் திருப்பிக்கொள்ளும்.

தாயாரம்—ஆமாம், எனக்குத்தெரியாதா ? பொழுது விடிந்துவிட்டது. நான் போய்வருகின்றேன் நீயும் கோர்ட்டுக்குவா.

பூசாரி—அவசியம் வருகிறேன். இங்கே என்ன வேலையிருக்கிறது. அவனைஒழித்தாலன்றி நிம்மதியேது.

அங்கம் 7 காட்சி 1.

[வரதாபுரம் மாஜிஸ்டிரேட் கோர்ட். பாலசுந்தரம் கூண்டில் காவலோடு நின்றிருத்தல். கோர்ட்டில் விசேஷ ஜனங்கள்.]

பென்ச்க்லார்க்—அட்டெண்டர்! தாயாரம்மாளைக் கூப்பிடு.

அட்டெண்டர்—தாயாரம்மாள் ! தாயாரம்மாள் ! தாயாரம்மாள் ! நடேச முதலியார்! நடேச முதலியார்! நடேச முதலியார் ! எல்லோரும் சத்தியம் செய்துக் கொள்ளல்.

கவர்மெண்ட் வக்கீல்—(தாயாரம்மாளைப் பார்த்து) அம்மா ! தங்கள் பெயர்தானே தாயாரம்மாள்.

தாயாரம்மாள்—ஆமாங்க.

கவர்மெண்ட் வக்கீல்—உங்களுக்கு விஷ மிட்டவர் பாலசுந்தரந்தானே ?

தாயாரம்மாள்—ஆமாங்க. அந்த பாலசுந்தரந் தான் !

கவர்-வக்கீல்—சரி! அம்மா அவனும் உன்பிள்ளை தானே.

தாயா—இல்லே ! இல்லே ! என் சக்காளத்திபிள்ளே.

கவர்-வக்கீல்—ஏனம்மா விஷம் வைத்தார்.

தாயா—அவன் பட்டணத்தில் படிக்கிறுன்க. செலவுக்குப் பணம் வேண்டும். பங்காளியைக் கொன்று விட்டால் நாம் நிம்மதியாக செலவு செய்யலாமென்ற கெட்ட எண்ணத்தால் என் பிள்ளையைக் கொன்ருன்.

கவர்-வக்கீல்—இருக்கும் ! இவன்தான் உன்பிள்ளையைக்கொன்ருன் என்பதை எப்படியம்மா அறிந்தீர்கள்.

தாயா—இவன் ஊரிலிருந்து வந்தானேயானல் என் பிள்ளை அண்ணன்! அண்ணன் என்று ஓடுவான். அதைப்பார்த்தும் காதில் விழாதவன்போல் ஒருகை

யால் ஒதுக்கிவிட்டு உள்ளே நுழைவான். நானிருந்தால் என் பிள்ளையைத் தம்பி தம்பியென்று கொஞ்சுவான். நான் இல்லாதவேளையில் கண்டபடி திட்டித் தலையிலடிப்பானும். இதை என்கண்முன் பலதடவைப் பார்த்திருக்கின்றேன். மேலும் எனக்கு ஊரில் ஒருவரும் பகையில்லை. பங்காளியைக் கொல்ல விஷம் வைத்தவன் இவன்தான். வேறுயாருமில்லையென்று உறுதிகொண்டேன்.

கவர்-வக்கீல்—ரொம்ப சரி! படித்தவர்களாயிருந்தாலும் பணம் என்றால் புத்தி மாறுதலடைவதுதான்.

மாஜிஸ்டிரேட்—(பாலசுந்தரம் வக்கீலைப்பார்த்து) ஏதாகிலும் குறுக்கு விசாரணையுண்டா?

பால-வக்கீல்—அம்மா! விஷம் வைத்தது பாலசுந்தரந்தானென்று சக்காளத்திபிள்ளை என்ற விரோதங் காரணமாகத்தானே சொல்லுகிறீர்கள்?

தாயா—இல்லை! உண்மையாகத்தான் சொல்லுகிறேன்!

பால-வக்கீல்—உண்மை என்றால் நேரே பார்த்தீர்களா? யாராகிலும் சாட்சி உண்டா?

கவர்-வக்கீல்—கொலை செய்கின்றவர்கள் பிறர் அறியும்படி செய்யமாட்டார்கள்.

பால-வக்கீல்—அது நமக்குந் தெரியும்! பாலசுந்தரந்தான் விஷம்வைத்தானென்று சொல்பவர் யாருமில்லை. அந்த அம்மாள் சந்தேகத்தால்தான் இருக்கலாமென்று அபிப்பிராயப்பட்டு சொல்லுகின்றார்களென்பதை கோர்ட்டார் ஊன்றி கவனிக்க வேண்டுகிறேன்

மாஜிஸ்டி—(தாயாரம்மாளைப் பார்த்து) அம்மா! உன் பிள்ளையை பாலசுந்தரம் வெறுத்துவந்தா னென்பதற்கு சாட்சி யிருக்கிறதா ?

தாயா—இல்லேங்கோ ! இருந்தாலும் இந்த ஊரில் சொல்லமாட்டாங்க.

மாஜிஸ்டி—என் சொல்லமாட்டார்கள் ?

தாயா—பாலசுந்தரந்தான் இந்த ஊராரை மயக்கி வைத்திருக்கின்ருனே !

பால-வக்கீல்—அம்மா ! அவர் மாயா ஜாலக்காரரல்ல ! ஊரை மயக்குவதற்கு! நீங்கள் உண்மையைப் பேசுங்கள். சாட்சி யில்லேயே !

தாயா—இல்லே.

பால-வக்கீல்—அம்மா ! பாலசுந்தரம் இந்த ஊருக்குவந்து எத்தனே நாளாயிற்று ?

தாயா—15 நாளாயிற்று.

பால-வக்கீல்—அதுவரையில் அந்த விஷத்தை உங்கள் வீட்டில்தானே வைத்திருக்கவேண்டும் ?

தாயா—ஆமாம் ! அவன் பெட்டியில் வைத்துப் பூட்டியிருப்பான்.

பால-வக்கீல்—உன்பிள்ளே இறந்துபோகும்போது நீ எங்கே போயிருந்தாய் !

தாயா—நான் வெளியே சென்றிருந்தேன்.

பால-வக்கீல்—நீ போகும்போது பாலசுந்தரம் வீட்டில் இருந்தாணு ?

தாயா—இல்லை.

பால-வக்கீல்—உன் பிள்ளை இருந்தானா?

தாயா—அவன் பள்ளிக்கூடம் போயிருந்தான்.

பால-வக்கீல்—சரி! நீ வீட்டிற்குப் போகும் போது மணி என்ன?

தாயா—அப்பொழுது தான் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் வீட்டுக்கு வருகிறாங்க.

பால-வக்கீல்—சரி! சரி! நீ வீட்டிற்குச் சென்றதும் பிள்ளை இறந்து கிடந்தானா? இழுத்துக்கொண்டிருந்ததா?

தாயா—இறந்து கிடந்தான்.

பால-வக்கீல்—பாலசுந்தரமும் வீட்டில் இல்லையே?

தாயா—இல்லை.

பால-வக்கீல்—எல்லாம் 10-நிமிஷத்தில் நடந்திருக்கிறதென்பதை கோர்ட்டார் கவனிக்கவேண்டும். பாலசுந்தரத்தை ஒரே கேள்வி கேட்டு என் அபிப்பிராயத்தைக் கோர்ட்டாருக்குச் சொல்லவிரும்புகின்றேன்.

மாஜிஸ்டி—சரி கேளுங்கள்.

பலா-வக்கீல்—பாலசுந்தரம்! உன் தம்பி இறப்பதற்குமுன் நீ எங்கேயிருந்தாய்?

பாலசுந்தரம்—நான் நடுப்பகல் 12-மணிக்குச் சாப்பிட்டு என் தந்தையை அறுவடையாகும் வயலினின்றும் அனுப்பச் சென்றிருந்தேன். பிறகு தம்பி

இறந்த செய்திகேட்டு நானும் அறுவடைசெய்யும் ஆட்களும் ஓடிவந்தோம். அதுதான் எனக்குத்தெரியும்.

பால-வக்கீல் — கோர்ட்டாரவர்களே! இந்தக் கொலையானது பாலசுந்தரம் செய்யவில்லையென்பதற்கு பல சான்றுகளும் நமக்குக் கிடைத்துவிட்டன. பாலசுந்தரம் ஓர் கல்வியாளன். அவன் இந்த சிறு பொருளை விரும்பி தன் உடன்பிறந்தத் தம்பியைக் கொலைசெய்ய மாட்டான். மேலும் அவன் அறுவடையாகும் வயலில் சென்றிருந்தபோது இங்கு விஷம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இது வேறு யாரோ செய்திருக்கவேண்டும். மேலும் அவர் ஜீவகாருண்ய........

குடுகுடு—ஐயா! உண்மையைக் கூறுகின்றேன். நான் நடந்தவற்றை எல்லாம் தீரகண்டு பிடித்துள்ளேன்! உத்திரவு அளிக்க வேண்டுகிறேன். பூசாரி, அவன் மனைவி, தாயாரம்மாள் மூவரையும் பிடியுங்கள்.

[எல்லோரும் பிரம்மித்தல். தாயாரம்மாள் சுற்றுமுற்றும் பார்த்தல்.]

மாஜிஸ்டி—குடுகுடுப்பை! இந்தகேஸைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

குடுகுடுப்--ஐயா! இன்ஸ்பெக்டர் அவர்களே! விஷமோரிருந்த டம்ளரைக் காட்டுங்கள்.

[இன்ஸ்பெக்டர் டம்ளரைக் கொடுத்தல். குடுகுடுப்பைக்காரன் அதை வாங்கி பின்பக்கம் படித்துவிட்டு சிரித்த முகத்தோடு மாஜிஸ்டிரேட்டினிடம் கொடுத்து பின்பக்கம் படிக்கச் சொல்லுதல்.]

மாஜிஸ்—(டம்ளரில் மாரியம்மன் கோயில் என்றெழுதியதைப் படித்துவிட்டு) பூசாரியைக் கோபத்தோடு நோக்கி) அடே பூசாரி! இந்த டம்ளர் யாருடையது?

பூசாரி—ஐயா! கிராமதேவதை கோயிலுது.

குடுகுடுப்—ஐயா! (ஒரு சிறிய துணியை மேஜை மேல் வைத்து) இது யாருடையது விசாரியுங்கள்.

மாஜிஸ்—(பூசாரியைப் பார்த்து) இந்தத் துணி யாருடையது?

பூசாரி—(நடுநடுங்கி) என்னுடையது தான் சாமி!

குடுகுடு—(ஒரு சேலையை யெடுத்து தாயாராரம்மாளைப் பார்த்து) இது யாருடையது சொல்.

தாயாரம்மாள்—என்னுடையது தான்.

குடுகுடு—(மாஜிஸ்டிரேட்டைப் பார்த்து) ஐயா! நான் கொண்டுவந்த அடையாளங்களும் சொந்தக்காரர்களும் ருஜுவாகி விட்டார்கள். இனி விஷம் வைத்த குற்றவாளிகளின்னவர்களென்பதைப்பற்றி உள்ளங்கை நெல்லிக்கனி போல நான் சொல்லாமலே யாவருக்கும் விளங்கும். ஆயினும் அதையும் சற்று விரிவாக விளக்கி விடுகின்றேன். நான் முந்தாநாள் காலை 4 மணிக்கு இவர்கள் தெருவில் கேஸ் சமபந்தமான சில விஷயங்களைக் கூறிக்கொண்டே சென்றேன், நேற்று அவ்வறே 4 மணிக்கு சென்றேன். அப்பொழுது இந்த தாயாரம்மாள் என்னை அழைத்துக்கொண்டு போய் பூசாரி வீட்டுத் திண்ணையில் உட்கார வைத்து விட்டு

உள்ளே சென்றாள். இவர்கள் மூவரும் பின் பக்கம் கொல்லையில் ஏதோபேசிக் கொண்டிருந்தார்கள். அதை ஒரு மாது கேட்டிருந்ததால் டம்ளர் மாரியம்மன் கோயி லுடையதென்றும் இவர்களே விஷம் வைத்தவர்க ளென்றும் விளங்கிற்று. இப்பொழுதே அந்த மாதை யும் சாட்சியாக நிறுத்துகிறேன். பிறகு இவர்கள் மூவரும் என்னிடம் வந்து இரண்டு ரூபாயைக் கொடுத்து ஊரை விட்டுப் போகும்படியும், ஒரு மாதம் வரையில் இவ்வூரில் தலைகாட்டக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டார்கள். இக்காரணத்தாலேயே இவர் களே இக்கொலைக்குக் காரணமா யிருக்க வேண்டுமென நிச்சயித்துக் கொண்டு இந்த சேலையைத் தாயாரம்மா ளிடமும், இந்த வேஷ்டியைப் பூசாரியிடமும் பெறறுக் கொண்டேன். என்னை தெருப்பக்கம் விட்டு விட்டுக் கொல்லைப்புறம் சென்று பேசியபோதே டம்ளரின் இர கசியமும், விஷம் அனுப்பிய விபரமும் வள்ளியெனும் அப்பெருமாட்டியால் அறியப்பட்டன. உலகில் உண் மைக்காகவும் நியாயத்திற்காகவும் பாடுபடும் பெரியார் களுக்குப் பல சங்கடங்கள் பழவினையின் வலியால் வருவ துண்டு. அவ்வாறே கொல்லாமையெனும் உய ரிய கொள்கையை உலகில் பரப்ப வெண்ணங்கொண்டு உழைத்த உத்தமரும் என் உயிர்க் காதலருமாகிய (பாலசுந்தரத்தைக் காண்பித்து) அவ்விளைஞரின் நிர பராதியான தன்மையை விளக்கவும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டியும் இப்பெருமாட்டியின் துணை யால்யான் இம்மாறுவேடம்புனைந்து துப்பறியலானேன். என் எண்ணத்தைப் பூர்த்தி செய்யத் துணையாய் நின்ற எல்லாம்வல்ல இறைவன் திருவருளை யென்றும் மற

வேன் ! (என்று வேடத்தைக் களைந்து நிற்றல்.) குடுகுடுப்பை வேடம் மறைந்து ஒரு இளம் பெண்மணியாக நிற்றலைக்கண்டு எல்லாரும் ஆச்சரியப்படல்.)

பாலசுந்தரம்—(ஆச்சரியமும் புன்சிரிப்பும் உடையவனாய்) ஆ ! பார்வதி ! நீயா !

பார்வதி—ஆமாம் ! அன்று நீர் குருவிக்காரனாக வந்து என் ஆருயிரை உடலில் நிறுத்தினீர் ! இன்று நான் குடுகுடுப்பையாக வந்து உமது உடலில் எனது ஆவியை நிறுத்தினேன்

மாணிக்கம்—பார்வதியா! என் தங்கையா ஆஹா! என்னே வீரம் ! என்னே தியாகம் ! நீயே உலகில் அழியாப் புகழடைந்தனை ! நான் ஆணாய்ப் பிறந்தும், என் உயிர்தோழனைக் காக்க ஒரு வழியுந் தோன்றாமல் திகைத்தேன்.

மணியக்காரர்—என்னருமைக் குமரியா ! பார்வதி ! மெச்சினேன். “பெண்ணருங் கலமிது பெருதன் மானுடர்க்கு எண்ணருந் தகைத்து” என்ற ஆன்றோர் மொழியின் உண்மையை என் வயிற்றிற் பிறந்த உன்னிடமே அறிந்தேன். அருமை ! அருமை !! அரிய தொண்டு செய்தனை ! உலகோர் புகழும் உத்தம நாயகனைத் தேடிக்கொண்டனை. உன் பாக்கியமே பாக்கியம். மங்களம் உண்டாகுக.

கோர்ட்டில் பலரும் பார்வதியைப் பாராட்டல், பூசாரியும், பூசாரி மனைவியும், தாயாரம்மாளும் முகம் சிறுத்துத் தலையைக் குனிந்துக்கொண்டு நிற்றல். எல்லோரும் மூவரையும் பழித்தல்.

மாஜிஸ்டிரேட்—(ஆச்சரியத்தோடு) மணியக்கார ரரே ! தங்களுடைய குமாரத்திதாஞ ?

மணி—ஆம் ! என்னருந் திருக்குமாரத்தியே !

மாஜி—நல்ல அறிவாளி ! இம்மாதிரி யுக்தி பல ருக்கும் வருவதரிது. உலகில் உத்தமராகவும் உயர்ந் தோராகவும் !பிரகாசிக்கக் கூடியவர்களுக்கே இவ்வித ஞானமும் யுக்தியும் தோன்றும். பாலசுந்தரமும் பார் வதியும் இவ்வுலகில் சிவனும் சக்தியும்போல வாழ்வார் களாக.

(எல்லோரும் ஆரவாரம் செய்து களித்தல்.)

மாஜி—அடே ! பூசாரி இனி நடந்ததை நடந்த வாறே சொல்லிவிடு.

பூசாரி—சாமி ! எனக்கொன்றுந் தெரியாது. அந் தத் தாயாரம்மாள் பாலசுந்தரத்தைக் கொல்ல சூன்யம் வைக்கும்படி என்னைக் கேட்டாள். எனக்கு சூன்யம் வைக்கத் தெரியாதென்று சொல்லிவிட்டேன். பிறகு சும்மா வற்புறுத்திஞள். பாவி யான் புத்தியில்லா மல் விஷங் கொடுத்துவிட்டேன்.

மாஜி—பாலசுந்தரத்தைக் கொல்லவேண்டி விஷங் கொடுத்தாயா ?

பூசா—ஆமாம் சாமி ! அந்தப் பாதகியால்தான்.

மாஜி—அடடா? பாலசுந்தரத்தின் பேரில் உனக் கென்ன விரோதம் ?

பூசா—சாமி ! எங்க சாமியின் பேரைக் கெடுத்து எங்க பிழைப்பிலும் மண்ணைப் போட்டாருங்க. அந்த



பார்வதி கோர்ட்டில்தான் துப்பறிந்ததை வெளிப்படுத்தல்.

விரோதம் என் மனதில் கொஞ்சம் குடிகொண்டிருந்தது. இச் சமயத்தில் இந்த அம்மாளும் என்னைத் தொந்தரை செய்தார்கள். நானும் பொறுமையால்...
....

(எல்லாரும் பிரமித்தல்.)

மாஜி — உங்கள் சாமிக்குப் பலி யிடக்கூடாதென்று தடுத்ததற்கா ஆளைக்கொல்ல சூழ்ச்சி செய்தனை? துஷ்டா! உங்கள் சாமி இன்று உன்னைக் காக்க வருகின்றதா பார்ப்போம். (தாயாரம்மாளைப் பார்த்து) உன் பிள்ளைக்கு விஷங் கொடுத்தவள் நீ தானே!

தாயாரம்மாள் — இல்லை சாமி! நான் பாலசுந்தரத்தைக் கொல்ல வேண்டுமென்று போனவருடம் எண்ணினதுண்டு. இந்த வருடம் இந்தப் பூசாரிப் பாவியாலேயே இந்தக் கொடுமையைச் செய்ய உடன்பட்டேன். அது என்னையே கெடுத்துவிட்டது. நான் விஷமோரை உறியில் வைத்துவிட்டு வெளியே சென்றிருந்தேன். அவ்வமயத்தில் என் பிள்ளைவழக்கம்போல மோரென்று அவ்விஷமோரைக் குடித்துவிட்டு இறந்துவிட்டான். நான் வீட்டிற்குத் திரும்பி வந்தபின் இந்தக் கோலத்தைக்கண்டு துக்கித்தவளாகி. பொறுமையினாலும் புத்தியீனத்தாலும் என் சக்களத்திப்பிள்ளையின்பேரில் வைத்துவிட்டேன். பாவியாகியயான் செய்த அடாத செய்கையை மன்னிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாஜி — மன்னிப்பதா! உன்னோடு பூசாரிமனைவி என்ன செய்தாள்?

தாயா—எங்களுக்குத் தூது நடந்தாள்.

மாஜி—தொலைத்து விடுகின்றேன். மன்னிப்பா? (பூசாரியைப் பார்த்து) அடே பூசாரி! இதுவரை தாயாரம்மாள் சொன்னவைகள் உண்மைதானே.

பூசாரி—(தலையைக் குனிந்துகொண்டு) புத்தியில்லாமல் செய்துவிட்டோம் சாமி!

மாஜி—சரி! நான் இனி என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றேன். இந்தக் கேஸில் குற்றவாளியென குற்றஞ் சாட்டப்பட்ட பாலசுந்தரம் நிரபராதியென ஸ்ரீமதி பார்வதி அம்மாளால் துப்பறிந்துள்ள ருசுக்களாலும், கொலையாளிகளின் வாக்குமூலத்தாலும் பாலசுந்தரத்தை விடுதலைசெய்து பூசாரி, பூசாரி மனைவி, தாயாரம்மாள் முதலிய மூவருமேஇக்கொலைக்குக்காரணமென ருசுவாகிறபடியால் மூவரையும் செஷனுக்குக் கமிட் செய்கின்றேன்.

மணி:

(பூசாரியும், அவன் மனைவியும், தாயாரம்மாளும் புலம்புதல். ஜனங்கள் "பாலசுந்திரத்திற்கு ஜே" என்றாரவாரஞ் செய்தல். பிறகு கோர்ட்டு கலைந்துஎல்லோரும் பாலசுந்தரத்தையும் பார்வதியையும் வாழ்த்திக் கொண்டே சந்தோஷமாகக் கிருஷ்ணபுரம் மணியக்காரர் வீட்டில்போய் சேர்தல். மணியக்காரரும் எல்லாரையும் வரவேற்று) சகோதரசகோதரிகளே! எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் சத்தியமே ஜெயம் என்ற ஆன்றோர் மொழிபொய்க்காது சத்தியம் ஜெயத்தை யளித்து, அசத்தியம் அபஜெயத்தையும் அளித்

திருக்கிறது இனி நாம் குறைவாக நிறுத்திவைத்திருந்த மாரி திருவிழாவைப் பலியின்றி விழாச்செய்து என் செல்வக்குமாரத்தி சௌபாக்கியவதி பார்வதிக்கும், அறிவாலுங் கல்வியாலு முயர்ந்து அழியாப் புகழோடு விளங்கும் சிரஞ்சீவி பாலசுந்திரத்திற்கும் திருமணமியற்ற நிச்சயித்திருக்கின்றபடியால் யாவரும் ஷெ சுப காரியங்களுக்கு விஜயம் செய்து என்னைக்கௌரவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(பார்வதி திடீரென்று எழுந்து.)

பார்வதி—தந்தையே! பெரியோர்களே! இன்று உங்கள் முன்னிலையில் அறியாச் சிறுமியாகிய யான் ஒரு உண்மையை விளக்க முன்வந்துள்ளேன். அதாவது நம்முடைய கிராமத்தில் ஏற்பட்ட இப்பெரும் விபத்திற்குக் காரணம் சிறு தெய்வ வழிபாடேயாகும். இத்தெய்வங்கள் போலித்தெய்வங்களென்றும், அவைகளை வணங்குவது நம்முடைய இந்துமார்க்கத்தின் உண்மைத் தர்மத்திற்குவிரோதமென்றும், அவைகளை ஒழித்தலே நலமென்றும் இராமலிங்கர்,

“ நலிதரு சிறிய தெய்வ மென்றையோ
நாட்டிலே பல பெயர் நாட்டி
பலிதர வாடுபன்றி குக்குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போவதுங் கண்டே
புந்தி நொந்துள நடுக்குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்ட காலத்தினும் பயந்தேன்.

என்றும் திருவருட்பாவில் இகழ்ந்து வெறுத்துப் பாடியுள்ளார். இவ் வுண்மையைக் கடைப்பிடித்தே நாமும் நம்மூடைய கிராமத்திலுள்ள கிராம தேவதையை யெடுத் தெறிந்துவிட்டு அவ்வாலயத்தில் வேறொரு உண்மைப் பொருளைத் தெய்வமாக ஸ்தாபித்து வணங்கவேண்டும். அப்பொருள் யாதெனின்,

ராகம் புன்னாகவராளி.

(1) நாட்டிலே மிக மேன்மை
யாதென்றதேடி—ஓடி
நானலைந்தே னெங்குமொரு
பித்தி போலாடி।
கேட்டே நீதிஸ்தலங்க
ளெங்குநின்றேன்—அங்கு
கிளத்தினர் சட்டத்தையோ
விட்டுச்சென்றேன்.। (நா)

(2) ஓதுங் கல்விச்சாலைகளில்
நம்பி நுழைந்தேன்—அங்கு
உரைத்தார் புத்திக்கூர்மையே
ஓதுங்கிவந்தேன்
தீதுதீரறிவுடை
யாரிடங் கேட்டேன்—அவர்
தீரமாய் சத்திய மென்றார்
திரும்பிவிட்டேன். (நா)

(3) அறிவிலா னெதிர்பட்டான்
குறை அறைந்தேன்—அவன்

ஆடிக் களியாட்ட மென்றான்
மனமுறிந்தேன்
சிறந்த பேரழகிளம்
மாதைக்கண்டேன் — புன்
சிரிப்புடன் காதல் என்றாள்
வெட்கமுண்டேன். (ந)

(4) ஆண்மையாகச் செல்லுமொரு
காளையைப் பார்த்தேன் — அவன்
அழகு அழகு என்றான்
அங்கம் வியர்த்தேன்
தூண்போல் தோளுடை படை
வீரனை விண்டேன்... அவன்
துணிவாகக் கீர்த்தி யென்றான்
துனபங்கொண்டேன். (நா)

(5) தேசாபிமானிகளை
விண்ணப்பித்தேன் — அவர்
தேர்ந்த சுதந்திர மென்றார்
மிகநகைத்தேன்
தாசனைச்சென்று ஞானி
காலில் விழுந்தேன் — மிக
தாமதித்து நீதி யென்றார்
மனங்குழைந்தேன் (நா)

(6) முனிவர் பெருமானை
வணங்கி நின்றேன் — அவர்
முக்தி யென்றுரைக்க
முகம்வாடிச் சென்றேன்

இனி பதிலுரைப்பவ
 ரிங்கில்லை யென்றே—என்
இருதயம் வருத்தமா
 யுரைத்ததன்றே. (நா)

(7) ஒன்றுந் தோன்றாது
 கடலோரந்தனிலே—வாடி
உண்மையைச் சிந்தித்
 திருக்கும் வேளையினிலே
என்று மிலானந்தத்துட
 னுள்ளத்தினின்றே—சப்தம்
எழுந்தது அன்பு அன்பு
 அன்பு தானென்றே. (நா)

(8) எழுந்தேன் தொழுதேன் மிக
 துள்ளி குதித்தேன்—அன்பு
என்றெழுதி தெய்வமென
 வாழ்த்தித் துதித்தேன்
பொழிந்தே னானந்த கண்ணீ
 ரெனை மறந்தே—அன்பால்
போற்றுங்க ளெவ்வுயிரையும்
 மேன்மை யறிந்தே.

என்று அடியவள் மனதில் தோன்றிய மேன்மைப் பொருளாகிய அன்பேயாம் மேலும்.

உலகில் தோன்றிய எல்லா மதத் தலைவர்களும், எல்லா ஞானிகளும் "எவ்வுயிரிடத்தும் அன்பாயிரு" என அன்பையே மேன்மையாகப் போதித்துள்ளார்கள். எனதாருயிர்க் காதலரும் "அன்பை" நிலைநாட்

டவே அன்பற்றவர்களால் பட்டபாடும் அவ்வுண்மை அன்பே அவருக்குறு துணையாய் நின்று அவரைப் பெரும் புகழுக்காளாக்கியதும் யாவரும் அறிந்த விஷயங்களாம். பலியால் தன் இன்னுயிரை யீத்தத் திக்கற்ற ஆட்டினிடம் எனது காதலர் காட்டிய "அன்பு காட்சி என்றும் இக்கிராமத்தில் நிலவவேண்டி அவ்வாலயத்திலுள்ள துர்க்கிச்சிலையை யெடுத்தெறிந்து விட்டு "அன்பு" என்ற வார்த்தையைப் பொறித்து அதனையே தெய்வமெனத் தொழுது அவ்வாலயத்தை அன்பாலய மெனப் போற்றி யாவரும் சமமாக சென்று வணங்கி மகிழ அடியவள் மனம் விழைக்கின்றமையால் அடியவளின் கோரிக்கையை நிறைவேற்றும்படி இக்கிராமத்திலுள்ள பெரியோர்கள் யாவரையும் வேண்டுகின்றேன்.

ஜனங்கள்—புனிதவதி! உன்னுடைய விருப்பத்திற்குமாறாக நடப்பவர்கள் யாராகிலும் உண்டா? நினது இஷ்டார்த்தைப் பூர்த்திசெய்ய நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

பிறகு எல்லோரும் சந்தோஷமாக அவரவர்கள் வீட்டிற்குத் திரும்புதல். மறுநாள் புதியதாக அன்பு என்ற சிலையை வைத்துத் தெய்வமாகத் தொழுது பாலசுந்தரத்திற்கும் பார்வதிக்கும் சிறப்பாகத் திருமண மியற்றிக் கொண்டாடினார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உயர்ந்த நோய் சம்ஹாரி.

ஜாமா : : ஆயில்

ஜாமா ஆயில் தீர்க்கும் நோய்கள் சொல்லிமுடியாது. கக்குவாய், நரம்புநோய், பல்வலி, காதுவலி, சுளுக்கு, மாறில் சீதளம், ஜலதோஷம், தொண்டைநோய், மாந்த சன்னி, ஈளை, இருமல், காயம், முதுகுவலி, இடுப்புவலி, பக்கவலி, சத்திவாத ரோகம், விஷச்சளி, கணுக்கால் வீக்கம், சுட்டகாயம், கத்திகாயம், சிரங்கு முதலிய எவ்விதமான நோய்களும் ஜாமா ஆயில் பட்டதும் நீங்கிவிடும்.

இதோ மருந்து இருக்கின்றது.
எங்கள் கியாதிபெற்ற "ஜாமா ஆயில்"

"ஜாமா ஆயில்" காலரா, பிளேக் முதலிய கெட்ட வியாதிகளை நீக்கும். கொசு, மூட்டைப்பூச்சி, முதலிய பூச்சிகளை நாசம் செய்யும். இரண்டு அல்லது மூன்று சொட்டுகள் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் அல்லது சர்க்கரையில் உட்கொண்டால் பேதியும் வயிற்றுவலியும் நீங்கும். சில துளிகளை பஞ்சில் நனைத்து பல் இடுக்கில் வைத்தால் பல்வலி நீங்கும். பல்லீரின்மேல் குணத்துடன் தடவலாம்

"ஜாயா ஆயில்" உபயோகித்தால் வியாதி உடனே நீங்கும். இது நிச்சயம். விலை அணா 6 தான் ஆனால் போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். லக்ஷிமி டிரேட் மார்க்கு ஜாமா ஆயில் பார்த்துவாங்குங்கள். எங்கும் கிடைக்கும்.

ஜாமா டிபோ,

நெ. 95, நைனியப்ப நாயக்கன் வீதி,

பார்கடவுன், மதராஸ்.

Taste the floware **Prove the Quality**

ஆரோக்கியத்திர்க்கு சிறந்தது.

ஹீராலால் அண்டு கம்பனி, யாரின் தேசமெங்கும்

புகழ் வாய்ந்த

மிஸ்க்கீ சிங்கம் மார்க்கு

மன சந்தோஷிக்க சித்தி வாய்ந்தது.

மகத்தான வியாதியை அடையும் படிசெய் வது.

MISKY

Asafoetida with always satisfy you.

பெருங்காயம் ஒன்றே !

HIRALAL & CO.,

204, Govindappa Naick Street, G. T., Madras.

A FRIENDLY ADVICE

PLEASE SEE

MESSRS. PORWAL & BROS.,

WHOLESALE & RETAIL OPTICIONS.

CORPORATION BUILDING, ESPLANADE ROW,

MADRAS.



Before you go to purchase for you any kind of Optical Goods and its instruments, as they always have a large stock of best English Lenses and Frames in superior, durable and up-to-date fashionable designs.

CHARGES MODERATE.

இப்புத்தகத்தை அச்சிட

ஷேட் மோபஜீ சங்கர்லால்

ரூபா ஐந்து அன்புடன் அளித்தார்.

எமது புத்தகங்கள்.

புத்தவிஜயம்	0	4	0
கலியுகப் பிரகலாதன்	0	4	0
பொன்னுலக நாதனின் பூவுலகத் தொண்டர்கள்	0	1	0
மதிபெற்ற சிந்து	0	0	6
மாரியம்மன் திருவாய்மொழி	0	0	6
கிள்ளைவிடு தூது	0	0	6
ஜீவகாருண்ய கீதங்கள்	0	0	6
ஜீவகாருண்ய திறவுகோல்	0	0	3
அஹிம்ஸை	0	0	6
உயிர் வகைகள்	0	0	3